# உதயன்




30: பக்கங்கள் சுடர் 27 கதிர் 333 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 08 புதன்கிழமை (24/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00


## அறிக்கையை மறைக்கிறது ஐ.நா.

ஜெனிவா,ஒக் 24

இலங்கையில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்ட போரின்போது ஐ.நாவின் செயற்பாடுகள் தொடர்பாக, ஆராய நியமிக்கப்பட்ட ஒரு நபர் விசாரணைக் குழுவின் அறிக்கை, ஐ.நாவினால் மறைக்கப்பட்டு விட்டதாக இன்னர் சிற்றி பிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

இலங்கையில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்ட போரில் ஐ.நாவின் செயற்பாடுகள் குறித்து ஆராய எகிப்தைச் சேர்ந்த தொராயா ஒபெய்ட் என்ற உயர் அதிகாரியை ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் நியமித்திருந்தார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் இவருக்குப் பணி ஆணை வழங்கிய ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன், நான்கு மாதங்களில் விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்க உத்தர

பார்க்க பக்கம் 4

## நெளறு தீவு அகதிகளின் அவசரக் கோரிக்கை

கான்பரா,ஒக் 24

ஆஸ்திரேலிய அரசினால் நெளறு தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்களது அவலத்தைக் காண அங்கு நேரடியாக வரும்படி சர்வதேச ஊடங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

தங்களுக்கு அவசரமாக உதவுமாறு கோரி சுமார் 400 புகலிடக் கோரிக்கையாளர்கள் இந்த அழைப்பை விடுத்துள்ளனர்.

பார்க்க பக்கம் 4

# கே.பியின் விடுதலை சர்வதேச சட்ட மீறல்

கொழும்பு,ஒக் 24

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சர்வதேசக் குற்றவாளியாகக் கூறப்படும் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனுக்கு நாட்டில் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு இடம் வழங்கியமையானது சர்வதேசச் சட்டத்தை மீறும் செயல்.ஆயிரக்கணக்கான எமது இராணுவத்தினரைக் கொல்ல ஆயுதம் வழங்கியவரை எந்தவித குற்றச்சாட்டுக்களும் இன்றி விடுவித்திருப்பதானது எமது நாட்டின் சட்டம் மற்றும் சர்வதேசச் சட்டம் ஆகியவற்றை

பார்க்க பக்கம் 4

# கே.பி. தமிழரின் பிரதிநிதி அல்லர்

### சம்பந்தன் எதிர்ப்பு

கொழும்பு, ஒக்.24

தேசிய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதற்கான பேச்சைத் தொடங்குவதற்காக அரசின் சாதகமான சமிக்ஞையை எதிர்பார்த்திருக்கிறேன். விடுதலைப் புலிகளின் முன்னாள் ஆயுதக் கொள்வனவாளரான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனின் அனுசரணை

பார்க்க பக்கம் 4

# கே.பியா? டக்ளஸா? அரசுக்குள் இழுபறி

### வடமாகாணசபைத் தேர்தல் விடயத்தில் புதிதாகத் தோன்றியிருக்கிறது



கொழும்பு, ஒக்ரோபர்24

வடமாகாணத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பது தொடர்பில் அரசுக்குள் பனிப்போர் ஏற்பட்டுள்ளதாக மிகவும் நம்பகரமாக அறியமுடிகின்றது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச ஆலோசகர் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பியை வடமாகாணத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கவேண்டுமென அரசின் முக்கியமான சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேசமயம், ஈ.பி.டி.பி. தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை முதலமைச்சர் வேட்

பார்க்க பக்கம் 4



**8** இந்தியாவுக்கான பிரிட்டன் தூதர் ஜேம்ஸ் பெவன் குஜராத் முதல்வர் நரேந்திரமோடியை நேற்றுச் சந்தித்து பேசியதன் மூலம் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் குஜராத்துடனான தனது உறவை பிரிட்டன் புதுப்பித்துக் கொண்டுள்ளது. ▷

**9** வடகொரியாவில் இருந்து சென்று தென்கொரிய எல்லைப் பகுதியில் வசிக்கும் மக்கள், எங்களுக்கு எதிராக பலூன்களைப் பறக்கவிட்டு போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளனர். ▷

**10** பூமியைத் தாக்கி மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விண்கற்களை அழிப்பதற்காக விண் ரொக்கெட்டுகளைத் தயாரிக்க உள்ளதாக ரஷ்யாவின் பிரதான ரொக்கெட் மற்றும் விண்வெளி ஆய்வு அமைப்பு திட்டமிட்டுள்ளது. ▷

**17** டெங்கு நோய் பரவுவதை தடுப்பதற்காக அனைத்து அரச நிறுவனங்களிலும் சுகாதாரக் குழுக்களை அமைக்குமாறு அரசு ஆலோசனை வழங்கியுள்ளது. ▷

## சரியான தருணத்தில் கவனிக்கும் இந்தியா

### 13 ஒழிப்பு கோஷத்தால் இருநாட்டு உறவில் நெருக்கடி

கொழும்பு, ஒக்.24

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனவுக்கும் இடையில் 1987 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்

பார்க்க பக்கம் 4

## அரசில் சிலருக்கு ‘13’இல் ஒவ்வாமை

### கிண்டலடிக்கிறார் தயாசிறி

கொழும்பு, ஒக்.24

‘13’ என்பது அரசிலுள்ள சிலருக்கு ஒவ்வாமையாகவுள்ளது. ‘‘இதோ பாருங்கள் ‘13’ குறித்துப் பேசும் போதே அமைச்சர் விமல் தனது

பார்க்க பக்கம் 4

## திருப்பி அனுப்பினால் வதைக்கப்படுவோம்

### தமிழ் அகதிகள் லண்டன் நீதிமன்றில் மனு

லண்டன், ஒக்.24

பிரிட்டனிலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவிருக்கும் பல இலங்கைத் தமிழ் அகதிகள் தம்மை திருப்பி அனுப்பினால் இலங்கையில் தாம் சித்திரவதைக்குள்ளாக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் தாம் நாடு

பார்க்க பக்கம் 4

## காணிகள் படைகளிடம் நடுத்தெருவில் மக்கள்

### அம்பலவன்பொக்கணையில் அவலம்

முல்லைத்தீவு,ஒக்.24

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட அம்பலவன் பொக்கணை கிராம அலுவலர் பிரிவில் 10 ஏக்கர் வரையிலான பொது மக்கள் காணியை இராணுவத்தினர்

பார்க்க பக்கம் 4

## ‘13’ ஐ ஒழிக்க மஹிந்தவுக்கு அழுத்தம்

கொழும்பு,ஒக் 24

நாடாளுமன்றத்தில் உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை ஒழிப்

பார்க்க பக்கம் 4

## வடக்கு-கிழக்கில் கல்வி அபிவிருத்திக்கு கே.பியின் நிதியையாவது அரசு வழங்குமா?

### சபையில் கேட்டார் ஐ.தே.கட்சி எம்.பி. காரியவாசம்

கொழும்பு,ஒக்.24

புலிகள் அமைப்பின் சர்வதேச ஏற்பாட்டாளரான கே.பி எனப்படும் குமரன் பத்மநாதனால் உலக நாடுகளில் திரட்டப்பட்ட நிதியைக் கொண்டாவது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

இப்படி ஒரு கேள்வியை எழுப்பி சபையில் பரபரப்பை ஏற்படுத்தினார் ஐக்கிய தேசி

பார்க்க பக்கம் 4


திவிநெகும நான்காவது கட்டத்தின் கீழ் இலங்கையின் சகல இல்லங்களுக்கும் வசதிசெய்பவர்களால் வழங்கப்பட்ட விதைகள் மற்றும் செடிகளைப் பயிரிட்டு
உங்களது வீட்டுத் தோட்டத்திலிருந்து சுவையான, போசாக்குமிக்க புதிய மரக்கறிகளை உணவுவேளையில் சேர்த்துக் கொள்வோம்

2012/2013 மாதாந்த போகத்தில் விதைகள் மற்றும் பயிர்களைப் பயிரிடும் நாடளாவிய தேசிய நிகழ்ச்சி



நாளை

ஒக்டோபர் 25ம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.11 மணிக்கமைந்த சுப முகூர்த்தத்தில் வட திசையை நோக்கி விதைகள் மற்றும் செடிகளைப் பயிரிட்டு உங்கள் வீட்டுத் தோட்டத்திலும் வளமான அறுவடையினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

திவிநெகும
வாழ்வு எழுச்சி
நிறைவான இல்லம் - வளமான தாயகம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 12 அடிக் கிணறு பற்றியே பேசினேன் '13' குறித்து வாயே திறக்கவில்லை

## எழும்பிய விமலை அடித்து இருத்தினார் தயாசிறி

யாழ்ப்பாணம், ஒக். 24

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக சமூகத்தினருக்கு வீடமைப்பதற்காக 2011ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 1000 மில்லியனில் 447 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. 553 மில்லியனும் என்ன ஆனது? அதை ஏப்பம் விட்டுவிட்டீர்களா?

கட்டட நிர்மாண வீடமைப்புத் துறை அமைச்சர் விமல் வீரவன்சவிடம் இப்படியான ஒரு கேள்வியைக் கேட்டு அமைச்சரை நிலைதடுமாறச் செய்துவிட்டார் அம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான சஜித் பிரேமதாஸ.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் 1 மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

**நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள சட்டவரைவுகளுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுக்கள்**

சபையின் ஆரம்ப நிகழ்வாக சபாநாயகரின் மூன்று அபிவிருத்திகளை பிரதி சபாநாயகர் சபையில் தெரிவித்தார்.

* 'திவிநெகும' சட்டவரைவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ஏற்கனவே மூன்று மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இப்பொழுதும் மேலும் 8 மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

* குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை. இதனை ஆட்சேபித்து இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

* நிதி ஒதுக்கீட்டில் சட்டமூலம். இதனை ஆட்சேபித்து மூன்று மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்களின் பிரதிகள் சபாநாயகருக்கும் கிடைத்துள்ளன.

இவ்விடயங்களை பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி சபையில் தெரிவித்தார்.

தொடர்ந்து வாய்மூல விடைக்கான கேள்விகள் எழுப்பப்பட்டன. '

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் நேற்று 15 வினாக்கள் இடம்பெற்றிருந்தன. எனினும் ஒரு சில கேள்விகளுக்கு மட்டுமே விடையளிக்கப்பட்டன. பெரும்பாலான வினாக்களுக்கு விடையளிக்க கால அவகாசம் கோரப்பட்டது.

**'13 பிளஸ்' என்றாலே விமல்வீரவன்சவுக்கு 'அலர்ஜி'**

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சரிடம் 'மாறோ' பிரதேச மக்களின் குடிதண்ணீர் திட்டம் 2005ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட, மேலும் இன்றுவரை மக்களுக்குத் தேவையான குடிதண்ணீர் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக அமைச்சரிடம் விளக்கம் கேட்டார் தயாசிறி.

இக் குடிதண்ணீர் திட்டம் பல லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பொழுது 100 குடும்பங்கள் நீர் பெறுகின்றனர் என்றார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

**நூறு குடும்பங்களுக்கு நீர் வழங்க 7 வருடங்களா?**

அமைச்சரின் கூற்றுப்படி நூறு குடும்பங்களுக்கு நீர் வழங்க ஏழு வருடங்கள் கடந்துள்ளன. அப்படியானால் 'மாறோ' பிரதேசத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் நீர் வழங்க 70 வருடங்கள் பிடிக்குமா?

அரசும் நீரை வழங்காது மக்கள் தாமாகவே கிணறுகளை வெட்டி நீரைப் பெற முயற்சித்தால் அதற்கும் வரி அறவிடப் போகின்றனர். இது மக்களை மேலும் கஷ்டத்தில் போடும் நடவடிக்கை இல்லையா? என்று இடைமறித்தார் தயாசிறி.

**தண்ணீர் வரியா? அப்படி ஒன்றும் இல்லை.**

இல்லையில்லை. கிணறு வெட்டுவதற்கும், கிணற்று நீருக்கும் வரி அறவிடும் நோக்கம் அரசுக்கு இல்லை. 12 அடி ஆளக் கிணறு வெட்டுவதற்கு அரசு வரி அறவிடப் போவதாக யாரோ ஒரு அதிகாரி கூறியதை அரசின் திட்டம் என்று கூறிவிடக்கூடாது. பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் கூறுகின்றேன். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கிணறுகளை வெட்டுவதற்கோ, கிணற்று நீரைப் பெறுவதற்கோ வரி அறவிடப் படமாட்டாது என்பதை உறுதியாகக் கூறுகிறேன் என்றார் தினேஷ் குணவர்த்தன.

இந்த சந்தர்ப்பத்தில் வீடமைப்பு நிர்மாணத்துறைகள் அமைச்சர் விமல் வீரவன்ச இடையில் எதையோ கூற எழும்பினார். அப்போது இடைமறித்த தயாசிறி,

இந்த அமைச்சருக்கு '13பிளஸ்' என்றாலே ஒரு 'அலர்ஜி' நாம் 12 அடிக் கிணறுகள் தொடர்பாகத்தான் பேசுகின்றோம். '13 பிளஸ்' தொடர்பாகப் பேசவில்லை. உங்களுக்கு '13' என்றாலே 'அலர்ஜி' என்று கூறி மடக்கினார். அமைச்சர் விமல் வீரவன்ச எதுவும் பேசாமலே அமர்ந்து விட்டார்.

**போர் வெற்றியின் பின் வடக்கு - கிழக்கு கல்வி அபிவிருத்தி**

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான அகிலவிராஜ் காரியவாசம் கல்வி அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பி திக்குமுக்காடச் செய்துவிட்டார்.

முன்பு புலிகளின் சர்வதேச ஏற்பாட்டாளராகவும் பணம், பொருள், ஆயுதம் உட்பட பல விடயங்களுக்குப் பொறுப்பாகவும் இருந்தவர் கே.பி. புலிகளுக்காக வசூலிக்கப்பட்ட பல கோடி ரூபாவும் பெறப்பட்ட தங்கமும் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன.

இப்பொழுது கே.பி. அரசின் அமைச்சர்களினும் கூட்டாளியாகிவிட்டார். இவரிடம் இருக்கும் பணத்தைக் கொண்டாவது போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி நடவடிக்




கைகளை மேற்கொள்ளலாம் அல்லவா? என்றார் அகிலவிராஜ்காரியவாசம்.

இதற்குப் பதிலளித்த பிரதிக் கல்விஅமைச்சர் விஜிதமுனி சொய்ஸா, நேரடியாக எந்தப் பதிலையும் கூறாமல் மழுப்பிவிட்டார்.

**பல்கலைக்கழக சமூகத்தின் வீடமைப்பு எப்போது பூர்த்தியாகும்.**

மஹிந்த சிந்தனையில் பல்கலைக்கழக சமூகத்தினருக்கு வீடுகளை வழங்கும் வகையில் பல்கலைக்கழக வளவில் வீடுகள் அமைக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் அப்படியான ஒரு வீடமைப்புத் திட்டம் இருப்பதாகவே தெரியவில்லை என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ.

உறுப்பினர் கூறுவது தவறு, வருடாவருடம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2011ஆம் ஆண்டில் 1000மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் அமைச்சர் விமல் வீரவன்ச.

**தடியைக் கொடுத்து அடிவாங்கிக் கொண்டார் அமைச்சர்**

இந்த விவரங்களை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சஜித் பிரேமதாஸ, அமைச்சர் கூறுகின்றார் 2011ஆம் ஆண்டில் 1000 மில்லியன் ஒதுக்கப்பட்டது. அதில் 447 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது என்று. அப்படியானால் 553 மில்லியன் என்னவானது? திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டதா? அல்லது ஏப்பம் விடப்பட்டுள்ளதா? என்று மடக்கினார்.

இதற்கு நேரடியாகப் பதிலளிக்க முடியாமல் தடுமாறிய அமைச்சர் விமல் வீரவன்ஸ, பல்கலைக்கழகங்களின் தேவைக்கேற்ப நிதி வழங்கப்படுகிறது. மேல் விவரங்களை அவர்களிடமே தெரிந்துகொள்ளவேண்டும் என ஏனோதானோ என்று பதிலளித்தார்.

**காடுகளில் சனநடமாட்டம் இல்லாதது போல் சபையிலும்**

கேள்விநேரத்தின்பின் வனவிலங்கினப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத் திருத்தம் தொடர்பான விவாதம் ஆரம்பமானது. காடுகளில் சனநடமாட்டம் இல்லாது காணப்படுவதுபோல் விலங்குகள் பாதுகாப்பு தொடர்பாக விவாதிக்கப்படும் போதும் சபையில் 90 வீதமான கதிரைகள் காலியாகக் காணப்பட்டன.

சட்ட வரைபை முன்னாள் அமைச்சரும் இன்று பிரதி அமைமச்சராக இருக்கும் எஸ்.எம். சந்திரசேன சபையில் சமர்ப்பித்தார்.

**காட்டு யானைகளை விட வீட்டு யானைகளினாலேயே ஆபத்து**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் ஒரு முக்கியமான விடயத்தை முன்வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன.

புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பிரதேசங்களில் தென்பகுதியிலிருந்து பெருமளவிலான வளர்ப்பு யானைகள் கொண்டு வந்து விடப்பட்டுள்ளன.

இந்த வீட்டுயானைகள் எமது மக்களின் வீடுகளை உடைத்து உயிராபத்துக்களை ஏற்படுத்தியுள்ளன. விவசாயப் பயிர்களையும் சேதப்படுத்தியுள்ளன. இப்பிரதேசத்தில் காட்டுயானைகளைவிட வீட்டுயானைகளினாலேயே ஆபத்து அதிகம். இதனைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தினார் வினோ.

ஆனால் அரச தரப்பிடம் இருந்து எந்தவிதமான பதிலும் இல்லை. நாடாளுமன்றம் மீண்டும் நாளை கூடும்.

(த-2)

## 2012 வாக்காளர் இடாப்பு டிசெம்பரில் வெளியீடு

கொழும்பு,ஒக் 24

2012ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன் வெளியிடப்படும் எனத் தேர்தல்கள்செயலகம்தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் ஒவ்வொரு வருடத்துக்குமான வாக்காளர் இடாப்பு புதிய வருடத்தின் மே மாதத்திலேயே வெளியிடப்பட்டு வந்ததாகவும் இம்முறை உரிய வருடத்திற்குள்ளேயே வெளியிடப்படும் எனவும் செயலகம் அறிவித்துள்ளது.

2012 வாக்காளர் இடாப்பு தயாரிப்புக்கான முதல் கட்டப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாகவும் இது குறித்து ஏதாவது மேன்முறையீடு செய்வதாக இருந்தால் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் முறையிட முடியும் எனவும் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு வாக்காளர் அட்டையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட, சேர்த்துக் கொள்ளப்படாத பெயர் விவரங்கள் ஒக்ரோபர் 4ஆம் திகதி தொடக்கம் கிராம சேவகர் அலுவலகம், பிரதேச செயலகம், தபால் அலுவலகம், மாவட்ட செயலாளர் அலுவலகம் என்பவற்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அதனைப் பார்வையிட்டு மேன்முறையீடுகள் இருப்பின் 31ஆம் திகதிக்கு முன்னர் முன்வைக்குமாறு தேர்தல்கள் செயலகம் கோரியுள்ளது.

நவம்பர் மாதத்தில் அந்த மேன்முறையீடுகளைப் பரிசீலித்து டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் 2012 வாக்காளர் இடாப்பை வெளியிட திட்டமிட்டுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

(த)

## 3 முன்னாள் புலிகளின் கைகளில் துப்பாக்கிகள்

### வழங்கினார் அமைச்சர்

கொழும்பு,ஒக் 24

புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் இலங்கையின் தேசிய குறிபார்த்துச் சுடும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.இவர்களுக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, அண்மையில் குறிபார்த்துச் சுடும் துப்பாக்கிகளை வழங்கியுள்ளார்.

இலங்கைப் படையினரின் புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளில் 135 பேர் தடகளப் பயற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

இவர்களில் மூவர் இலங்கையின் குறிபார்த்துச் சுடும் தேசிய அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கனகசுந்தரம் ரஜீவ்ன், தயாபரன் தவேந்திரன், செல்லமுத்து சுரேஸ்குமார் ஆகியோரே இலங்கையின் தேசிய அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வெலிசறைக் கடற்படைத்தளத்தில் குறிபார்த்துச் சுடுவதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் மூவரும் அடுத்த ஆண்டு புதுடில்லியில் நடைபெறும் தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் பங்கு [illegible] அமைச்சு தெரிவித்துள்ளது.

(த)

## கிணறுகளுக்கு வரி இறுதி முடிவு இல்லை

கொழும்பு,ஒக்.24

புதிதாக வெட்டப்படும் கிணறுகளுக்கு வரி அறவிடுவது தொடர்பில் அரசு இன்னும் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லையென நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பியிருந்த இடையிட்டு கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

புதிதாக வெட்டப்படும் கிணறுகளுக்கு வரி அறவிடுவது தொடர்பில் இடையிட்டு கேள்வியை எழுப்பியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி, நாட்டில் கிணறு வெட்டுவதற்கு உள்ள உரிமையையும் அரசு பறித்தெடுக்க முயல்கின்றதா என்றும் வினா தொடுத்தார்.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, கிணறு வெட்டுவதற்கு வரி அறவிடுவது தொடர்பில் எனது அமைச்சே அல்லது அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் அமைச்சோ எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. இது குறித்து அரசிடமும் எந்தவொரு திட்டமும் இல்லை, அத்துடன் இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கவும் இல்லை என்று குறிப்பிட்டார்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்களின் மன அழுத்தம் தொடர்பான கலந்துரையாடல்

அக்கராயன், ஒக்.24

அரச ஊழியர்களின் மன அழுத்தத்தை முகாமை செய்தல் என்னும் தலைப்பிலான கருத்தரங்கொன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கு அண்மையில் கிளிநொச்சி அரச செயலகத்தில் தலைமைப் பீட உதவி அரச அதிபரான ப.ஜெயராணி தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி அரச செயலகத்தின் உளவளப் பிரிவின் பொறுப்பதிகாரி துஸ்யந்தனின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் முதன்மை வளவாளராக கிளிநொச்சி பொது மருத்துவமனையின் உளநல மருத்துவர் மா.ஜெயராஜா கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார். அவருடன் உளநல மருத்துவரும், சமூகப் பணியாளருமான ரி.இராஜேந்திராவும் கலந்து கொண்டார்.

இந்தக் கருத்தரங்கில் அரச செயலகம், பிரதேச செயலகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியனவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுடன் உளநலப் பிரிவிலுள்ள களப் பணியாளர்களும் கலந்து கொண்டனர். அரச ஊழியர்களுக்கு வேலைப்பளு காரணமாக மன அழுத்தம் ஏற்படும் நிலையில் அதனை எவ்வாறு முகாமை செய்து பெறுபேறுகளை அதிகரிக்கச் செய்தல் தொடர்பாகவும், வேலைப்பளுவை எவ்வாறு குறைப்பது தொடர்பாகவும் ஒரு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் இந்தக் கருத்தரங்கு அமைந்திருந்தது.

இந்தக் கருத்தரங்கில் கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசனும் கலந்து கொண்டார். (க-18)

## பழைய இரும்புக்கு 21 வாகன எஞ்ஜின்கள்

# முல்லைத்தீவில் இருந்து தென்பகுதிக்கு சென்ற இரண்டு லொறிகள் ஓமந்தையில் சிக்கின

முல்லைத்தீவு, ஒக்.24

முல்லைத்தீவிலிருந்து தென்பகுதிக்கு இரண்டு லொறிகளில் கொண்டு செல்லப்பட்ட இரும்புகளுக்குள் வாகன எஞ்ஜின்கள் 21 ஐ ஓமந்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் அத்துடன் வாகனச் சாரதிகளும், உதவியாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவிலிருந்து கொழும்புக்கு எடுத்து செல்லப்பட்ட இரும்புகளுக்குள் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்த வேளை ஓமந்தை சோதனைச்சாவடியில் லொறிகள் சோதனையிடப்பட்ட போது இவை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இதில் பஸ்கள், லொறிகளது 21 எஞ்ஜின்கள் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் அவசர அழைப்பு எண் 119 க்குக் கிடைத்திருந்த தகவலையடுத்து இரண்டு லொறிகளையும் சோதனையிடப்பட்ட போதே இந்த எஞ்ஜின்களை கைப்பற்றி விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போர் நடவடிக்கை காரணமாகச் சிதைவுற்றுப் போன வாகனங்களின் இரும்புப் பாகங்களை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் எடுத்துச் செல்ல வாய்ப்புள்ள போதிலும் வாகனங்களின் எஞ்ஜின்கள் எடுத்துச் செல்லப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வாவின் விசேட பணிப்பின் பேரில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு, முள்ளியவளை, வலைஞர்மடம், புதுமாத்தளன் பகுதிகளில் இருந்து தினமும் 200 க்கும் மேற்பட்ட - லொறிகளில் பழைய இரும்புகள் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

குறிப்பாக மக்கள் அனுமதிக்கப்படாத பகுதிகளுக்குள் இருந்தே இந்த பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படையினரின் உதவியுடன் வரும் வியாபாரிகள். அந்தப் பகுதிகளில் காணப்படும் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், வாகன இயந்திரங்கள், பாகங்கள் என எல்லாவற்றையும் லொறிகளில் ஏற்றிச் செல்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ஜ-22-400)

**முல்லைத்தீவு, முள்ளியவளை, வலைஞர் மடம், புதுமாத்தளன் பகுதிகளில் இருந்து தினமும் 200க்கும் மேற்பட்ட – லொறிகளில் பழைய இரும்புகள் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன**

## இன்னும் எத்தனை காலம்...?



புதுக்குடியிருப்பு பிரதேசசபை அலுவலகக் கட்டடங்கள் இன்னமும் போரின் வடுக்களைத் தாங்கிய வண்ணம் காணப்படுகின்றன. (க-400)

## கட்டட வேலைகள் பூர்த்தி

துணுக்காய், ஒக்.24

துணுக்காய் பிரதேச சபைக்கான புதிய கட்டட வேலைகள் முடிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. தற்போது துணுக்காய் பிரதேச சபையின் அலுவலகம் தனியார் வீட்டில் வாடகை செலுத்தி இயங்கி வருகின்றது.

தற்போது என்றிப் திட்டத்தின் நிதியுதவியுடன் பிரதேச சபைக்கான புதிய கட்டடவேலைகள் பூர்த்தியாகிய நிலையில் உள்ளன.

மிகவிரைவாக இதனைத் திறந்து வைப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பிரதேச சபையினர் அனுமதி கோரியுள்ளனர்.

(க-415)

## பளை மத்திய கல்லூரிக்கு கல்விப் பணிப்பாளர் புகழாரம்

அக்கராயன், ஒக்.24

பளை மத்திய கல்லூரிக்கு கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் புகழாரம் சூட்டியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற பளை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தப் புகழாரத்தைச் சூட்டினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:-


கிளிநொச்சி கல்வி வலயத்தில் கல்வித்துறையில் பெரும் சாதனைகளை நிலைநாட்டக் கூடிய பாடசாலைகளில் பளை மத்திய கல்லூரியும் ஒன்றாகும்.

கணித, விஞ்ஞான பிரிவுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறக்கூடிய மாணவர்களை இந்தக் கல்லூரியில் இருந்தே நாம் அதிகம் எதிர்பார்க்கிறோம். வறுமையை எதிர்கொண்டுள்ள மாணவர்களில் மாற்றங்களை உருவாக்க கூடியது கல்வியாகும். இந்தக் கல்வியூடாக மாணவர்கள் சாதனைகளை நிலை நாட்டி வரலாற்றில் பெரும் பதிவுகளை உருவாக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பளை மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரும், ஓய்வு பெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் சிறந்த பேச்சாளரும் கூட்டுறவுத் துறைக்கும், கல்வித்துறைக்கும், இடர் காலத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் ஆசிரியர்களின் நலனுக்காகவும் உழைத்தவருமாகிய ப.அரியரத்தினத்துக்கு கிளி நொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

## வீதிக்குக் குறுக்கான கிடங்கினால் கொத்தம்பியார் குளத்தில் சிரமங்கள்



துணுக்காய், ஒக்.24

துணுக்காய் கொத்தம்பியார் குளம் கிராமத்துக்கு செல்லும் பிரதான வீதிக்குக் குறுக்காக பெரியதொரு கிடங்கு காணப்படுவதால் மழை நீர் தேங்கி நின்று போக்குவரத்துச் சிரமங்களை ஏற்படுத்துகின்றது.

மேற்படி துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொத்தம்பியார் குளம் கிராமத்துக்கு செல்லும் பிரதான வீதியில் நீர் வடிகால் சபையின் ஏற்பாட்டில் நீர் விநியோகத்துக்காக குழாய் பொருத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு நீர்க் குழாய்களைப் பொருத்திய இடத்திலேயே இந்தக் கிடங்கு காணப்படுகின்றது.

இந்த வீதியூடாகவே பொன்னகர் நட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளுக்கு இலகுவாகச் செல்ல முடியும்.

கொத்தம்பியார் குளத்தில் வசிக்கும் சுமார் 35 குடும்பங்கள் வீதியில் ஏற்பட்டுள்ள கிடங்கினால் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

(க-415)

### முல்லையில் முன்னோடி விவசாயிகளுக்கு

## புதிய இன மாங்கன்றுகள் விநியோகம்

முல்லைத்தீவு, ஒக்.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிய இனமாங்கன்றுகள் முன்னோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, துணுக்காய், ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் 320 பேருக்கு விவசாயப் பகுதியினரால் இந்த மாங்கன்றுகள் வழங்கப்பட்டதாக விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரான தெ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மேலும் இந்த வகை மாங்கன்றுகள் இந்தப் பகுதிகளில் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில், இரண்டரை வருடங்களில் காய்க்கக் கூடிய தென்னங்கன்றுகள் விவசாயப் பகுதியினரால் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

போரினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் இடப்பெயர்வின் பின்னர் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட பயன்தரு மரங்கள் யாவும் அழிந்துள்ளன.

இதனால் இத்தகைய மரக்கன்றுகளை விநியோகிப்பதன் மூலமாக அந்த அழிவுகளை ஈடுசெய்யலாமென இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(க-500)

## வெங்கலச்செட்டி குளத்தில் சிறுவர், முதியோர் தினவிழா

வவுனியா,ஒக்.24

வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா நாளைய தினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் காலை 9 மணியளவில் பிரதேச செயலர் கமலதாசன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

முதன்மை விருந்தினராக வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர கலந்து கொள்வார். சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் தேசிய திட்ட இணைப்பாளர் சு.சிவப்பிரகாசம் கௌரவ விருந்தினராகவும், செட்டிகுளம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ம.நித்தியானந்தம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

வரவேற்பு நடனத்தை செட்டிகுளம் மகாவித்தியாலய மாணவிகள் வழங்க, வரவேற்புரையை உதவிப் பிரதேச செயலர் வே.ஆயகுலன் நிகழ்த்துவார்.

இந்த விழாவில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும், முதியோர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. மேலும் சிறுவர், முதியோரின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் செட்டிகுளம் கோட்ட மட்டப் பாடசாலை மாணவரிடையே நடைபெற்ற கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்ற 54 மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(க-400)

## மன்னாரிலும் மிதிவெடி அபாயம் தொடர்பான நூல் வெளியீடு

மன்னார்,ஒக்.24

மிதிவெடி அபாயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பாடநூல்களை விநியோகிக்கும் நிகழ்வு மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

யுனிசெப் அமைப்பின் நிதி அனுசரணையுடன் [illegible] இணைந்து மிதிவெடி அபாயக் கல்வி [illegible] உருவாக்கிய பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல் விநியோகித்தல் நிகழ்வே கடந்த 16 ஆம் திகதி மன்னார் வலயக் கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கல்வி அமைச்சின் உயரதிகாரிகளும், யுனிசெப் நிறுவன அதிகாரிகளும் கலந்துகொண்டு இந்தப் பாடநூல்களை உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தனர்.

தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான வகுப்புகளுக்குரிய வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் பாடத்தின் பாதுகாப்புத் தேர்ச்சியில் இப்பாடப் பரப்பு உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கே.பியா?...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பாளராக ஆளுங்கட்சி நிறுத்த வேண்டுமென மற்றுமொரு சாரார் வலியுறுத்திவருகின்றனர்.

இந்த இருவரும் மாகாணசபைத் தேர்தலைக் குறிவைத்து காய்களை நகர்த்திவருவதால் ஆளுங்கட்சிக்குள் இது விடயத்தில் கடும் பனிப்போர் உருவாகியுள்ளது.

தேர்தல் களத்தில் இறங்கும் முதற்கட்ட வேலையாகவே கடந்த வாரம் முதல் கே.பி. மக்களுடன் நெருங்கும் நடவடிக்கைகளில் இறங்கிவருவதாக உயர்மட்ட அரச வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

கே.பி. எதுவித குற்றமுமற்றவரென அரசின் முக்கிய பிரமுகர்கள் தெரிவிக்க ஆரம்பித்துள்ளமையும் இதன் பின்னணியில்தான் என்று அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

## திருப்பி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு கோரியும் லண்டன்மேல் நீதிமன்றத்தில் கடைசி நேரத்தில் அவசரக் கோரிக்கை மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

விசேட விமானங்கள் மூலம் திருப்பி அனுப்பப்படவுள்ள இலங்கைத் தமிழ்ப் புகலிடக்கோரிக்கையாளர்களின் வழக்கறிஞர்கள் மேல் நீதிமன்ற நீதிவான்களிடம் இவர்கள் பற்றிய கோரிக்கைகள் அடங்கிய ஆவணங்களைக் கடைசி நேரத்தில் கையளித்துள்ளனர்.

கடந்த செப்ரெம்பரில் இவ்வாறான நாடுகடத்தும் சம்பவம் ஒன்றில் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் சித்திரவதை செய்யப்படுவார்கள் என்ற கருத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு சிலரின் நாடுகடத்தலைக் கடைசி நேரத்தில் தடுத்து நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ப-3)

## கே.பி.தமிழரின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யுடன் புலம்பெயந்தோருடன் அரசு பேசவுள்ளதை அறிந்து நான் ஆச்சரியமடைகின்றேன். அவர் தமிழ் மக்களின் பிரதிநிதி இல்லை.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

பேச்சை மீண்டும் தொடங்குவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிகழ்ச்சி நிரலை அரசு முன்வைக்குமாயின், பேச்சு மேசைக்கு வரவும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அங்கத்தவர்களை நியமிக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசவுள்ளதாக அரசு கூறுவது சர்வதேச சமுதாயத்தை ஏமாற்றும் தந்திரம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கே.பி. இலங்கையிலும் இந்தியாவிலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர். இவரை சர்வதேச பொலிஸார் தேடி வருகின்றனர். இவருக்கு இதற்கான அதிகாரமோ, தகுதியோ இல்லை. இவர் தமிழ் மக்களின் பிரதிநிதியும் இல்லை. தமிழ் புலம்பெயர்ந்தோருடன் பேச இவரை ஒரு கருவியாக அரசு பயன்படுத்துவதன் பின்னாலுள்ள நியாயம் எமக்கு விளங்கவில்லை - என்றார்.

## வடக்கு - கிழக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான அகில விராஜ் காரிய வாசம்.

நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது அகிலவிராஜ் காரிய வாசம் போர் முடிந்தபின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக கல்வி அமைச்சிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு கல்வி அமைச்சரின் சார்பில் பிரதி கல்வி அமைச்சர் விஜித முனிசொய்ஸா பதில்அளித்தார்.

அரச மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் மூலம் கிடைத்த நிதியின் மூலம் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் பெருமளவில் புனரமைக்கப்பட்டுள்ளன. கற்கை நடவடிக்கைகளும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

முகாம்களில் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு தைத்த சீருடைகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுவதுடன் மதிய உணவும் வழங்கப்படுகின்றது.

இதற்கும் மேலதிகமாக விளையாட்டு உபகரணங்களும், இசைக்கருவிகளும் கணினி இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன என்றார் பிரதி அமைச்சர்.

உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டு நிறுவனங்கள் உதவி வழங்கின என்று பிரதி அமைச்சர் கூறினார். அப்படியானால் குமரன் பத்மநாதனின் தொண்டு நிறுவனமும் நிதி வழங்கி உள்ளதா? என ஒரு இடைக் கேள்வியை எழுப்பினார் அகில விராஜ்.

இது பிரதி அமைச்சருக்கு சற்றுக் கடுப்பை ஏற்படுத்தி விட்டது. கடுப்பாகவே பதில் அளித்தார்.

உங்களுடைய கேள்விக்குப் பதில் அளித்துள்ளேன். பல இணைப்புகளையும் சமர்ப்பித்துள்ளேன். அதைப் பார்த்து கே.பி.யின் தொண்டு நிறுவனமா? அல்லது கே.பி.யின் சித்தப்பாவின் நிறுவனமா என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள் என்றார் பிரதிக் கல்வி அமைச்சர்.

பிரதி அமைச்சர் ஆத்திரப்படுவதில் அர்த்தம் இல்லை. குமரன் பத்மநாதன் புலிகள் அமைப்பின் சர்வதேச ஏற்பாட்டாளராக செயற்பட்டவர். உலக நாடுகளில் புலிகள் அமைப்புக்கு பல ஆயிரம் கோடி ரூபா திரட்டியவர். இப்பொழுது அரசின் கூட்டாளியாகிவிட்டார். இந்த நிலையில் அவரிடம் உள்ள பணத்தைக் கொண்டு பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் அல்லவா என்று மீண்டும் கேட்டார் காரியவாசம்.

இந்தப் பணம் எமக்கு கிடைத்து கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்த முடியுமானால் நாடும் மகிழ்ச்சி அடையும். ஆனால் அது பாதுகாப்பு அமைச்சுக்கு உட்பட்ட விடயம் என மழுப்பியடித்து விட்டார் பிரதி அமைச்சர். (த-2)

## கே.பியின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அரசு முழுமையாக மீறியுள்ளதையே காட்டுகிறது.

இவ்வாறு அரசைக் கடுமையாகச் சாடியுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

விடுதலைப்புலிகளிடம் உள்ள 20 கோடி ரூபா நிதி, கப்பல்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இவை அனைத்தையும் அரச உடமையாக்குவதே தமது நோக்கம் என கே.பி. கைது செய்யப்பட்ட வேளையில் அரசு கூறியது.

அப்படியானால் அந்த 20 கோடிரூபா நிதி எங்கே? எனவும் அது அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தாநாயக்க, கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

குமரன் பத்மநாதனுக்கு சுதந்திரம் வழங்கியமை எந்த அடிப்படையில் எனவும் அவர் அரசிடம் கேள்வி எழுப்பினார்.

கே.பி. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் கொலை வழக்கில் இந்திய நீதிமன்றத்தினால் சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒரு குற்றவாளியாகக் காணப்படுகின்றார்.

இவ்வாறான பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட ஒருவர் இலங்கையில் சுதந்திரமாக நடமாட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அரசே கூறுகிறது.

ஆயிரக்கணக்கான எமது இராணுவத்தினரைக் கொல்ல ஆயுதம் வழங்கியவரை எந்தவித குற்றச்சாட்டுக்களும் இன்றி விடுவித்திருப்பதானது எமது நாட்டின் சட்டம் மற்றும் சர்வதேசச் சட்டம் ஆகியவற்றை அரசு முழுமையாக மீறியுள்ளதையே காட்டுகிறது.

அது மட்டுமின்றி அவரைக் கைதுசெய்ய நடவடிக்கைகளை மேற்கொண்ட பாதுகாப்புப் படையினரையும் இது அவமதிக்கும் செயல்-என்றார். (த)

## அறிக்கையை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விட்டார். எனினும், அவர் விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை. தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் அந்தப் பணியை செய்ய முடியாதுள்ளதாக அறிவித்ததை அடுத்து, சாள்ஸ் பெற்றி என்ற அதிகாரி இந்தப் பணிக்கு நியமிக்கப்பட்டார்.

எனினும், குறிக்கப்பட்ட கால எல்லை கடந்து, 9 மாதங்களாகியும் இந்த அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை.

இது குறித்து ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் மார்ட்டின் நெஸர்க்கியிடம் கேட்டபோது,

தொராயா ஒபெய்ட்டினால் அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியவில்லை. இதனை அடுத்து மற்றொரு ஐ.நா. அதிகாரியான சாள்ஸ் பெற்றி இந்த விவகாரத்தைக் கையாள்கிறார். விரைவில் அது வெளியிடப்படும் என்று பதிலளித்தார்.

அதேவேளை, இந்த அறிக்கை இறுதி செய்யப்பட்டு விட்டதாக அறியப்படுவதாக இன்னர்சிற்றி பிரஸ் கூறியுள்ளது.

இன்னமும் இந்த அறிக்கை வெளியிடப்படாதுள்ள நிலையில், அது மறைக்கப்பட்டு விட்டதா என்று இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

இதற்கிடையே, இந்த அறிக்கையைத் தயார் செய்ய நியமிக்கப்பட்ட சாள்ஸ் பெற்றி ஐ.நாவின் விதிமுறைகளுக்கு முரணாக, ஒரே நேரத்தில் இரண்டு பணிகளை மேற்கொண்டதாகச் சர்ச்சைக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(த)

## காணிகள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தொடர்ந்தும் கையகப்படுத்தி வைத்திருப்பதனால் பத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேற முடியாது தவிக்கின்றன. மறுபுறத்தில் அவர்கள் சொந்தக் காணியில் இல்லை என்று காரணங்காட்டி அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை அரச அதிகாரிகள் மறுக்கின்றனர். மழை ஆரம்பித்துள்ளதால் இந்தக் குடும்பங்கள் கிட்டத்தட்ட நடுத்தெருவுக்கு வந்துள்ளன.

அம்பலவன் பொக்கணை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இந்தக் குடும்பங்கள் தற்போது பழைய மாத்தளனில் உறவினர் வீடுகளிலும் வெற்றுக் காணிகளிலும் தற்காலிகமாக தங்கியுள்ளன. மழை காலம் தொடங்கியுள்ளதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக இந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்

இவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்கள் முன் வந்தபோதும் சொந்தக் காணியில் மீள்குடியேற முடியாமையால் அந்த உதவிகள் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக தற்காலிக வீடுகளை இவர்கள் ஏற்கனவே இழந்துள்ளனர். இந்திய வீட்டுத்திட்ட உதவியும் இனிமேல் கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மக்கள் தமது காணிகளை ஒப்படைக்குமாறு கோரி பல தடவைகள் இராணுவத்தினருக்கு கடிதம் எழுதியும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

''மீண்டும் மீண்டும் இராணுவத்தினருக்கு அழுத்தம் கொடுத்த போதும் தாம் வேறு ஒரு இடத்தில் படை முகாம் அமைத்து வருவதாகவும் வெகு விரைவில் அந்த இடத்திலிருந்து விலகிச் செல்வதாகவும் தெரிவிக்கின்றனரே தவிர, இதுவரை அவர்கள் எமது பகுதிகளை விடுவிக்கவில்லை. தற்போது அந்தக் காணிகளுக்கான உறுதிகளை எங்களிடமிருந்து கோருகின்றனர்.'' என்று அந்த மக்கள் 'உதயனி'டம் தெரிவித்தனர்.

''ஓரிரண்டு காணிகளுக்கு மட்டுமே உறுதியுள்ளதாகவும் ஏனைய காணிகள் பரம்பரை காணிகளாக கைத்துண்டு மூலம் பரிமாறப்பட்டவை எனவும் தெரிவிக்கும் அந்த மக்கள், தமது முன்னோர்களால் தமக்கு சீதனமாக வழங்கப்பட்ட காணிகளே அவை எனவும் தெரிவிக்கின்றனர்.

சொந்த இடத்திலேயே தற்போது அகதிகளாக உள்ள [illegible] தொண்டு நிறுவனங்கள் வழங்கும் உதவிகளை பெற்றுக் கொள்ள வசதியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## '13' ஒழிக்க...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பதற்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்க, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் பல முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியும், ஜாதிக ஹெல உறுமயவுமே முதலில் 13ஆவது திருத்தத்துக்கு எதிரான பரப்புரைகளைத் தொடக்கி வைத்தன. தற்போது அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியும் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளது.

மாகாணசபைகள் பயனற்றவை. பொதுமக்களின் பணத்தை விரயம் செய்பவை. இப்போதாவது நாம் இதிலிருந்து விலக வேண்டும்.ஒரு நாட்டில் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகள் மிகவும் முக்கியமானவை. அவற்றை மத்திய அரசே கையாள வேண்டும் எனவும் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. (த)

## அரசில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆசனத்திலிருந்து எழுகின்றார் என்று குறிப்பிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர '13' பிளஸ் என்றால்தான் அமைச்சர் வாசு எதிர்ப்பை வெளியிடுவார் போலும் என்றும் கூறினார்.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் 1 மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திமல் வீரக்கொடி தலைமையில் கூடியது. இதன்போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் 'மாஹோ' நீர் வழங்கல் திட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

அந்தக் கேள்விக்கு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதிலளித்தார். பின்னர் இடைவிட்டுக் கேள்வியை எழுப்பிய தயாசிறி கிணறுவெட்டுவதற்கு வரி அறவிடப்படும் என வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பாக கேட்ட போது '13' பிளஸ் குறித்தும் கூறினார்.

அதாவது '13' என்றாலேயே அருகிலுள்ள சிலருக்கு ஒவ்வாமையாகவுள்ளது என அவர் குறிப்பிடுகையில் அமைச்சர் விமல் வீரவன்ச தனது ஆசனத்திலிருந்து திடீரென எழுந்தார். அதன் போது அமைச்சர் விமலை நோக்கி '13' குறித்து பேசும் போதே இதோ இவர் எழுந்து நிற்கிறார் என்று குறிப்பிட்ட தயாசிறி '13 பிளஸ்' என்றால்தான் அமைச்சர் வாசுதேவா நாணயக்கார எதிர்ப்பை வெளியிடுவார் போலும் என்று கூறினார். இதனால் சபையில் பெரும் சிரிப்பொலி எழுந்தது. (த)

## நௌறு தீவு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தப் புகலிடக் கோரிக்கையாளர்களில் அதிகமானோர் இலங்கையர் என்பதுடன் அவர்கள் தற்காலிக குடில்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு 40 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவுவதோடு அடிப்படை வசதிகள் குறைவாக உள்ளதால் நோய்களுக்கு உள்ளாவதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர் பலர் உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் சிலர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஐந்து பேர் வரையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்களில் ஒருவர் கடந்த 11 நாள்களாக உணவு ஏதுமின்றியிருப்பதாகவும் இதனால் அவருடைய உடல் நிலை மோசமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

## சரியான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என இலங்கையில் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் இலங்கை - இந்திய உறவில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என 'த டைம்ஸ் ஒப் இந்தியா' தெரிவித்துள்ளது.

அது வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ உட்பட அரசோடு உள்ள பலரும் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்யவேண்டும் எனக் கோரியுள்ள நிலைமையில் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் ஆபத்தான ஏட்டிக்குப் போட்டியான நிலைமை தோன்றியுள்ளது.

1987 ராஜிவ் காந்தி - ஜெயவர்த்தன ஒப்பந்தம் மூலம் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தம் மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளித்ததுடன் தமிழர்களுக்கு வேறு பல நன்மைகளையும் வழங்கியிருந்தது.

இலங்கையின் நல்லிணக்கம் ஏற்பட 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான அதிகாரப்பகிர்வை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார். 2008 அனைத்துலக ஆவர்த்தன பரிசீலனையின்போது இந்தக் கருத்தை இலங்கை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

''இது இந்தியாவுக்கு வழங்கிய உறுதிமொழியல்ல. சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்கிய உறுதிமொழி'' என இந்திய அதிகாரிகள் கூறினர். 13ஆவது திருத்தத்தை இரத்துச் செய்வது பற்றிய கருத்து வெளிப்பாடுகள், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை அதி தாழ்மட்டத்துக்கு கொண்டுபோகும் ஆபத்தைத் தோற்றுவித்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாட்டும் நானே, பாவமும் நானே; நிலையை மாற்ற மனம் வருமா என்ன?

ஆண்டின் இறுதி நெருங்கினால் அடுத்த வருடத்துக்கான அரசின் வரவு-செலவுத் திட்டம் வெளியிடப்படும். எமது நாட்டில் அனேகமாக நவம்பர் மாதத்திலேயே, அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவது வழமையாகிவிட்டது. அதேபோன்று வரவுக்கு மிஞ்சிய செலவுக் கணக்கில் ஆண்டுக்கு ஆண்டு செலவினங்கள் வானத்தை நோக்கி உயர்ந்து செல்வதும், வருமானம் அடி நிலையில் தத்தளிப்பதும் தப்பாது நடந்தேறும் சாதனை!

இம்முறையும் வழமைபோலவே அரச செலவினங்கள் உயர்ந்து நின்று, அந்தச் சுமையை மக்கள் மீது சுமத்தி அவர்களைத் தரையோடு அழுத்திப்பிடிக்கும் என்று எதிர்பார்க்கலாம். இதனை முற்கூட்டியே தெரிந்துகொண்டு, இருபத்துமூன்று தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து அடுத்த வாரத்தில் (நவம்பர் முதலாம் திகதி முதல்) பிரமாண்டமான தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. தேசிய ஊழியர் சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா இதனை அறிவித்துள்ளார்.

*இன்றைய வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யக்கூடிய அளவுக்கு அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படவேண்டும்.

*வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் வழங்குவதற்கு வகை செய்யப்படவேண்டும்.

*ஓய்வூதியர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும்- என்பன அவற்றின் முக்கிய கோரிக்கைகளாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

திடீர் திடீரென அறிவிக்கப்படும் எரிபொருள்கள் மற்றும் பிரதான நுகர்வுப் பொருள்களின் விலை உயர்வால், நடுத்தர வர்க்க மக்களே அல்லாடுகிறார்கள் என்றால், நலிந்த மக்களின் நிலையை, அன்றாடங் காய்ச்சிகளின் நிலைமையை விரித்துச் சொல்ல வேண்டியதில்லை.

நாடு முன்னேற்றம் காண்பதற்கு, இங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படுவது தவிர்க்கப்பட முடியாதது. அதற்கு ஏற்றவகையில் தொழில் வாய்ப்புகளும் அதிகரிக்கப்பட வேண்டும்.

அதற்கு நாட்டின் மூல வளங்களைத் தக்கவாறு பயன்படுத்தும் திட்டங்கள் ஊடான உற்பத்தித் துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது இன்றியமையாதது. அரசு இது விடயத்தில் ஓரளவு கவனம் செலுத்தினாலும், உரிய அளவை எட்டவில்லை.

மக்கள் தமது நாளாந்தத் தேவைகளை தமக்குப் போதியளவு, வேண்டியளவு பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையிலான நடைமுறைத் திட்டங்களை வகுத்து முன்னிலைப்படுத்திச் செயற்படுத்துவதிலும் அரசின் செயற்பாடுகள் எதிர்பார்க்கும் அளவுக்கு இல்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மறுபுறத்தில், தொழிலாளர்களின் வாழ்க்கை நலன்களையும், அரச, தனியார்துறை ஊழியர்கள் சார்ந்த நலன்களையும் அக்கறையுடன் கவனத்தில் கொண்டு செயற்படும் போக்கும் இப்போதைய அரசிடம் மிகக் குறைவே.

அதனாலேயே அரச, தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை நாடளாவிய மட்டத்தில் வலுத்து வருகிறது.

மக்களுக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அவர்களின் வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்பதற்கும் அரசிடம் காணப்படும் இயலாமைக்கும், அரச துறைகளில் மலிந்துள்ள லஞ்சமும் ஊழலுமே காரணம் என்பது பெரிதுபடுத்தப்பட்டுள்ள கூற்றல்ல; கருத்தல்ல.

பொதுமக்களின் நலனை முன்னிறுத்தி செயற்படுத்தப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கூட, ஊழல், மோசடிகள் மலிந்துள்ளன. இதனை அரச நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் நாடாளுமன்றக் குழு (COPE) போன்ற அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் பலதடவைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

நாட்டு மக்களின் நாளாந்தக் கஷ்டங்களை நீக்குவதில் காட்டப்படும் அக்கறையை விட, நாட்டின் பாதுகாப்பில் அதீத அக்கறை காட்டும் நாடுகளின் பட்டியலில், அதன் வரிசையில் இலங்கை முதல்வரிசையில் உண்டென்று கருதுவது பொருத்தம்.

அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செவுகளுக்கே, மற்றைய எல்லாவற்றையும் விட மிகமிக அதிகமான நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் ஆகக் குறைந்தது சுமார் இருபத்தைந்து வீதத்தை மக்கள் நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தினால், செலவிட்டால், அடிமட்ட அவல வாழ்க்கை நடத்தும் லட்சக் கணக்கான மக்களுக்கு அது பெரும் பேறாக அமையும்.

அதுகுறித்தேனும் அரசு அக்கறை கொள்ளும் என்று எதிர்பார்க்க இயலவில்லை. ஆட்சியில் அமர்ந்திருப்பவர்களினதும், அவர்களின் அடி வருடிகளினதும் நிலையை உயர்த்தும் வடிவிலேயே வரவு-செலவுத் திட்டம் அமையும் என்றே எதிர்பார்க்கத் தூண்டுகிறது. பல தொழில்சார் அங்கத்தவர்கள் சேர்ந்திருக்கும் 23 தொழிற்சங்கங்களின் உத்தேச பிரமாண்டமான போராட்டத்தை அரசு பொருட்படுத்துமா, எதிர்பார்க்கப்படும் பலன்களைத் தருவதற்கு உதவுமா என்பவற்றைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள்; நாங்கள் நினைத்து வகுத்தவற்றையே அச்சொட்டாகச் செய்வோம் என்ற பொடுபோக்கான தனது நிலைப்பாட்டை அரசு மாற்றிக் கொள்ளும் என எதிர்பார்க்கமுடியவில்லையே! பாட்டும் நானே, பாவமும் நானே என்ற தனது நிரந்தர செயலாண்மையை மாற்றுவதற்கு அது மனங்கொள்ளுமா என்ன...?

# புகைப்பதனால் நாளாந்தம் 60 பேர்வரை இறக்கின்றனர்

## யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்து

யாழ்ப்பாணம்,ஒக்.24

இலங்கையில் புகைப்பொருள் பாவனையால் நாளாந்தம் 50 முதல் 60 பேர்வரை இறக்கின்றனர். வருடத்துக்கு சராசரியாக 15 ஆயிரம் முதல் 25 ஆயிரம் பேர் புகைப்பொருள் பாவனையால் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட சர்வதேச புகைத்தல் தினப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் தியாகி அறக்கொடை நிலையத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புகைத்தல் மற்றும் மதுபாவனையால் உடல், உள, சமூக, பொருளாதார பாதிப்புகள் ஏற்படுகின்றன. இந்தப் பாதிப்புத் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் உள்ளது. ஆனாலும் இலங்கையில் புகைத்தல், மதுபாவனை என்பன அதிகரித்தே செல்கின்றன.

2009 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வுகளின் படி இலங்கையில் 27 வீதமானவர்கள் புகைக்கின்றனர். அத்துடன் புகைப்பதால் 50முதல் 60 பேர் வரை நாளாந்தம் உயிர் இழப்பதுடன், வருடத்துக்கு 15 ஆயிரம் பேர் முதல் 25 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்படுகின்றனர்.

மது பாவனையும், அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இலங்கையில் 1981 ஆம் ஆண்டு ஒருவர் 1.58 லீற்றர் மதுவை அருந்துவதாக கணிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு 7.4 லீற்றராக அதிகரித்து 2012 ஆம் ஆண்டில் அது பன்மடங்காக அதிகரித்துள்ளது.

இலங்கையில் 65 வீதமானவர்கள் மது அருந்துபவர்களாக இருப்பதுடன், 2006 ஆம் ஆண்டு 61.5 மில்லியன் லீற்றர் சாராயத்தையும், 2010 ஆம் ஆண்டு 72.5 மில்லியன் லீற்றர் சாராயத்தையும் அருந்தியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 2010 ஆம் ஆண்டில் 1.6 மில்லியன் லீற்றர் சாராயத்தை மக்கள் அருந்தியுள்ளனர். இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் குடிப்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது என்பதை இனங்காண முடிகிறது. இவற்றில் 25 வீதமானவர்கள் பல்கலைக்கழகத்துக்கு செல்ல முன்னரே குடிப்பவர்களாக இருக்கின்றனர்.-என்றார்.

இந்த நிகழ்வில் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.ஆர்.ஜூட், வடமகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டு அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஐ-14)

# புகைப்பொருள் பாவனையே புற்றுநோய்க்கான காரணம்

## குடாநாட்டில் அதிகரித்துச் செல்கிறது என்கிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஒக்.24

யாழ்ப்பாணத்தில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமைக்கு மூலகாரணமாக புகைப்பொருள்பாவனையே உள்ளது.

இது மட்டுமல்லாமல் குடும்ப வன்முறை, கலாசார சீர்கேடுகள் என்பனவும் நாளுக்குநாள் அதிகரித்தே செல்கின்றன.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் உலக புகைத்தல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சித்திரம், கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புகைப்பொருள் பாவனையால் அதிக எண்ணிக்கையான நோய்கள் ஏற்படுவதுடன் மரணம்கூட நிகழ்கின்றது. குறிப்பாக புற்றுநோய் ஏற்பட புகைப்பொருள் பாவனையே மூலகாரணமாக உள்ளது. புகைத்தல் ஒழிப்பு தொடர்பில் சுகாதார சேவைகள் திணைக்களத்தால் பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும், மக்கள் மத்தியில் இன்னமும் விழிப்புணர்வு போதாமலே உள்ளது.

இப்போது யாழ்ப்பாணத்தில் கலாசார சீரழிவுகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இளைஞர்கள் மத்தியில் புகைத்தல் மற்றும் மதுபாவனை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களுக்குக் குடும்பம், சமூகம் என்ற நிலையில் கருத்தூட்டம் செய்ய வேண்டும். - என்றார்.

(ஐ-14)

# பெண் பிள்ளைகள் தொடர்பில் இனி முக்கிய கவனம் செலுத்த வேண்டும்

## சிறுவர், மகளிர் விவகார அமைச்சின் செயலர் கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

உலக மக்கள் தொகையில் பாடசாலை செல்லும் பிள்ளைகள் 130 மில்லியன் பேர் உள்ளனர். இவர்களில் பெண் பிள்ளைகள் தொகையில் 70 வீதமான பெண் குழந்தைகள் மீது முன்னரிலும் பார்க்க கூடுதலான கவனம் - அவதானம் செலுத்த வேண்டும். இது சர்வதேச குழுவின் கருத்தாகும். இவ்வாறு சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ஏர்க் இளையப்ப ஆராய்ச்சி "நீங்கள் எனது மகள்" எனும் தலைப்பில் மாகாண சமூகசேவைகள் நிறுவனங்களுக்கு எழுதிய கடிதத்திலேயே இதனை வலியுறுத்தியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உலகின் எல்லா நாடுகளிலும் வசிக்கும் பெண் குழந்தைகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளை கல்வி, சுகாதாரம், உணவு, சமயம், நிறம், குடும்ப நிலை, பெற்றோர்கள், அன்பு, சமூக பாதுகாப்பு, பாலியல், விளையாட்டு, நவீன தொழில் நுட்பம் எனப் பட்டியலிட்டுக் கொண்டே செல்ல முடியும்.

இவ்வாறான பிரச்சினைகளை [illegible] செயற்படுவது அனைவரதும் கடமையாகும்.

> ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் 11 ஆம் திகதி பெண் குழந்தைகளின் சர்வதேச தினத்தை கொண்டாட அமைச் சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இவற்றை அவதானிக்கும் நோக்கில் வருடம் தோறும் "பெண் பிள்ளைகளின் சர்வதேச தினம்" நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலங்கையில் இந்த தினத்தை கொண்டாட நாடு முழுவதும் பல நிகழ்ச்சிகளை முன்னெடுக்க எமது அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 11 ஆம் திகதி பெண் குழந்தைகளின் சர்வதேச தினத்தை கொண்டாட அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது- என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-50)

# முதலியார் ஞாபகார்த்த அறக்கட்டளை நிதியம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

மறைந்த சி.பொ.வ.மா.க. முதலியார் ஞாபகார்த்தமாக முதலியார் அறக்கட்டளை நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக சுவிஸ் எழுத்தாளர் செந்தூர்செல்வன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வலி.தென்மேற்கில் விவசாயிகளின் பிள்ளைகள், வறுமைக் கோட்டுக்குட்பட்ட பிள்ளைகளின் கல்வி, முன்பள்ளிகள் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு உதவ இந்த நிறுவனம்முன்வரும் என்று கூறப்பட்டது.

இத்ன் செயலாளராக திருமதி மங்கையர்க்கரசி நியமிக்கப்பட்டுள்ளார்.

(ம-50)

# போட்டியும் பரிசிலும்

யாழ்ப்பாணம்,ஒக்.24

உலக சிக்கன தினத்தை முன்னிட்டு சேமிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி தேசிய சேமிப்பு வங்கியால் நடத்தப்படும் மாவட்ட மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டி நாளையும், போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் எதிர்வரும் 29 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன என்று தேசிய சேமிப்பு வங்கியின் வலய முகாமையாளர் வ.அருளானந்தம் தெரிவித்துள்ளார்.

(ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிசய நெல்லி...



மன்னார் பெரிய கடைப் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் வளர்ந்து வந்த நெல்லி மரம் ஒன்று அதிசயமான முறையில் காய்த்துள்ளது. இரு வித்திலைத்தாவரமான நெல்லி மரம் தண்டு மற்றும் கிளைப்பகுதிகளிலே காய்ப்பது வழமையாகும். இந்த நிலையில் அதிசயமான முறையில் குறித்த நெல்லிமரம் இலையில் காய்களைச் சுமந்திருப்பதால் அப்பகுதி மக்கள் அதிகமாக அதனை பார்வையிட்டுச் செல்கின்றனர். (க-12)

# மட்பாண்டங்கள் விற்பனையாகாததால் வருமானத்தை இழக்கும் வியாபாரிகள்

துணுக்காய், ஒக்.24

மட்பாண்டங்களின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் இவற்றை விற்பனை செய்யும் வியாபாரிகள் வருமானம் ஈட்ட முடியாத நிலையில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி, கனகபுரம் பொதுச் சந்தைப் பகுதியில் உள்ளூர் உற்பத்தி பொருள்களான மட்பாண்டங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஆனால் பாவனையாளர்கள் தென்பகுதியிலிருந்து வரும் பாத்திரப் பொருள்களை கொள்வனவு செய்வதால் மட்பாண்டங்கள், ஓலைப் பாய்கள் என்பன விலை போகாது தேங்கியுள்ளன. இதனால் வியாபாரிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் அன்றாடச் செலவுகளை ஈடுசெய்ய முடியாத நிலையில் வியாபாரிகள் மாலையில் சோர்வுடன் வீடு செல்வதைக் காணமுடிகின்றது.



போருக்கு முந்திய காலத்தில், மண் சட்டி பானைகளுக்கு அதிக கிராக்கி காணப்பட்டது. இதனால் அன்றைய காலப்பகுதியில் நிறையவே வருமானம் கிடைத்ததாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

போருக்கு முந்திய காலத்தில், மண் சட்டி பானைகளுக்கு அதிக கிராக்கி காணப்பட்டது. இதனால் அன்றைய காலப்பகுதியில் நிறையவே வருமானம் கிடைத்ததாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். தற்போது தாம் வறுமையில் உழல்வதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது நிலையை உணர்ந்து ஏதாவது நிறுவனங்கள் அல்லது அமைப்புக்கள் தமக்கு உதவ வேண்டுமெனவும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-415)

## வவுனியா ஓமந்தைப் பகுதியில் மரங்களை வெட்டியவர்கள் கைது

வலி.வடக்கு, ஒக்.24

சட்டவிரோதமான வகையில் மரங்களை வெட்டிக் கொண்டு சென்ற இரண்டு சந்தேக நபர்கள் ஓமந்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் ஓமந்தைப் பொலிஸார் விரைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக குறித்த இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதுடன் அவர்களால் எடுத்துச் செல்லப்பட்ட மரப்பலகைகள், மரக் குற்றிகள், மரம் வெட்டுவதற்கும் அறுப்பதற்கும் பயன்படுத்திய உபகரணங்கள், உழவு இயந்திரம் ஒன்று என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் வவுனியா நீதிமன்றத்தில் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-86)

## மலிந்தது மரக்கறி



துணுக்காய், ஒக்.24

மல்லாவிப் பொதுச் சந்தையில் மரக்கறி வகைகளின் விலைகள் குறைந்து காணப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இங்கு விற்பனை செய்யப்படும் கத்தரிக்காய், மரவள்ளிக் கிழங்கு, வெங்காயம், பச்சைமிளகாய், பூசணிக்காய், புடலங்காய் என்பன கிலோ ஒன்று 40 ரூபா என்ற விலையில் விற்கப்படுகின்றன.

கோவா 40 ரூபாவிலிருந்து 50 ரூபாவாகவும், வாழைப்பொத்தி 30 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

இங்கு மேலதிகமாகக் காணப்படும் மரக்கறி வகைகள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது. (க-415)

## அரச அதிபரால் பவுசர்கள்

முல்லைத்தீவு,ஒக்.24

முல்லைத்தீவு அரச அதிபரால் மூன்று பிரதேச சபைகளுக்கு தண்ணீர் பவுசர்கள் வழங்கப்பட்டுள்ளன.

துணுக்காய், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு ஆகியனவே அந்த மூன்று பிரதேச சபைகளும் ஆகும்.

இந்த பவுசர்கள் மூலமாக குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் இடங்களுக்கு நீரை வழங்க முடியுமென பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தொடர் வறட்சி காரணமாக துணுகாய், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச சபை எல்லைக்குள் வாழ்ந்த மக்கள் நீருக்குப் பெரும் தட்டுப்பாட்டை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது முல்லை மாவட்ட அரச அதிபரினால் மூன்று பிரதேச சபைக்கான நீர்த்தாங்கி பவுசர்கள் வழங்கப்பட்டுள்ளன.

துணுக்காய், மாந்தை கிழக்கு புதுக்குடியிருப்பு ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கு இவை வழங்கப்பட்டன.

இதன் மூலம் வறட்சியினால் பாதிக்கப்பட்டு நீரினைப் பெறமுடியாத இடங்களுக்கு இவை மிகவும் உதவியாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (கி-500)

## யானையின் தொடர் அட்டகாசத்தால் அவலங்களை எதிர்கொள்ளும் மக்கள்

### வெடியோசைக்கும் அசையாததால் இந்த நிலை

முல்லைத்தீவு, ஒக்.24

கட்டுக்கடங்காமல் முல்லைத்தீவில் தொடர்ந்து அட்டகாசம் புரிந்து வரும் தென் பகுதியிலிருந்து கொண்டு வந்து விடப்பட்ட யானையால் முத்துஐயன் கட்டுப் பகுதி மக்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த யானை முத்துஐயன்கட்டு முதலாம் கண்டம், தட்டையர்மலை, இரண்டாம் கண்டம் , இடதுகரை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களைத் தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றது.

இந்த யானை இதுவரை 11 கல்வீடுகள் அடங்கலாக 40 வீடுகளையும் இரண்டு வர்த்தக நிலையங்களையும் துவம்சம் செய்துள்ளது. மேலும் வலதுகரை இரண்டாம் கண்டத்திலுள்ள பாடசாலையை உடைத்து அங்கு மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கென வைக்கப்பட்டிருந்த பொருள்களையும் தின்று தீர்த்துள்ளது.

கடந்த புதன்கிழமை தொடக்கம் இந்த யானையின் அட்டகாசம் தொடர்கின்றது.

முத்துஐயன்கட்டு முதலாம் கண்டத்தில் வசிக்கும் கந்தையா கனகராசா என்பவரின் வீட்டை உடைத்து 10 மூடை நெல்லை நாசப்படுத்திய இந்த யானை அவரது தோட்டத்தில் அறுவடைக்குத் தயார் நிலையிலிருந்த சுமார் ஆயிரத்து 500 கிலோ பூசணியையும் உண்டு நாசப்படுத்தியது.

நேற்றைய தினமும் தொடர்ந்து யானையின் அட்டகாசம் தொடர்ந்தது. இதனால் வலதுகரை இரண்டாம் கண்டத்தில் இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் பிரதேச செயலர், அரச அதிபர், இராணுவத்தினர் ஆகியோருக்கு முறையிட்டுள்ளனர்.

பிரதேச செயலரால் இந்த யானையை விரட்டுவதற்கென வழங்கப்பட்ட வெடிகளை மக்கள் கொளுத்தும் போது இந்த யானை மிரண்டு ஓடாது மெளனமாக அதே யிடத்தில் நிற்பதாக மக்கள் கூறுகின்றனர். இராணுவத்தினர் அனுராதபுரத்திலுள்ள வன இலாகாவினருக்கு அறிவித்து இந்த யானையை அப்புறப்படுத்துவதாக மக்களிடம் உறுதி கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது மழை பெய்வதால் மக்களின் நிலை பரிதாபகரமாக மாறியுள்ளது. இரவு வேளைகளில் இங்குள்ள மக்கள் வேறு இடங்களை நாடிச் செல்வதையும் காண முடிகின்றது. (க-500)

## முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒருதொகுதி ஆயுதங்கள் மீட்பு

வலி.வடக்கு, ஒக்.24

பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியிலிருந்து ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஒரு வார காலத்தில் முல்லைத்தீவுப் பிரதேச புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 12 ஆம் திகதிக்கும் 17 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

எல்.எம்.ஜீ.ரக துப்பாக்கிகள்2, ரி 97 ரகத் துப்பாக்கிகள் 4, ரி-56 ரக துப்பாக்கிகள் 4, ரி 86 ரக துப்பாக்கிகள் 2, ஆர்.பி.ஜி. துவக்குகள், குண்டுகள், ரவைகள் ஆகிய ஏராளமான ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-86)

## முன்பள்ளி திறந்து வைப்பு

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுச் சந்தை, முன்பள்ளி என்பன திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் சுமார் 62 லட்சம் ரூபா செலவில் பொதுச் சந்தையும், 10 லட்சம் ரூபா செலவில் முன்பள்ளியும் அமைக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இவற்றைத் திறந்து வைத்தார்.

ஸ்கந்தபுரம் பகுதி மக்கள் நீண்ட நாள்களாகவே பொதுச் சந்தை முன்பள்ளி ஆகியவற்றை அமைக்குமாறு வேண்டுகோள் விடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## வீதி விபத்தில் இளைஞர் படுகாயம்



மன்னார் பிரதேசச் செயலகத்திற்கு முன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் குறித்த வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நேர் எதிரே வந்த ஓட்டோவுடன் மோதியதால் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதி போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த 21 வயதான முகமட் மாசீம் என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைச்சிக்கு வெட்டும் விலங்குகளின் கழிவுகள் கோப்பாய் தரவையில்

## அந்தப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

யாழ்ப்பாணம்,ஒக்.24

கோப்பாய் தரவைப் பகுதியில் இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளின் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதால் அந்தப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதுடன் துர்நாற்ற மும் வீசுகிறது.

இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளின் கழிவுப் பொருள்கள் கடந்த சில தினங்களாக இந்தப் பகுதியில் கொட்டப்படுகின்றன.

**பனம் விதைகள் நடும் திட்டத்தில் வெட்டப்பட்ட குழிகளுக்குள்ளும் கழிவுகள்**

இதனால் அந்த இடத்தில் கூடும் காகங்கள், நாய்கள், கழிவுகளை இழுத்து வீதிக்குக் கொண்டு வருவதுடன் அவற்றைப் பல இடங்களுக்குப் பரப்பி பெரும் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துகின்றன.

தற்போது கோப்பாய் தரவைப் பகுதியிலிருந்து வல்லைப் பகுதியைத் தூய்மையாகப் பேணும் நடவடிக்கையை வலி.கிழக்குப் பிரதேசசபை மேற்கொண்டுள்ளது.

இதற்காக இந்தப் பகுதியில் பனம் விதைகளை நடும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வெட்டப்பட்ட குழிகளில் சிலர் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதால் அந்தப் பகுதியின் தூய்மை பாதிக்கப்படுவதோடு வீதியால் போக்குவரத்துச் செய்வோரும் சிரமங்களை எதிர்கொள்வதாகச் சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

எனவே இந்தப் பிரதேசத்தில் கழிவுகளைக் கொட்டுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (த-17)

## 2010 ஆம் ஆண்டு திருட்டுப்போன நகைகள் பொலிஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம்,ஒக்.24

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற திருட்டு தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் குறிப்பிட்ட நபரிடமிருந்து திருட்டுப் போன நகைகளில் ஒரு பகுதியும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறையில் 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வீடு ஒன்று உடைக்கப்பட்டு சுமார் நான்கு லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்று உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டுவந்த விசாரணைகளை அடுத்து கடந்த 11 ஆம் திகதி பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அவர் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் திருட்டுப் போன நகைகளின் ஒரு பகுதி மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்துக் குறித்த சந்தேக நபர் பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-86)

## தீவக வலயத்தில் முறைசாரா கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.24

தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் முறைசாராக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் திங்கட்கிழமை புங்குடுதீவு சர்வோதய சமூகக் கற்கை நிலையத்தில் நடைபெற்றன.

தீவகக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முறைசாராக் கல்விப் பிரிவின் பயிற்சி பெற்ற யுவதிகளால் தயாரிக்கப்பட்டிருந்த உணவுக்கான தயாரிப்புக்கள், கைப்பணிப் பொருள்கள், உடைகள் கண்காட்சியில் இடம்பெற்றன.

தீவக வலயத்தைச் சேர்ந்த மாணவிகளின் உற்பத்திப் பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

காட்சிக்கு வைக்கப்பட்ட சிறந்த தயாரிப்புகளுக்குரிய மாணவர்கள், யுவதிகளுக்குச் சான்றிதழ்கள், புத்தகப் பைகள் என்பன பரிசாக வழங்கப்பட்டன.

தீவக வலயத்தின் ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் வீ. இராதாகிருஷ்ணன் முறைசாராக் கல்வி உதவிப் பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ்லாஸ் ஆகியோர் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர். (ம-7)

## மந்திகையை சிறு நகரமாக்கி அபிவிருத்தி செய்யத் தீர்மானம்

வடமராட்சி, ஒக்.24

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள் மந்திகையை சிறு நகரமாக்கி அபிவிருத்தி செய்வது என்று தீர்மானிக்கபட்டுள்ளது. அதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.


**மக்கள் செறிந்துள்ள மந்திகைப் பகுதியை அபிவிருத்தி செய்து சந்தியில் மணிக்கூட்டுக் கோபுரமும் அமைக்கப்படும்**

சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற போது இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு.

★எதிர்காலத்தில் நிதி கிடைக்கும் பட்சத்தில் மந்திகைச் சந்தியில் சரியான இடத்தை தெரிவு செய்து மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று அமைத்தல்.

★மாயக்கை சந்தைப் பகுதியில் கோழிக்கடை ஒன்று அமைத்தல்.

★நெல்சிப் நிதித்திட்டத்தின் கீழ் அல்வாய் மானாண்டிச் சந்தை நிர்மாணம் செய்யப்படவுள்ளதால் சபைநிதி மூலம் அங்குள்ள இறைச்சிக்கடையை திருத்தம் செய்வதில்லை. (ம-8)



யாழ். ஆரியகுளம் மீண்டும் சல்பீனியா தாவரத்தால் மூடிக் காணப்படுகின்றது. இந்த வருட முற்பகுதியில் இந்தக் குளத்தில் சல்பீனியா, மாநகரசபையினரால் அகற்றப்பட்டது. தற்போது இந்தத் தாவரம் குளத்தை மூடிப் படர்ந்து வளர்ந்துள்ளது. இந்த சல்பீனியாத் தாவரத்தால் இந்தப் பிரதேசத்தில் நுளம்பின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் குளத்தில் இருந்து வருடா வருடம் அகற்றப்படும் சல்பீனியா மழை பெய்யத் தொடங்கியதும் பெருகிவிடுகிறது என்று கூறப்பட்டது. (ம-17)

## கவனிப்பார் அற்றநிலையில் உள்ள கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்கம்

### பிரதேச மக்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.24

கவனிப்பார் அற்ற நிலையில் நூறு வருட பழைமை வாய்ந்த கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்கம் உள்ளது என்று இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுவரை 5 தடவைகள் மதீப்பீடு செய்யப்பட்ட நிலையில் இதுவரை நிதி ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது.

கடந்த 10 வருடங்களாக நவாலி- கட்டுடை இடிகுண்டு அபிவிருத்தி குறித்து பல சமூக மட்ட நிறுவனங்கள் மானிப்பாய் பிரதேச சபை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு பல சிபாரிசுகளை முன்வைத்த நிலையிலும் இதுவரையிலும் திட்டம் கைகூடவில்லை என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இறுதியாக ''சொண்ட்'' நிறுவனம் மதிப்பீட்டை பெற்று, சாத்தியவள கற்கையை முடித்து நிதி ஒதுக்குவதாக உறுதியளித்திருந்தது. பின்னர் இதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை என்று தெரிவித்திருந்தது.

இதனால் இறுதியான மதிப்பீடும் சோபை இழந்ததுள்ளது.

தற்போது நவாலி- கட்டுடை இடிகுண்டு பாதுகாப்பற்ற நீர் நிலையாக உள்ளது. இதனால் எதிர்காலத்தில் பொது மக்களுக்கு ஆபத்து நிறைந்த ஒரு பிரதேசமாக இது மாறியுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-50)

## வேலணையில் மக்கள் பிரச்சினை குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.24

வேலணைப் பிரதேச மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லிணக்க ஆணைக்குழு ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயசிங்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மக்களின் குடிதண்ணீர் பிரச்சினை, மின்சார வழங்கல், மதுபாவனையால் எதிர்கொள்ளக் கூடிய பிரச்சினைகள், சிறுவர், பெண்கள் துஷ்பிரயோக சம்பவங்கள், போக்குவரத்துப் பிரச்சினை, கலாசார சீரழிவு, பாடசாலை மாணவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஆகியன தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்த நிகழ்வில் வேலணை பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி, வேலணைப் பிரதேசசபைத் தலைவர் சி.சிவராசா மற்றும் துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்து கெண்டனர். (ஜ-167)

## நெடுந்தீவுக்கு மின்சாரம்; வழமைக்குத் திரும்பியது

யாழ்ப்பாணம்,ஒக்.24

நெடுந்தீவுக்கான மின்சார விநியோகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழமைக்குத் திரும்பியது.

பழுதடைந்திருந்த மின்பிறப்பாக்கி இயந்திரங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை வழங்கி இயந்திரங்களை நெடுந்தீவுக் கடற்படையினர் திருத்தியமைத்தனர்.

இதனையடுத்து மீண்டும் மின்விநியோகம் இடம்பெற்று வருகிறது.

நான்கு தினங்களாகத் தொடர்ந்து தடைப்பட்டிருந்த மின்விநியோகம் மீண்டும் வழமைக்கு வந்தமையால் மக்கள் பெரும் நன்மை அடைந்துள்ளனர். (ம-7)

## தொற்றா நோய்களின் தாக்கமே யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ளது

### வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்து

யாழ்ப்பாணம்,ஒக்.24

சுகாதாரத் துறையில் ஆசிய நாடுகளுக்கு முன்னுதாரணமாக இருந்த இலங்கை இப்போது தொற்றா நோய்கள் அதிகரித்த நாடாக மாறி விட்டது.

வட மாகாணத்தில் இதன் நிலை மேலும் அதிகமாக உணரப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ். ஆர். ஜூட்.

சர்வதேச புகைத்தல் தினத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நடத்திய சித்திர, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதார அமைச்சு பெரிய வேலைத் திட்டங்களை மேற்கொண்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தி வந்தது.

ஆனால், தற்போது வட மாகாணத்தில் சுகாதாரத் துறைக்கு சவாலாகத் தொற்றா நோய்கள் அதிகரித்துள்ளன. இவற்றில் நீரிழிவு, இதய நோய், புற்றுநோய் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இவற்றுக்கு முக்கிய காரணம் நோயை ஏற்படுத்தக் கூடிய உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் சொகுசு வாழ்க்கை முறையே.

ஆண்களுக்கு வாய்ப் புற்றுநோயும், பெண்களுக்கு மார்பகப் புற்றுநோயும் கர்ப்பப்பை புற்றுநோயும் அதிகமாக ஏற்படுகின்றன. இவ்வாறான நோய்கள் எமது வாழ்க்கை முறையாலேயே கூடுதலாக ஏற்படுகின்றன.

எனவே புகைத்தல், மதுபாவனை போன்றவற்றை கட்டுப்படுத்தும் போது தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்த முடியும். - என்றார். (ஜ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 வருடங்களின் பின் மீண்டும் குஜாராத் - பிரிட்டன் உறவுகள்

## மோடியைச் சந்தித்துப் பேசினார் பிரிட்டன் தூதர்

இந்தியாவுக்கான பிரிட்டன் தூதர் ஜேம்ஸ் பெவன் குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை நேற்றுச் சந்தித்து பேசியதன் மூலம் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் குஜராத்துடனான தனது உறவை பிரிட்டன் புதுப்பித்துக் கொண்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு குஜராத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்ந்த கலவரத்துக்குப் பின்னர், குஜராத்துடனான உறவை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் முறித்துக் கொண்டன.

இந்தக்கலவரத்தில், குஜராத் வம்சாவளியைச் சேர்ந்த 3 பிரிட்டன் பிரஜைகளும் கொல்லப்பட்டனர். கலவரத்துக்குத் தூண்டு கோலாக மோடி இருந்தார் என்றும் கலவரத்தைத் தடுக்கத்தவறியதற்காகவும் அவருக்கு அமெரிக்க விசா அளிக்க மறுத்து விட்டது.



இந்தநிலையில், 10ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகளிடம் குஜராத் குறித்த அணுகுமுறை மாறி வருகிறது.

இதன் முதற்கட்டமாக, குஜராத்துடன் நெருங்கிய உறவுகளை மேம்படுத்த அமெரிக்கா விருப்பம் தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து பிரிட்டனும் குஜராத்துடன் நெருங்கிய உறவுகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளது. இதன் முதற்கட்டமாக, இந்தியாவுக்கான பிரிட்டன் தூதர் ஜேம்ஸ் பெவன், முதல்வர் மோடியை அகமதாபாத்தில் சந்தித்துப் பேசினார்.

இது குறித்து பிரிட்டன் துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

குஜராத்தில் பல்வேறு துறைகளில் குறிப்பாக உயிர் அறிவியல், எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல், பொருளாதார சேவைகள் மற்றும் தொலைத் தொடர்பு துறைகளில் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இது வரை விசா மறுத்து வந்த அமெ ரிக்காவும் தற்போது விசா தர முன்வந்திருப்பது குறிப் பிடத்தக்கது-என்றுள்ளது.

இதேவேளை பிரிட்டனின் இந்த முடிவு குறித்து டுவிட்டரில் கருத்துத் தெரிவித்த மோடி, ஒரு விடயம் இல்லாமலேயே போவதிலும் தாமதம் சிறந்ததே. பிரதமர் மன்மோகன் சிங்குக் குத் தெரியாத குஜராத்தின் மதிப்பு, பிரிட்டனுக்கு தெரிந்திருக்கிறது என்று சுட்டிக் காட்டினார்.

---

**இணையத்தளத்தில் வெளியான ஆபாசப்படம்**

## பாடகி சின்மயியின் முறைப்பாட்டில் பேராசிரியர் உட்பட இருவர் கைது

இணையத்தளங்களில் தமது படங்களை ஆபாசமாக வெளியிட்டதாக பாடகி சின்மயி கொடுத்த முறைப்பாட்டின் பேரில் கல்லூரி துணைப் பேராசிரியர் ராஜன் உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

டுவிட்டர் மற்றும் பேஸ்புக் ஆகிய சமூக வலைத் தளங்களில் சின்மயி சர்ச்சைக்குரிய விடயங்களுக்கு கருத்துத் தெரிவித்து வருகிறார். சாதி, இட ஒதுக்கீடு போன்றவற்றில் அவரது நிலைக்கு குறித்து பலர் எதிர்கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

ஒரு கட்டத்தில் இந்த கருத்து மோதல் ஆபாசத்துக்குச் சென்றுவிட்டது. சின்மயி மற்றும் அவரது தாயார் குறித்து சிலர் மோசமாக சித்திரித்து எழுத ஆரம்பித்து விட்டனர். சின்மயியின் படத்தை ஆபாசமாகச் சித்தரித்து வெளியிட்டுள்ளனர்.

இதைத்தொடர்ந்து அவர் 

பொலிஸில் 6 பேர் மீது முறைப்பாடு தெரிவித்தார். இதன்பேரில் சரவணக் குமார் மற்றும் திருப்பூர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் ராஜன் என்பவரையும் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர். ஏனைய நால்வரையும் தேடி வருகின்றனர்.

இது போன்ற முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக 20 பேர் கொண்ட தனிப்படை அமைக்கப்படும் என்று சென்னை ஆணயாளர் தெரிவித்தார்.

---

## 'மாலைப் பொழுதின் மயக்கத்திலே' திரைப்பட நாயகி உயிரிழப்பு



சென்னை, ஒக்.24

'மாலைப்பொழுதின் மயக்கத்திலே' என்ற திரைப் படத்தில் நடித்து வந்த நடிகை சுபா புத்தெலா திடீரென உயிரிழந்தார்.

சிறுநீரகக் கோளாறு காரணமாக உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் 'செம்பட்டை' என்ற திரைப்படத்தின் ஹீரோ திலீபன் உயிரிழந்தார். இந்த நிலையில் இன்னொரு முக்கிய திரைப்படத்தின் நாயகி உயிரிழந்திருப்பது ஹோலிவூட்டை அதிர வைத்துள்ளது. 'மாலைப்பொழுதின் மயக்கத்திலே' என்ற திரைப்படத்தின் படப்பிடிப்புகள் நடைபெற்று வருகின்றன. இதில் நாயகியாக நடித்திருந்தவர் சுபா புத் தெல்லா.

---

## நித்தியை வெளியேற்று

**கர்நாடகாவில் வெடித்தது போராட்டம்**



சுவாமி நித்தியானந்தாவை கர்நாடக மாநிலத்தை விட்டும் வெளியேற்ற வேண்டும் என்று அந்த மாநிலத்தில் அவருக்கு எதிராகப் போராட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

இளைய சந்நிதான பதவியிலிருந்து நீக்கப்பட்ட சுவாமி நித்தியானந்தா, தற்போது கர்நாடகாவில் தங்கியுள்ளார்.

கர்நாடகாவின் ராம்நகரம் மாவட்டத்தில் உள்ள பிடதி ஆசிரமத்தில் தங்கி, அங்குள்ள சீடங்களுக்கு போதனை செய்து வருகிறார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் கர்நாடக கஸ்தூரி கன்னட சங்கம் தலைமையில் பல்வேறு கன்னட அமைப்பினர் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

வீதிகளில் டயர்களைக் கொளுத்தியும், நித்தியானந்தாவின் படங்களுக்கு தீ வைத்தும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

அசம்பாவிதம் ஏதும் நடைபெறாமல் தவிர்க்க ஆசிரமத்தைச் சுற்றி பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

நித்தியானந்தாவை உடனடியாக மாநிலத்தில் இருந்து வெளியேற்ற வேண் டும் என்று மாநில அரசுக்கு கன்னட அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

---

## இந்தியா வரார் புடின்

**கூடங்குளம் எதிர்ப்பின் எதிரொலி**



டில்லி, ஒக்.24

கூடங்குளம் விவகாரத்தால் ரஷ்ய ஜனாதிபதி புடினின் இந்திய வருகை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புடின் எதிர்வரும் நவம்பர் மாதம் இந்தியாவுக்குச் செல்வதாக இருந்தது. ஆனால் அவரது இந்தியப் பயணம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. ரஷ்யாவின் உதவியுடன் அமைக்கப்பட்டு வரும் கூடங்குளம் அணு உலை விவகாரமும் ரஷ்யாவின் சிஸ்டெமாவின் ஸ்பெக்ட்ரம் உரிமம் ரத்து செய்யப்பட்டதாலும் புடினின் பயணம் ஒத்தி வைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இந்த நிலையில் திடீரென புடின் இந்தியாவுக்கே வரமாட்டார் என்றும் ஒரு தகவல் வெளியாகியது.

இது குறித்து டில்லியில் உள்ள ரஷ்ய தூதரகம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. புடினின் இந்திய வருகையின் போது ரஷ்ய கலாசார நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே சமயம் மொஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரகம் புடின் இந்தியாவுக்குச் செல்லமாட்டார் என்ற செய்தியை நிராகரித்துள்ளது.

ரஷ்யாவின் உதவியுடன் அமைக்கப்பட்டு வரும் கூடங்குளம் அணு உலைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து தமிழகத்தில் தொடர் போராட்டங்கள் நடைபெறும் நிலையில் ஒத்திவைக்கப் பட்டிருப்பதாக டில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

## இராணுவ அதிகாரியின் விரலைப் பதம் பார்த்த எலி

இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இராணுவ அதிகாரியின் விரலை எலி கடித்தும் குதறியது.

காஷ்மீர் மாநிலம் ஹண்ட்வாரா நகரில் கடந்த மாதம் 25 ஆம் திகதி தீவிரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்ற போது கொல்லப்பட்டனர்.

மேற்படி மோதலில் தீவிரவாதிகள் சுட்டதில் 24 வயதுடைய அதிகாரி ஒருவரின் தண்டுவடத்தில் குண்டு பாய்ந்ததில் அவருக்கு இடுப்புக்கு கீழே செயலிழந்தது.

பின்னர் புதுடில்லியிலுள்ள இராணுவ மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை அளிக்கப் பட்டது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து வேறு அறைக்கு அவர் மாற்றப் பட்டார். இந்தநிலையில் நேற்று முன்தினம் காலை இராணுவ அதிகாரி பின் கால் விரலில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருப்பதை மருத்துவமனை ஊழியர் ஒருவர்  பார்த்துள்ளார்.

அதன்பின்னர் நடத்திய பரிசோதனையில் கால் விரல்களை எலிகள் கடித்துக் குதறியிருப்பது தெரிய வந்தது.

இராணுவ அதிகாரிக்கு இடுப்புக்கு கீழ் செயலிழந்து விட்டதால் எலி கடித்தது அவருக்குத் தெரியாமலே இருந்துள்ளது. இதையடுத்து அவருக்கு ரேபிஸ் நோயை தடுக்கும் சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி மருத்துவமனையில் எலிகள் தொல்லை இருப்பதாக ஏற்கனவே முறைப்பாடுகள் வந்தாலும் நோயாளியை எலிகள் கடித்துக் குதறி இருப்பது இதுதான் முதல் முறை என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## பண மோசடி செய்த நைஜீரியர்கள் இருவர் கைது

காரைக்காலில் ரூபாய் நோட்டுகளை அமெரிக்கன் டொலராக மாற்றித்தருவதாக மோசடி செய்த இரு நைஜீரிய பிரஜைகளை பொலிஸார் கைது செய்தனர்.

காரைக்காலில் சேகர் என்பவரை அணுகிய நைஜீரிய பிரஜைகள் இருவர், தங்களிடம் உள்ள இரசாயனத்தை ரூபா நோட்டு ளில் தடவினால் அது அமெரிக்க டொலராக மாறும் எனக் கூறி ரூ. 5 ஆயிரம் வாங்கி மோசடி செய்துள்ளனர். இதுதொடர்பாக பொலிஸில் கொடுக்கப் [illegible] இரு நைஜீரியப் பிரஜைகளை காரைக்கால் பொலிஸார் கைது செய்தனர்.

---

**கொங்கோ உள்நாட்டுப் போர்**

## இந்தியப் படைகளின் பாலியல் விவகாரம் விரைவில் தீர்ப்பு வெளியிடப்படும்

ஆபிரிக்கா நாடான கொங்கோவில் நடைபெற்ற உள் நாட்டுப்போரில் அந்த நாட் டுப் பெண்களிடம் தவறாக நடந்து கொண்ட இந்திய அதிகாரிகள் குறித்த விசாரணையில் விரைவில் தீர்ப்பு வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள் ளன.

1997 - 1999 ஆம் ஆண்டு வரை கொங்கோவில் நடைபெற்ற உள்நாட்டுப் போரை கட்டுப்படுத்தவும் அமைதியை நிலைநாட்டவும் ஐ.நா. சபை தலைமையின் கீழ் பணியாற்ற இந்திய அமைதிப்படையின் 4000  படையினர் அங்கு சென்றனர்.

இதில் 2007 - 2008ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட 6 சீக்கிய படைகள் கொங்கோ பெண்களிடம் தவறாக நடந்து கொண்டதாக குற்றச் சாட்டு எழுந்தது.

அதன்பின்னர் இது குறித்து விசாரணை நடத்த பிரிகேடியர் தலைமையின் கீழ் ஒரு கலோனல் விசாரிக்க ஐ.நா. உத்தரவிட்டது.

மேற்படி குற்றச்சாட்டு குறித்த விசாரணை முடிவடைந்த நிலையில், அது குறித்த தீர்ப்பை கலோனல் விரைவில் அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல், 2010 ஆம் ஆண்டு மேஜர் ஒருவர் கொங்கோவில் உள்ள ஒரு விடுதியில், பாலியல் தொழிலாளர்களுடன் தங்கியிருந்தார் என்ற குற்றச் சாட்டும் எழுந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசமுறைப் பயணமாக கனடாவுக்குச் சென்ற ஜமைக்கா பிரதமர் போர்டியா சிம்ப்சனை, நாடாளுமன்ற மண்டபத்தில் உற்சாகமாக வரவேற்கும் கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர்.

**லெபனான் கார்க்குண்டு வெடிப்பு**

## விசாரணைகளுக்கு அமெ. ஒத்துழைக்கும்



லெபனானின் பெய்ருட் நகரில் நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள தாம் ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்கா தெரிவித் துள்ளது.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் இது தொடர்பில் லெபனான் பிரதமருக்கு தொலைபேசி மூலம் தெரியப் படுத்தியுள்ளார்.

கார்க்குண்டுத் தாக்குதலில் புலனாய்வுப் பிரிவின் தலைவர் விஸ்ஸாம் அல் ஹசன் கொல்லப்பட்டதை அடுத்து, லெபனானில் பதற்றம் அதிகரித்துள்ளது.

லெபனான் அரசுக்கு எதிராக பல்வேறு பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதேவேளை சிரியாவே தாக்குதலுக்கு காரணம் என கடுமையாக விமர்சித்துள்ள எதிர்க்கட்சிகள், தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.(வ)



## கட்டடத்தில் தீ

**மக்காவில் 13 பேர் காயம்**

சவூதி அரேபியாவில் உள்ள மக்காவில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 13 பேர் காயமடைந்தனர்.

ஹஜ் பயணம் மேற்கொண்ட இந்தியா மற்றும் மியன்மார் நாட்டைச் சேர்ந்தவர்கள், மக்காவிலுள்ள 9 மாடிக் கட்டடம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி கட்டடத்தின் நான்காவது மாடியிலுள்ள அறை ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

பத்துக்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீ மேலும் பரவாமல் கட்டுப்படுத்தப் பட்டது.

அங்கிருந்த 179 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். காயமடைந்த 13 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.(வ)

## லெபனானில் மீண்டும் வெடித்தது மோதல்

**9 வயதுச் சிறுமி உட்பட 3 பேர் காயம்**




லெபனான் தலைநகர் ட்ரிபலிக்கு வடக்கே மீண்டும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 9 வயதான சிறுமி உட்பட மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

லெபனானின் பாதுகாப்பு அதிகாரி விசம் அல் ஹசனின் இறுதிக்கிரியைகளை அடுத்தே மேற்படி மோதல்கள் இடம்பெற்றன.

குறித்த மோதல் சம்பவத்தின்போது பிரதமரின் செயலகத்தை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்கும் நோக்கில் பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியதுடன், துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை லெபனானில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பின் போது, பாதுகாப்பு அதிகாரி விசம் அல் ஹசன் உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.

மேற்படி தாக்குதலுக்கு சிரிய நிர்வாகத்தின் மீது குற்றம் சாட்டப்பட்டதுடன், பிரதமர் நஜீப் மிக்காட்டி பதவி விலக வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

(வ)

# வடகொரியாவின் மிரட்டலுக்கு பணிந்தது தென்கொரியா

**வட கொரியாவுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பலூன்கள் பறக்கத் தடைவிதித்தது தென்கொரியா**



வடகொரியாவுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பலூன்களைப் பறக்கவிட தென்கொரியா தடை விதித்தது.

வடகொரியாவுக்கும், தென்கொரியாவுக்கும் இடையே நீண்ட காலமாக பிரச்சினை இருந்து வருகி றது.

இந்தநிலையில் கடந்த 19 ஆம் திகதி வடகொரிய இராணுவம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

வடகொரியாவில் இருந்து சென்று தென்கொரிய எல்லைப் பகுதியில் வசிக்கும் மக்கள், எங்களுக்கு எதிராக பலூன்களைப் பறக்கவிட்டு போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

அவர்கள் அங்கிருந்து வெளியேறி விடவேண்டும். இல்லாவிட்டால் எந்த வித இரக்கமும் இன்றி இராணுவத் தாக்குதல் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தது.

கடந்த 22ஆம் திகதி முதல் தென்கொரியாவின் பஜு நகரின் அருகே எல்லைப் பகுதியில் தாக்குதல் நடத்த இருப்பதாகவும் வடகொரியா மிரட்டல் விடுத்திருந்தது.

இதனால் ஏற்பட்ட பதற்றத்தை தணிக்க பலூன்களைப் பறக்கவிட தடை விதித்து தென்கொரியா நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

அத்துடன் எல்லைப் பகுதியில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர். வீதிகளை மூடி நிலை மையைக் கண்காணித்து வருகின்றனர்.

இதுகுறித்து போராட்டக்காரர் பார்க் சாங்-ஹேக் கூறுகையில்,

இது வடகொரியா மிரட்டலுக்கு பயந்து சரணடைந்ததற்குச் சமம். நாங்கள் வேறுபகுதியில் இருந்து பலூன்களைப் பறக்கவிட முயற்சி செய்வோம் - என்றார்.

இதற்கிடையே வடகொரியா தாக்குதல் நடத்த இராணுவத்தை குவித்துள்ளதாக வந்த தகவலை தென்கொரியா இராணுவ அமைச்சகம் மறுத்துள்ளது. எத்தகைய தாக்குதலையும் சமாளிக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது. (வ)

### கனடாவில் மூன்று நகரங்களில் இடைத்தேர்தல்

கனடாவின் விக்டோரியா, கேல்கரி மற்றும் ஒன்டாரியோ நகரங்களுக்கு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளதாக பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் தெரிவித்தார்.

விக்டோரியா நகரத்தின் சட்டமன்ற உறுப்பினரான டெனிஸ் சவோயி உடல் நலக் குறைவு காரணமாக தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

கேல்கரி மையத்தின் சட்டமன்ற உறுப்பினரான கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த லீ ரிச்சர்ட்சன் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இதே போன்று முன்னாள் அதிகாரம் பெற்ற அமைச்சராக இருந்த பெவ் ஓடா என்ற பெண், அதிக செலவுகள் செய்தார் என்ற விமர்சனம் எழுந்ததையடுத்து, டர்ஹாம் மாநில சட்டமன்ற உறுப்பினர் பதவி விலகினார்.(வ)

## சிறைச்சாலையைப் பார்வையிட ஈரான் ஜனாதிபதிக்குத் தடை

**சட்டத்துறை அதிகாரிகள் விதித்தனர்**



ஈரான் தலைநகர் டெஹரானில் உள்ள ஈவின் சிறைச்சாலைக்குள் அந்த நாட்டு ஜனாதிபதி மொஹமட் அஹமடி நிஜாட் செல்வதற்கு ஈரான் சட்டத்துறை அதிகாரிகள் தடை விதித்துள்ளனர்.

கடந்த மாதம் ஜனாதிபதி மொஹமட் அஹமடி நிஜாட், நியூயோர்கில் இருந்தபோது அவரது நெருங்கிய உதவியாளர் ஒருவர் சிறையிலடைக்கப்பட்டார்.

அவரை சிறைச்சாலையில் பார்வையிடுவதற்காக ஜனாதிபதி சென்றபோதே மேற்படி தடையை அதிகாரிகள் விதித்தனர்.

நாடு பொருளாதாரம் உட்பட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கும் வேளையில் அவர் அங்குச் செல்வது இந்த தருணத்தில் உகந்தது அல்லவென காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதிக்கு விதிக்கப்பட்ட மேற்படி தடையின் மூலம் அவரது அதிகாரங்கள் மட் டுப் படுத்தப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித் துள்ளனர்.

கடந்த ஏழு வருட காலமாக ஜனாதிபதியாக இருந்து வரும் மொஹமட் அஹமடி நிஜாட், இப்படியான தர்ம சங்கடமான நிலையை எதிர் நோக்கி இருக்கவில்லை எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (வ)

### அல்குவைதா சந்தேகநபர்கள் 11 பேர் கைது

அல்குவைதா இயக்கத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 11 பேர் ஜோர்தானில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்குலக நாடுகளின் அதிகாரிகள் மற்றும் சொத்துக்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு திட்டம் தீட்டியிருந்ததாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் பொலிஸ் பாதுகாப்பில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். சிரியாவிலிருந்து ஆயுதங்களை எடுத்து வந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (வ)

## செய்தியாளர்களை முதன்முறையாக சந்தித்தார் மியன்மார் ஜனாதிபதி



மியன்மார் ஜனாபதிபதி தெய்ன் சீன் முதன் முறையாக செய்தியாளர்களை சந்தித்தார்.

மியன்மாரில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து ஜனநாயகம் மலர்ந்துள்ள நிலையில், தற்போதைய அரசு பல்வேறு கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வருகிறது. இந்த நிலையில், ஜனாதிபதி தெய்ன் சீன் முதன்முறையாக செய்தியாளர்களைச் சந்தித்தார்.

தலைநகர் நாபிடாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரண்டு மணித்தியாலம் இடம்பெற்ற மேற்படி சந்திப்பின் போது செய்தி யாளர்கள் எழுப்பிய 30 கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். அரசின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டு, வெளிப்படைத் தன்மை உருவாகி வரு வதை குறித்த சந்திப்பு உணர்த் தியது.

முதலில் சற்று பதற்றத்துடன் காணப்பட்ட ஜனாதிபதி பின்னர் சுதாகரித்துக் கொண்டு, செய்தியாளர்களிடம் நகைச்சுவையுடன் பேசினார். அப்போது அவர் கூறுகையில், ''நான் வெளி நாடு சென்றிருந்தபோது பி.பி.சி. செய்தி நிறுவனம் என்னைப் பேட்டி கண்டது. அப்போது செய்தியாளர்களை எதிர்கொண்டு பதிலளிப்பது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அதன் பின் நான் பல முறை வெளி நாட்டுச் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்துள்ளேன்.

எனினும், உள்நாட்டில் பேட்டி தராதது குறித்து இங்குள்ள செய்தியாளர்கள் விமர்சிப்பார்கள் என்ற அச்சம் காரணமாகவே இந்தச் சந்திப்புக்கு சம்மதிப்பேன்'' என்று அவர் தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் வழங்கவில்லை; இத்தாலி விஞ்ஞானிகள் 6 பேருக்குச் சிறை

இத்தாலியில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற நில அதிர்வு தொடர்பாக அந்த நாட்டு விஞ்ஞானிகள் ஆறு பேருக்கும் முன்னாள் அரச அதிகாரியொருவருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய நீதிமன்றம் ஒன்றால் பல கொலைக் குற்றச்சாட்டுக்களில் அவர்கள் குற்றவாளிகளாக காணப்பட்டுள்ளதாக பி.பி.ஸி செய்தி வெளியிட்டுள்ளது.

நிலநடுக்கத்துக்கு முன்னர் அதுகுறித்த சரியான தகவல்களை மக்களுக்கு வழங்கவில்லை என்ற குற்றச் சாட்டை அரசதரப்புச் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, 6.3 ரிக்டர் அளவில் உணரப்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்த 309 பேரை இவர்கள் கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. (வ)

# தீவிரவாதிகள் தாக்குதல்

## நைஜீரியாவில் இராணுவத்தினர் 32 பேர் சாவு



நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள பொடிஸ்கும் நகரில் போகோ ஹரம் என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நடத்திய தாக்குதலில் 32 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

போகோ ஹரம் என்ற இஸ்லாமிய தீவிரவாத அமைப்பொன்று, நைஜீரி யாவில் ஷரியா சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டி அந்த நாட்டு இராணுவத்தினருடன் போரிட்டு வருகின்றது.

கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வரும் இந்தப் போர் காரணமாக பொது மக்கள் இடம்பெயர்ந்தும் வருகின்றனர். நைஜீரியாவின் வடக்கில் முஸ்லிம்களும் தெற்கில் கிறிஸ்தவர்களும் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

2010 ஆம் ஆண்டிலிருந்து வடக்குப் பகுதியில் நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக இதுவரை 1400 பேர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாணவி மீதான துப்பாக்கிச் சூடு

## ஆப்கனின் உதவியை நாடுகிறது பாகிஸ்தான்

பாகிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராகப் போராடிய சிறுமி மலாலா யூசுப்சாய் மீது தாக்குதல் நடத்திய தலிபான் அதிகாரி மௌலானா பஸ் லுல்லாவைக் கைது செய்ய ஆப்கனிஸ்தான் உதவ வேண்டும் என்று பாகிஸ்தான் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அண்மையில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கனிஸ்தானுக்கான அமெரிக்காவின் சிறப்புத் தூதர் மார்க் கிராஸ் மேன் இஸ்லாமாபாத் சென் றார்.

அவரைச் சந்தித்த பாகிஸ்தான் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹினா ரப்பானி கர்,

சிறுமி மலாலா மீது தாக்குதல் நடத்திய சம்பவத் தில் தலிபான் அதிகாரி முல்லா பஸ்லுல்லாவுக்குத் தொடர்புள்ளது.

அவர் தற்போது ஆப்கனின் குனார் மாகாணத்தில் பதுங்கியுள்ளார். அவரைப் பிடித்து பாகிஸ்தானிடம் ஒப்படைக்க ஆப்கனிஸ்தானை அமெரிக்கா நிர்ப்பந்திக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். கடந்த ஒரு வருடத்தில் மட்டும் பாகிஸ்தான் பகுதியில் 15 தாக்குதல்களை மௌலானா பஸ்லுல்லா நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அல்குவைதா இரண்டாம் நிலை தலைவர் கொல்லப்படவில்லை

### அம்பலப்படுத்தியது காணொலி

அமெரிக்க விமான படையின் தாக்குதலில் கொல்லப்பட்டதாக கருதப்பட்ட அல்குவைதா இயக்கத்தின் இரண்டாம் கட்டத் தலைவர் சயீத் அல் ஷிஹிரி உயிருடன் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த மாதம் இடம்பெற்ற அமெரிக்க விமானப் படையின் தாக்குதலில் சயீத் அல் ஷிஹிரி கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது வெளியாகி உள்ள காணொலி தகவலில் பேசும் இளைஞர் தன்னை சயீத் அல் ஷிஹிரி என்று அறிமுகம் செய்து கொண்டு, அப்பாவி முஸ்லிம்களைக் கொன்றதை மறைப்பதற்காக தன்னை கொன்றதாக அமெரிக்கா வதந்தி ஏற்படுத்தியுள்ளது என்று கூறியுள்ளார்.

அல் ஷிஹிரியும், அவருடன் பயணம் செய்த 6 பேரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டதை ஏமன் அதிகாரிகள் உறுதி செய்தமை குறிப்பிடத்தக்கது.

## விண்கற்களை மோதி அழிக்க ரொக்கெட் தயாரிக்கிறது ரஷ்யா

பூமியை தாக்கி மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விண்கற்களை அழிப்பதற்காக விண் ரொக்கெட்டுகளைத் தயாரிக்கவுள்ளதாக ரஷ்யாவின் பிரதான ரொக்கெட் மற்றும் விண்வெளி ஆய்வு அமைப்பு திட்டமிட்டுள்ளது.

பூமியைத் தாக்கி மிகப் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விண்கற்கள் விண்வெளியில் இருக்கக்கூடும். எனவே அவற்றை பூமிக்கு வெளியே விண் வெளியிலேயே மறித்து வெடிக்கச் செய்வதன் மூலம் திசை திருப்பவோ அல்லது முழுவதுமாகவோ அழிக்கக் கூடிய விண் ரொக்கெட்டுக்களைத் தயாரிக்கவுள்ளது.

விண்வெளியில் அபோபிஸ் உட்பட மிகப் பெரிய 3 விண்கற்களின் பயணப் பாதை பூமியின் சுற்றுப் பாதையில் இன்னும் சில தசாப்தங்களில் குறுக்கிட உள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

பூமியின் சுற்றுப் பாதைக்குள் வரும் இந்த விண்கற்கள் பூமியுடன் மோதுவதற்கான சாத்தியக் கூறு மிக அதிகமாகவே உள்ளது.

இதனால் அவற்றை வழியில் மறித்து சிதைக்காமல் விட்டால் அவை மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தக் கூடும் என்பதுடன் கடலில் இவை முழுமையாக விழுந்தால் சுனாமி ஏற்படக் கூடும் எனவும் எச்சரிக்கப்படுகின்றது. (வ)



(சி/4291)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(16)

அலுவலகங்களை குளிரூட்டல் செய்து வெப்பத்தைத் தடுத்து மற்றவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி தமது வேலைகளை முடித்துக்கொள்கிறார்கள்.



வெப்பம் மிகுந்த நேரத்தில் பொதுவாக எல்லோரும் சிடுசிடு வென்று இருப்பார்கள். ஆகையால் அந்த நேரத்தை யாரும் தேர்ந்தெடுக்கக் கூடாது.

மனைவி கூடக் கணவனிடம் ஒரு புது சேலை வேண்டுமென்றோ, குளிர்சாதனப்பெட்டி வாங்க வேண்டுமென்றோ, பிறந்த நாளுக்குப் பரிசு வாங்க வேண்டுமென்றோ கேட்க சரியான நேரத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். காலையில் சிற்றுண்டி சாப்பிட்டதும் மனம் தெளிவாக அமைதியாக இருக்கும். மகிழ்ச்சியான அந்த நேரத்தில் எதைக் கேட்டாலும் வெற்றி பெறமுடியும். அல்லது மாலையில் வீடு திரும்பியதும் கோப்பி குடித்து ஓய்வு எடுத்துக்கொள்ளும் நேரத்தில் கேட்கலாம். மாறாக-

அலுவலகத்தில் ஏதாவது பிரச்சினை பெரிதாக இருக்கும் போதோ, பண நெருக்கடியான நேரத்திலோ, ஊதிய உயர்வு கிடைக்காத நேரத்திலோ எதைக் கேட்டாலும் பெறமுடியாது. அதற்குப் பதில் வசைகள் தாம் கிடைக்கும்.

முதலாளியிடம் சம்பள உயர்வு கேட்கும் ஊழியர்கள் கூட, சரியான நேரத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிற்பகல் நேரம், வெப்பம் தணிந்தபின், அவர் சாப்பிட்டு முடித்த பிறகு சந்தித்துப் பேசினால் வெற்றிகரமாக முடியும். சம்பள உயர்வை உடனே கொடுக்க முடியாவிட்டாலும், ''இப்போது கொடுப்பதற்கில்லை. ஆனால் உன் விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்கிறேன். சந்தர்ப்பம் வரட்டும்'' என்று நம்பிக்கையுடன் பேசுவார்.

பொதுவாக கோடை காலங்களில்-தாங்க முடியாத வெயில் காலத்தில் தான்-கொலைகளும், குற்றங்களும் மிக அதிகமாக நடக்கின்றன என்பது பொலிஸ் திணைக்களத்தின் கருத்து.

வெப்பம் அதிகமான நேரத்தில், நல்ல காற்றை சுவாசிக்க முடியாத நேரத்தில், மனிதன் சிறிய விஷயங்களுக்கெல்லாம் சீற்றம் அடைகிறான். கோபம் அதிகமாகும் போது வீண் சண்டைகளும், ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதும், இதனால் கொலைகள் நடப்பதும் அதிகமாகின்றன.

பெண்கள் கூட கோடை காலத்தில் பிள்ளைகளைப் பெற விரும்பமாட்டார்கள். ஆகையால்தான் மகிழ்ச்சியான பருவ காலங்களில் பிள்ளைகள் பிறக்கும்படி திட்டமிட்டு உடலுறவு கொள்கிறார்கள். பிள்ளைகள் வேண்டாம் என்று எண்ணும் போது கற்பத்தடை முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள்.

திருமணம் செய்து வைக்கும் காலங்களைக்கூட அந்தக் காலத்திலிருந்தே தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறார்கள். பருவநிலை மோசமாக இருக்கும் போது திருமணங்கள் நடத்தப்பட்டால் மகிழ்ச்சி நிலவுவதில்லை.

அதேபோல மன்னர்களும் போர் தொடுப்பது என்றால், எந்தக் காலத்தில் போர் தொடுக்க வேண்டும், எந்தப் பருவங்களில் போர் தொடுத்தால் வீரர்கள் வெற்றியுடன் போராடுவார்கள் என்று திட்டமிட்டு செயலாற்றி வந்தார்கள்.

சோதிடம் சொல்பவர்கள் கூட எந்த ஒரு நல்ல செயலையும் செய்து முடிக்கச் சரியான பருவகாலங்களையே குறித்துக் கொடுப்பார்கள்.

தொழில் தொடர்பாகவோ, சொந்த விடயமாகவோ மற்றவர்களை அணுகும்போது, பருவநிலை எப்படி இருக்க வேண்டுமென்று கண்டுபிடிப்பது மிகமிக சுலபம்.

ஒரு குறிப்பிட்ட பருவநிலையில் உங்களால் மகிழ்ச்சியாக இருக்க முடிகிறதா? முடிந்தால் சரி. அதே நேரத்தில் மற்றவர்களும் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதை நினைவில் வைத்துக்கொண்டால் போதும். எதையும் வெற்றிகரமாக சாதிக்க முடியும். நினைத்தவைகளை மற்றவர்களிடமிருந்து பெறமுடியும்.

**மற்றவர்களை நமது வழிக்குக் கொண்டுவர முடியுமா?**

மற்றவர்களை நமது வழிக்குக் கொண்டு வர வேண்டுமென்றால்,மற்றவர்களுக்கு என்ன பிடிக்கும் என்பதை முதலில் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் நமது இலட்சியம் நிறைவேறும், நாம் நம்மைப் பற்றியே நினைப்பதைவிட மற்றவர்களைப் பற்றியும் நிறைய நினைக்க வேண்டும்.

மீன் பிடிக்க வேண்டுமென்ற ஆசை ஒருவனுக்கு வந்துவிட்டது. அவன் வீட்டிலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் ஒரு பெரிய ஏரி இருந்தது. சாதாரண ஏரி அல்ல. கடல் போன்ற ஏரி. என்றும் வற்றாத ஏரி. அதில் மீன்கள் ஏராளமாக இருப்பதைக் கண்கூடாகப் பார்த்தான். கெண்டை மீன்களும், விரால்களும் தண்ணீரின் மேல்மட்டத்தில் துள்ளிக் குதித்தன. ஆனால் அவைகளைப் பிடிக்கத் தூண்டில் வேண்டுமே? விலை மிகுந்த நைலோன் தூண்டிலை வாங்கினான்.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# தோல்வியில் இருந்து ஒரு பாடத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்

## தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் தெரிவிப்பு

சங்கானை,ஒக்.24

தோல்வியில் இருந்து ஒரு பாடத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் ஒவ்வொரு முறை சறுக்கும் போதும், நாம் இன்னும் புத்திசாலிகளாகி விடமுடியும் என்று தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் தெரிவித்தார்.

புத்திசாலித்தனம், திறமை, தந்திரோபாயம் ஆகியவற்றுடன் தன்னம்பிக்கையும், விடாமுயற்சியுமே சாதனைக்கான வழியாகும். இந்தப் பண்புகளை இளைஞர்கள் கைக்கொண்டு,சாதனைகளைப் படைக்க வேண்டும் என, நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இளைஞர்களுக்கான வலுவூட்டல் செயலமர்வில் பிரதம வளவாளராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே தனபாலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எந்த ஒரு இலக்கையும் அடைய விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் தேவை. நம் குறிக்கோள்களின் மீது முழு நம்பிக்கை வைக்கும்போது, இப் பண்புகள் நமக்கு அவசியமாகின்றன என்பது தெரிந்துவிடும். பார்க்கப்போனால் திட்டமிடுதலும், செயற்படுத்தலும், ஆரம்பித்து வைத்ததைச் சரியாகவும் வெற்றிகரமாகவும், முடித்து வைப்பது தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும்தான்.

தோல்விகள் பல எமக்கு ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு தோல்வியிலிருந்தும் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறை சறுக்கும்போதும் இன்னும் அதிகம் புத்திசாலியாகிவிடவேண்டும். ஒவ்வொரு முறை தோல்வியைச் சந்திக்கும் போதும், ஒவ்வொரு முறை நட்டப்படும் போதும் வெற்றியை நோக்கி இன்னுமோர் அடி எடுத்து வைத்தாயிற்று என்பதை உணர முடியும் என்று ஐபிஎம் நிறுவனத்தை ஸ்தாபித்த ஜே.வாட்சன் கூறுகின்றார்.

தற்காலிக சறுக்கல்களை இளைஞர்களாகிய நீங்கள் தோல்வி என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்ள ஒரு சந்தர்ப்பமாக அதை எடுத்துக் கொள்ளுங்கள். தோல்விகள் ஒருவனை உறுதியானவன் ஆக்குவதற்கும், சிறந்தவனாக்குவதற்கும் தயார் செய்கின்றன. தோல்வியிலிருந்தே நிறைய வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுக் கொள்ள முடிகின்றது. பெரும் சாதனையாளர்கள் அனைவருமே தோல்வியின் கசப்பைச் சுவைத்தவர்கள் தான்.

தம் செயல்களில் சிறு தடைகள் ஏற்படின் பெரும்பாலானோர் அந்த முயற்சியைக் கைவிட்டு விடுகின்றார்கள். எப்போது சிரமங்கள் தோன்றுகின்றனவோ, அப்போதே தம் கனவுகளையும், இலட்சியங்களையும் கழற்றி எறிய சிலர் தயாராகின்றார்கள்.

கல்வி, பொருளாதாரம், கலை, கலாசாரம், பண்பாடு, மொழி, விளையாட்டு ஆகிய துறைகளில் இளைஞர்கள் சாதனை படைக்க வேண்டியவர்கள். தோல்விகளையும், சோதனைகளையும், துயரங்களையும் தாண்டி வரும் போது கிடைக்கும் அனுபவம் தான் வெற்றியை நிதர்சனம் ஆக்குகின்றது - என்றார்.

(எ-29)



தென்மராட்சிக் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட உலக உளநல நாள் நிகழ்வில் நடைபெற்ற இன்றைய இளம் பிள்ளைகளிடையே விழுமியப்பண்புகள் வீழ்ச்சியடைந்து செல்கின்றனவா? என்ற தலைப்பிலான கருத்தாடல் நிகழ்வில் கைதடி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியோர்களும் பாடசாலை மாணவர்களும் வாதத்தில் ஈடுபடுகின்றனர். (த-17)

# கல்வியில் வளர்ச்சி அடைவதற்கு பாடசாலை களமாக அமைகின்றது

## சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவிப்பு

காரைநகர்,ஒக்.24

கல்வியில் வளர்ச்சி அடைவதற்கும், ஆளுமை விருத்தியடைவதற்கும் பாடசாலைகள் களமாக அமைகின்றன. மாணவர்கள் கற்றலோடு மட்டும் நின்றுவிடாது, விளையாட்டு மற்றும் பாடசாலை செயற்பாடுகளிலும் ஈடுபாடு காட்டுவதன் ஊடாக முழுமையான மாணவராக வெளிவர முடியும்.

பாடசாலையில் மாணவர்கள் நேரத்தைச் செலவு செய்கின்றனர். அந்த நேரத்திற்குள் மாணவர்கள் எதிர்பார்க்கும் கல்வியை ஆசிரியர்கள் வழங்கினால், மாலை நேரங்களில் விளையாட்டு போன்ற துறைகளில் ஈடுபட முடியும் என்று கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் அ.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் பரிசுத்தின விழா, கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சர்வேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**மாணவர்களை சிறந்த முறையில் வளர்க்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிடம் உள்ளது.**

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எல்லா வளர்ச்சியையும் கல்வியால்தான் பெற முடியும். கல்வியினால் தனிமனித முன்னேற்றத்தை அடைய முடியும். தனி மனித முன்னேற்றம் நாட்டின் அபிவிருத்திக்கு அடித்தளமாக அமையும்.

கட்டடங்களும், பௌதிக வளங்களும் இருந்தால் மட்டும் அதனைப் பாடசாலையாக கருத முடியாது. சிறந்த அதிபர், ஆசிரியர்கள் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் தமக்குக் கிடைத்த சேவையாக நினைத்து கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களை சிறந்த முறையில் வளர்க்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிடம் உள்ளது. சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் செய்கின்ற பங்களிப்பாக இதனை மேற்கொள்ள வேண்டும்.

பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்விக்கு நிறைந்த பங்களிப்பினை வழங்க வேண்டும். அவர்களின் கல்விக்காக பெற்றோர் பல தியாகங்களைச் செய்ய வேண்டும். பெற்றோர்கள் தங்களுக்கிடையே சண்டை போடுதல், தொலைக்காட்சி பார்த்தல், பிள்ளைகளை வீட்டில் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தல் போன்றவற்றை முற்றாக தவிர்க்க வேண்டும்.

தொடர்புகளை ஏற்படுத்த ஆங்கிலக் கல்வி அவசியம். சுய தொழிலை மேற்கொள்வது என்றாலும் கூட ஆங்கிலமும் கணினியும் அவசியமாக அமைகின்றன. இந்த இரண்டும் இன்றி எதிர்காலத்தில் பிரகாசிக்க முடியாது. எனவே மாணவர்கள் ஆங்கிலத்தையும் கணினியையும் சிறுவயது முதல் கற்க ஆரம்பிக்க வேண்டும் என்றார்.

(எ-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# உரிமைகளை அடைய தயங்காத தமிழர்

மாதகல் மேற்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 20 வருடங்களாக இலங்கைக் கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தப் பகுதி விடுவிக்கப்பட்டதையடுத்து தமது சொந்த இடங்களுக்கு சென்றிருக்கிறார்கள் மாதகல் மேற்கு மக்கள்.

மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்படாமைக்கு எதிராக மாதகல் மேற்கு மக்களால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுவையடுத்து அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர கடற்படை அனுமதி வழங்கியுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 212 குடும்பங்களுக்கும் 1992 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 20 வருடங்கள் கழித்து சொந்த மண்ணில் கால் பதித்த சந்தோசம் இருந்தாலும் அவர்களது வீடு வாசல்கள், காணி பூமிகளைப் பார்க்கும் போது பெரும் மன வேதனைதான். காரணம் வீடுகள் கடுமையான சேதத்துக்கு உள்ளாகி மோசமான நிலையிலுள்ளன. கூரைகள் பிடுங்கி எடுக்கப்பட்டுள்ளன. கதவுகள், யன்னல்கள் உடைத்து அகற்றப்பட்டுள்ளன. அதேபோன்று காணிகள் பற்றைக் காடுகளாக புதர்மண்டிக் கிடக்கின்றன.

இனி இவற்றையெல்லாம் சீராக்கிக் கொண்டு ஒரு சகஜ வாழ்வுக்கு திரும்புவதற்கு அவர்களுக்கு இன்னும் 2, 3 வருடங்கள் பிடிக்கும்.

போர் முடிவடைந்து 3 ஆண்டுகள் கடந்த போதும் சொந்த வீடுகளுக்குச் செல்லவோ, சொந்தக் காணிகளைப் பார்க்கவோ இவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் பெரிதும் மனமுடைந்து போய் இருந்த மாதகல் மேற்கு மக்கள் தமது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் கடந்த 15ஆம் திகதி வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார்கள். இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அடுத்த மாதம் வரை ஒத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் அந்தப் பகுதியில் மீளக்குடியமர மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட விடயத்தை அறிந்து கொண்ட பாதுகாப்புத் தரப்பு உடனடியாக அந்தப் பிரதேசத்தை மீள்குடியமர்வுக்கு விடுவிக்கத் தீர்மானித்ததாக தெரியவருகிறது. இந்தச் செயற்பாடு மூலம் தமிழர்கள் இலங்கை அரசிடம் இருந்து எதையாவது பெற வேண்டுமானால் அவற்றை வெறும் கோரிக்கைகளாக முன்வைப்பதில் பயன் இல்லை. நீதிமன்றம் மூலம் சென்றாலே அவர்களுக்கான உரிமைகள் கிடைக்கும் என்பது நிரூபணமாகியுள்ளது.

எனவே இலங்கை அரசிடம் இனிமேல் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. எதையும் சட்ட ரீதியாக அணுகுவதன் மூலமே அடைந்து கொள்ள முடியும் என்பதை மாதகல் மேற்கு மக்களின் மீள்குடியமர்வு எடுத்துக் காட்டுகிறது. தமது உரிமைகளைப் பெறுவதற்காகத் தமிழர்கள் இப்போது நீதிமன்றை நாடும் அளவுக்குத் துணிந்து விட்டார்கள். உரிமைகள் பறிக்கப்படும் இடத்து அவர்கள் அதற்கு எதிராகக் குரல் எழுப்பவும் அவற்றை அடைவதற்கான வழிவகைகளை நாடுவதற்கும் தயங்க மாட்டார்கள் என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு.

# மீள் மையவாக்கம்– நினைத்ததும் நடப்பது

செந்தூரி

தேசமொன்றின் கொள்கை வகுப்பாளர்களின் முக்கியத்துவமும், அசாத்திய எதிர்வு கூறும் திறனும் வெளிப்படும் சந்தர்ப்பம்-பலமானதொரு எதிர்க்கட்சியின் வினவும் ஆற்றலின் போதேயாகும். விமர்சிக்கப்படும் அல்லது விவாதிக்கப்படும் என்று எதிர்பாக்கப்படுகின்ற சகல "பொத்தல்' களையும், சட்டவாக்கங்களினால் திறமையாக அழைத்து மூடுகின்ற கொள்கை வகுப்பாளர்கள் என்றைக்குமே தேசங்களின் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள். ஆனால் கொள்கை வகுப்பாளர்களினதும், சட்டவாளர்களினதும் கட்டமைப்புக்களின் நீடித்து நிலைக்கும் தன்மை பற்றியதாக கடுமையான வீறாப்பு காட்டிவிடுவது முடியாத காரியம். பாதுகாப்பு, கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், அறிவியல், வேளாண்மை போன்ற உப அரசதுறைகளை உதாரணமாகக் கொள்கையில் எல்லைகளால் குறித்தொதுக்கப்பட்ட தேசமொன்றினது முறையே பாதுகாப்புக் கொள்கை, கல்விக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை போன்று இன்னபிற யாவையுமே குறைந்தது இன்னுமொரு தேசத்தின், அல்லது பிராந்தியத்தின் அல்லது கண்டத்தின் செல்வாக்கினை சேர்த்துச் சுமக்கும் தேவையுடையவை என்பது தெளிவாகும்.

நடைமுறைச் சம்பவங்களோடு இயைந்து விரித்துரைப்பதாயின், சீனாவின் பிராந்திய நலன்களுக்காக முள்ளிவாய்க்காலில் மூர்க்கக் கொலைகளை நடத்திய 'பாதுகாப்புக் கொள்கை'யும், இந்தியப் பல்கலைக்கழகங்களின் அகலக்காலுக்காக இலங்கையின் இலவசக் கல்விக்கு வேட்டு வைக்க எழுந்துள்ள "கல்விக் கொள்கை'யும், 'அமரிக்க டொலரின் கேள்வித் தன்மையின் உறுதி மத்திய வங்கி தனியார் வங்கிகளுக்குள் தலையிட்ட 'பொருளாதார கொள்கை'யும் இலங்கை என்கின்ற எல்லைகளுக்கப்பால், கர்த்தாவாக இருக்கும் விருப்பமுடையவர்களுக்காக இயற்றப்பட்ட அசைவுகள் என்பது தெளிவாகும்.

மாகாண சபைகள் என்கின்ற விடயத்திலும் இலங்கையின் மத்திய அரசினது, 'இழி மையவாக்கம்' (Decentralization) என்கின்ற மாற்றம் 1987 ஆம் ஆண்டுப் பகுதியில் பெரும்பான்மைச் சிங்களவர்களின் பூரண நல்லாசிகளுடன் ஏற்படுத்தப்பட்ட ஒன்றல்ல! சிறுபான்மையினருக்கான குறிப்பாக வடகிழக்கு தமிழர்களுக்கான "அதிகார வலு உருவாக்கம்" ஒன்றுக்கான ஆவண மயப்படுத்தப்பட்ட தீர்வாக கொண்டு வரப்பட்ட சட்ட திருத்தம். "நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே..." என்பதாய் இலங்கையின் 9 மாகாணங்களுக்கும் "பொசிந்த" என்பதே 'ஸ்கானிங்' உண்மை.

செறிவிழப்பு(Deconcentration), பகிர்வு ( Delegation) பகிர்வு (Devolution), போன்ற மாகாணசபை உருவாகிகளின் பின்னான, பொன்னான வாய்ப்புக்களை வட-கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு பெரும்பான்மை மாகாண சபைகளும் ஆசை தீர ஆண்டனுபவித்து மகிழ்ந்தனவாயினும், வடக்குக் கிழக்கும் இணைந்த தனித்தமிழீழத்துக்கான மொட்டு, பூத்துக் காய்த்து கனிந்து விடுமோவென்கின்ற "பிரமாண்ட பயம்", அவர்கள் அத்தனை பேரினதும் தூக்கத்தினை ஒருமித்துக் கெடுத்தது.

தமிழர்களுக்கான 'தனித்தேசம்' அன்றில் அதற்கிணையான தனித்த மாநிலம் ஒன்று கொடுக்கப்படுவதற்கான வாய்ப்பாக தெரிந்த "வடகிழக்கு மாகாண சபை" என்கின்ற அத்திபாரக் கல்லை கிளறி எறிந்து விடுவதற்காக, தங்களிடம் கொடுக்கப்பட்ட மாகாண அதிகாரங்களை முற்றிலும் மீளவும் மத்தியிடம் ஒப்படைத்து விடுவதற்கு செயலளவு வரைக்குமான விருப்பத் [illegible] இணைத்து தன்னை நிரப்பி வைத்திருந்தது ஆளுமினம். சுருங்கக் கூறின் "எதிரிக்கு சகுனப்பிழை ஆக வேண்டுமென்பதற்காய், தனது மூக்கை அறுத்தெறியக் கூட தயாராக இருந்தவன் தான் இன்றைக்கு ஆட்சிக் கட்டிலில் வீற்றிருப்பவன். இன்றைய அமைச்சர் பெருமக்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனும் தொகுதிக்குள் அடங்குகின்ற பெருங்'குடி' மக்களில் பெரும்பான்மையோர், மாகாண சபைகளின் கந்தல் துணியைக் கைத்தலம் பற்றிக் கரைசேர்ந்தவர்களே, என்பது அவரவரின் சுயவிசாரணைத் திருப்பு முனைகளில் ஒன்று!

இற்றைக்கு பட்டொளி வீசித் தொங்கும் குரக்கன் நிறச்சால்வையோடு விமானப் படியில் தொடங்கி, பேரவைத் தொடர்கள் வரை சிங்களத்தில் எழுதிய ஆங்கிலத்தில் "சப்பித்துப்பும்" எம் மதிப்புக்குரிய முதற்குடிமகன் கூட, பாடசாலைக் கல்வி முடித்து 'பிளேட் வெட்டிய விரல் காயம் ஆற முன்பே அப்பாவின் வேட்டித் தொங்கலைப் பிடித்துக் கொண்டு மாகாண சபைக்குள் வந்த மேதாவிகளில் ஒருவரே!

ஆக, அம்பாந்தோட்டை தொடங்கி அத்தியடி வரை இந்தக்கணம் வரை எம் 'கௌரவ'ர்கள் சுகிக்கின்ற வாய்ப்புக்கள் வசதிகள் யாவைக்குமான மறைமுக காரணம் ஒன்று உண்டெனில்-அது தமிழரின் 'தனி ஈழ'க் கோரிக்கையயே! மாகாண சபைகள்,

மாகாண அமைப்புக்கள், உள்ளூராட்சி சபைகள், பரவலாக்கப்பட்ட குறு அதிகாரங்கள், விரிவடைந்த வேலை வாய்ப்புக்கள், பங்கிடப்பட்ட அரச நிதி, வேகமாக வளர்ச்சியடைந்த கிராமங்கள், போன்ற பல்வேறு கட்ட நன்மைகளுக்காக "பிரபாகரன் என்பவர் முழு இலங்கை மக்களுக்குமான போராளி" என்ற கருத்தினை கடந்த வார சந்திப்பொன்றில் கொஞ்சம் கலங்கிய கண்களோடு சொன்ன சிங்களப் பேராசிரியரைப் போல, உண்மை விளம்பிகள் இன்னமும் இந்தத் தீவில் மீதமிருக்கின்றார்கள் என்பதே இன்றைக்கும் எம் போராட்டத்துக்கான மாற்று அங்கீகாரங்கள்! மக்கள் பிரதிநிதிகள் இல்லாத வடமாகாண சபையில் ஆளுநருக்கான குருட்டு 'நியமன அதிகாரத்தை' கையிலெடுத்து 'திவிநெகுமவுக்கான ஒப்புதலை பெற்றுக் கொள்வதன் மூலம் ஏற்கனவே மடியில்கட்டப்பட்டுள்ளஎட்டு மாகாண சபைகளையும் சேர்த்து ஒட்டு மொத்த "பகிர்வதிகாரமும்" மத்திய அரசின் தூயவழிக்கலப்பற்ற பிறப்புக்களே என்று "ஏகக் கட்சி"ப் பிரகடனத்துடன் "மீள் மத்திய வாக்கம் (Recentralization) என்பதை முன்மொழிவதற்கான உரைகல்லாகவே இந்த நிலைமையினை கொள்ள முடியும்.

கூடவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்தாலொழிய இந்த நாட்டில் வேறெவரும் சாதாரண ஒரு கம்பம் நட்டுக் கொடியேற்றி விடக் கூட முடியாதபடி "எதிர்க்கட்சிகள்" எனும் வகுதிக்குள் அடங்கக்கூடிய சகல "கொள்கைக் குன்று"களும் ஆளாளுக்கு கடிபட்டுக் குதறி, புதிர்க் கட்சிகளாக மாறுவேடம் தரித்திருக்கும் இப்போதைய நிலை, எந்த காலத்திலும் மஹிந்தவும், தோழர்களும் அஸ்வமேத யாகம் நிகழ்த்தினாலும் பெற்றுவிட முடியாத ஒரு "அரிய வரம்." ஸ்ரீ கோத்தாவுக்கும், ஹைட் பார்க்குக்கும் இடையில் கயிறிழுபடும் கோமாளிகளையும், மாகாண 'முதலமைச்சர்' பதவியொன்றின் கொண்டாட்டத்தில் வானுக்கு எகிறிக் குதித்து இன்னும் பூமிக்கு திரும்பிடாத ஜோக்கர்களையும், "சென்னை சில்க்ஸ்", "போத்தீஸ்", "சரவணா செல்வரத்தினம்" போன்ற தமிழகக் கடைத்தெருக்களில் மேலும் மூன்று நாள் "ஷொப்பிங்" போகும் தேவையிருக்கின்ற பபூன்களையும், "சந்திப்பு" என்கின்ற ஒற்றைச் சொல்லின் மூலம் நழுத்திப் பாலில் விழுத்தி விடும் ரௌடிஸம் கலந்த சாமர்த்தியம் அலரிமாளிகையின் ஒவ்வொரு தேநீர் குடுவைகளுக்கும் உண்டு என்பதை தயவுசெய்து நம்புங்கள் நண்பர்களே!

ஆனால், சாக்கடை என்று தெரிந்த பின்னாலும் இறங்கி விளையாடுகின்ற அரசியல்வாதிகளின் சுயலாபப் பகடைக்காக, சாதாரண அப்பாவிப் பொதுமக்களின் "அறியாமை"யை பயன்படுத்தி, அவர்களைப் புதைக்கும் குழியை அவர்களைக் கொண்டே வெட்ட வைக்கின்றார்களே என்ற கசப்புண்மையை எப்படி எம்மக்களை நம்பச் செய்யப் போகின்றோம்? "பசியோடிருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதற்கு பதில், மீன்பிடிக்கக் கற்றுக் கொடு" என்கின்ற ஐரோப்பிய பழமொழி வெளிப்படுத்துகின்ற; நிவாரணம் என்கின்ற பிச்சையை, வாழ்வாதாரம் என்கின்ற நீடித்த உதவியாக மாற்றாமல் இருப்பதற்காகவா பதாகைகள் ஏந்தி ஊர்வலம் போகின்றார்கள் எம்மக்கள்? வறியமக்களுக்கான உதவித் திட்டமாக 1994களில் கொண்டு வரப்பட்ட "சமுர்த்தி" திட்டம் நடைமுறையிலிருந்த 18 வருடங்களின் பின்னரும், இன்னும் இலங்கை மனித அபிவிருத்திச் சுட்டியின் படி 169 நாடுகளின் பட்டியலில் 98 ஆவது இடத்தையே பிடிக்க முடிந்திருக்கின்றது, வருமானக் கினிக்குணகம் இன்னமும் பாதியைத் தாண்டாமல் 0.47 இலேயே நொண்டிக் கொண்டிருக்கின்றது.

சிறுபோக நெற்செய்கைக்கு, இரணைமடுவில் சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல் வற்றிப் போன போது வாய்திறக்க முடியாத ஊமைகள், விவசாயக் கடன்களை ஏகத்துக்கும் அவிழ்ந்து விட்டு 'கமிஷன்' பார்க்கும் அரச, தனியார் வங்கிகளின் நடுவில், செய்கையாளனை தவிக்கவிட்டு, இந்தியாவிலிருந்து மாதம் தவறாமல் வெங்காயம் இறக்கும் அரச கொள்கையைக் கண்டும் காணாமல் இருக்கும் குருடர்கள், அயல்தேச வாணிபர்களினால், தங்களது முதலுக்கு வந்து விட்ட மோசத்தினை வயிற்றிலடித்துக் கதறியும், கேட்காமல் புடைவை வியாபாரிகள் எனும் பெயரில் உளவாளிகளை ஊர், ஊராக உலாவவிட்ட செவிடர்கள் யாவரும் இணைந்து விட்ட ஆர்ப்பாட்டப் பேரணிகளுக்கு ஏன் பாமரனையும் தெருவுக்கு இழுத்து விட்டீர்கள்?

இவை யாவற்றையும் சீர் செய்த பின் கண்டு விடாத "பொருளாதார அபிவிருத்தியையா" திவிநெகும சாதித்துச் சாத்தி விடப் போகின்றது! ஏழைகள் என்கின்றதொரு வர்க்கத்தினை தொடர்ச்சியாக பேண்தகு நிலையில் வைத்திருப்பதன் மூலமும் 'உதவி' என்கின்ற பெயரில் விட்டெறிகின்ற பிழிந்த சக்கைகளைக் காட்டி தன் சொந்த மக்களையே சோம்பேறிகளாகவும், விடய அறிவற்ற 'கரட் குதிரை'களாகவும் பேணுவதன் மூலமும் "தன் கட்சிக்கு அரசியலுமாச்சு அதிபரின் கட்சிக்கு அதிகாரமுமாச்சு" என இரட்டை மாங்காய்களுக்கு ஆசைப்படுகின்ற பாசநரிகளின், நீலச்சாயத்தை எப்படி அழித்தகற்றப் போகின்றாய் தமிழா?

"வயிற்றில் அடிக்க, வைத்தியர் தேவையில்லை" - போன்ற 'அர்த்தம்' செழித்து, 'பொருள்' வழிந்தோடும் வார்த்தைகளால் சுலோகம் எழுதிய தமிழறிஞனை, கருடபுராணத்தின் படி, 'கந்தன் கருணை' படத்தை பத்து நாள்கள் தொடர்ந்து ஊண், உறக்கமின்றி பார்க்கச் செய்விக்க வேண்டுமென்று தோன்றவில்லையா உங்களில் எவருக்கும்?

புரியாத வார்த்தைகளில் ஆசை காட்டிக் கூட்டிவரப்பட்டு, கையில் கொடுக்கப்பட்ட தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ள காகித அட்டையைக் கூட சரியாகப் பிடிக்கிறோமா? தலைகீழாக பிடிக்கின்றோமா? என்பதையும் தெரிந்திராத அந்த அபலைத் தாயின் பின்னணியில், யாழ். மணிக்கூட்டுக் கோபுரம் தெரிகின்ற புகைப்படம், பூச்சியத்தை நோக்கி விரைந்து நகர்கின்ற ஈழத்தமிழனின் இருண்ட எதிர்காலத்துக்குரிய அபாயச் சங்கொலி இல்லையா? எப்போதோ கேட்ட வார்த்தைகளில் ஒழிந்திருக்கும் கூடா நட்பு அச்சம், ஈரக்குலை வரை பாய்கின்றது!

"இறைவா! எதிரிகளை நான் பார்த்துக் கொள்கின்றேன்,

நண்பர்களிடமிருந்து என்னைக் காப்பாற்று!!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொன்னி செல்வநாதன்

# 'அணுவின் நடனமும்' ஆடலான் வடிவமும்...

அண்மையில் விஞ்ஞான உலகின் உயரிய கண்டு பிடிப்புகளில் ஒன்று, **'ஹிக்ஸ் பாஸன்'** என்று பெயரிடப்பட்ட அணுத்துகள் வெற்றிடத்தில் இருப்பதற்கான தடயம்தான்.

பிரபல விஞ்ஞானி பீற்றர் ஹிக்ஸ் இந்தக் குறிப்பிட்ட அணுவைக் கண்டறிந்தார். எனவே இவருடைய பெயரைக் கொண்டே இந்த அணுத்துகள் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், இது பற்றிய ஆராய்ச்சி பெரும் பொருள்செலவில் இடைவிடாது தொடரப்பட்டு இன்று இந்த அணுத்துகள் இருப்பதற்கான தடயமும் கிடைத்த நிலையில், இதனைக் கடவுள் துகள் என்று (காட் பார்ட்டிகள்) விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.

அண்ட சராசரம் உருவானது பற்றி பலதரப்பட்ட செய்திகள் வந்தவண்ணம் இருந்தாலும், இதனைக் கண்டுபிடிப்பதே ஒரு சவால் நிறைந்த செயலாகும் என்று விஞ்ஞான உலகம் குறிப்பிடுகின்றது. விஞ்ஞானத்தில் நியூட்ரான், புரோட்டான், எலக்ட்ரான் போன்றவை அணுக்களாகும். இவை சாதாரணமாக கண்ணுக்குப் புலப்படாத அணுக்கள் என்பது நாம் அறிந்த செய்தியாகும். இந்த அணுக்கள் ஒன்றாகச் சேர்ந்து இணைவதற்குக் காரணமாக உள்ள பிறிதொரு அணுவின் கூட்டுச்சேர்க்கையொன்று நிகழ்வதாகவும், அந்த அணுத் துகளைக் கண்டறிந்தால் பிரபஞ்சம் உருவானதைக் கண்டறிய முடியும் எனவும் விஞ்ஞான உலகம் உறுதிப்பட நம்புகின்றது.

அதென்ன பிரபஞ்ச சிருஷ்டி? பல கோடி ஆண்டுகளுக்கு முன் அண்ட சராசரம் கும்மிருட்டுடன் இருந்ததாக வேதங்கள், உபநிடதங்கள், நீதிநூல்கள், சித்தாந்த நூல்கள் மற்றும் பைபிள் பழைய ஏற்பாடு போன்றவற்றின் வாயிலாக அறிகின்றோம். இதனை விஞ்ஞான உலகமும் ஆமோதிக்கின்றது. அண்டமே இருண்டு காணப்பட்ட போது அங்கே ஒடுங்கியிருந்த கூட்டுச்சேர்க்கை ஒன்றுக்கொன்று புரியாமலே பின்னிப்பிணைந்திருந்ததாக ஆராய்ச்சியாளர்களால் நம்பப்படுகின்றது. இந்த நிலையில் தான் அந்தக் கூட்டுச் சேர்க்கையில் திடீரென விரிசல் ஏற்பட்டு அதனைத் தொடர்ந்து அந்தக்கூட்டு சேர்க்கை வெடித்துச் சிதறியதாகவும் சொல்லப்படுகிறது.

அப்படிப்பட்ட ஒரு வெடிப்புச் சத்தத்தின்போது பின்னிக்காணப்பட்ட கூட்டுச்சேர்க்கையானது, பிரிந்த நிலையில், ஒலியும் ஒளியும் தனித்தனியே வெளிப்பட்ட நிலையில் உருவாகியதுதான் நம்முடைய பிரபஞ்சம் என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். இதனால் அண்டத்தைப் பிளந்து கொண்டு வெடித்துச் சிதறிய கோடான கோடி அணுக்களின் இந்தநிகழ்வுதான் 'பக் பேங்க் தியரி' என்று மேலைநாட்டு விஞ்ஞானிகளால் குறிப்பிடப்படுகிறது. அதாவது அண்டத்தில் ஏற்பட்ட இந்த வெடிப்புச் சத்தத்தினால் ஏற்பட்ட அணுச்சிதறல்களினால் உண்டானதே இந்தப் பிரபஞ்சம் என்பதுதான்.



மேற்கண்ட இந்தக் கூற்றை மறைந்த டாக்டர் வை.கணபதி ஸ்தபதி போன்ற மூத்த ஆய்வறிஞர்கள் முன்வைத்தார்கள்.

இந்தப்பேரறிஞர்கள் அவ்வாறு வெடித்துச் சிதறிய அணுக்களின் நிலையானது தன்வயப்பட்ட துடிப்பலைக்குள் கட்டுண்டு ஒளிர்வதாக நம்முடைய சாஸ்திர சுவடிகளில் சொல்லியிருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே, வெட்ட வெளியில் அசைந்தாடி ஒளிர்கின்ற இந்த அணுக்களை இலகுவாகப் புரிந்து கொண்டே நம்முடைய முன்னோர்கள் இதனைச் சுருக்கி தத்துவார்த்தமாகவும் கலை நயமாகவும் ''அணுவின் நடனம்'' என்று சொல்லியதையும் ஆய்வறிஞர்கள் ஆமோதிக்கின்றார்கள். அப்படியென்றால் நம்முடைய பிரபஞ்சத்தின் தோற்றமானது அளவியலுடன் அழகியலையும் பெற்று விளங்குகின்றது அல்லவா?

தொன்மை வாய்ந்த நாகரிகத்தின் பின்னணியில் வந்த நம்முடைய மூதாதையர்கள் விட்டுச்சென்ற செய்திகள் இன்றைய விஞ்ஞானத்துடன் ஒத்துப் போவதையும் கண்டு நாம் வியக்காமல் இருக்க முடியாது.

குறிப்பிட்டுச்சொல்ல வேண்டுமானால் திருமந்திரம், திருவாசகம், அருட்பிரகாச வள்ளலாருடைய அருள்பெருஞ்சோதி அகவல் போன்ற நூல்களைச் சொல்லிடலாம். இந்நூல்கள் யாவும் தொன்மைக் காலத்தில் இறையருளாளர்கள் மற்றும் மகரிஷிகளாலும் ஆக்கப்பட்டனவை என்பதை அறிவோம்.

நவீன தொழில்நுட்ப சாதனங்களோ அல்லது கருவிகளோ இல்லாத காலத்தில் அணுத்திரள், பிரபஞ்சம் பற்றி இந்தநூல்களில் விளக்கப்பட்டிருப்பது விந்தையிலும் விந்தைதான்.

குறிப்பாக, திருமந்திரத்தில் அணுவின் அளவையும் எடையையும் கண்டறிந்து விளக்கியிருப்பது மிகவும் வியப்பாக இருக்கிறது.

அணுவானது எவ்வளவு சிறியதாக உள்ளது என்பது திருமந்திரத்தில் "அணுவுள் அணுவும் அவனுள் அணுவும்: கணுவர நின்று கலப்பது ணரா நனையிலி யிசானவ வெனங்குமாகித்: தனிவற நின்ற சராசரம் தானே'' என்று சொல்லப்பட்டுள்ளது.

உபநிடதத்தில் ''அணோர் அணீயான் மஹதோ மஹீயான்'' என்று அணுவைச் சிறியதற்கு சிறியதாகவும் - பெரியதற்கு பெரியதாகவும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதனையே ''விதைக்குள் மரமும், மரத்துக்குள் விதையும்'' என்ற எளிமையான எடுத்துக்காட்டினால் சுட்டிக்காட்டுவர் சான்றோர்.

அணுக்களால் நிறைந்த அண்டமே மூலமாக, அதிலிருந்து விளைந்திட்டதே பண்டமாகவும் - அணுக்களால் ஆக்கப்பட்ட பண்டமே மூலமாய் கொண்டு காட்சியளிப்பதே ஒளி நிறைந்த வெட்ட வெளியென்று விளக்கிச் சொல்லிடலாம் என்கிறது.

இங்கே அண்டம் அல்லது ஆகாயம் எனும்போது சிற்றாகாசம், பேராகாசம் என இரண்டையுமே நோக்கிட வேண்டும். சிற்றாகாசத்தில் ஏற்படுகின்ற ஒவ்வொரு நிகழ்வும் பேராகாசத்திலும் நிகழ வேண்டும் என்பதே பிரபஞ்ச விதியாகும். இதனையே உலகப்புகழ் விஞ்ஞானி ஐன்ஸ்டின் சூக்குமம் = ஸ்தூலம் அதாவது அண்டத்துக்குள் பிண்டமும், பிண்டத்திற்குள் அண்டமும் இருக்கின்ற நிகழ்வினையே சுட்டிக்காட்டுவதாக கணபதி ஸ்தபதி தம்முடைய ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆகையால், பிரபஞ்ச சிருஷ்டியின் இரகசியத்தை உணர்ந்துகொண்ட நம்முடைய மூதாதையர்கள், பிரபஞ்சத்தில் ஏற்படுகின்ற நிகழ்வுகளைப் புரிந்து கொண்டதனால் ''ஆடலான் வடிவத்தையே'' மறைபொருளாக ஆக்கியுள்ளனர் என்பர் ஆராய்ச்சியாளர்கள்.

அது எப்படி என்றால், அண்டத்திலிருந்து பிளந்துகொண்டு எழுந்த ஒளிக்கு நெருப்பையும், வெடிப்புச் சத்தமாகிய ஒலிக்கு உடுக்கையையும், இருட்டுக்கு அபஸ்மாரன் என்ற அசுரனை உவமையாகக் கொண்டும், தூக்கிய இடப்பாதமும் ஊன்றிய வலது காலும் அணுவின் அசைந்தாடும் நிலையை உணர்த்திடவும், பரையில் சுற்றிக் காணப்படும் தீச்சுடர்களை அண்டத்தில் எங்கும் பரவியிருக்கின்ற அணுக்களாகவும் சுட்டிக்காட்டி, அவற்றுடன் பஞ்சபூதங்களின் ஆளுமையைக் குறிக்கின்ற வகையிலே ஐயுலோக த்தால் இந்த வடிவத்தை இயற்றிக் காட்டியுள்ளதைக் கண்டு நாம் வியக்காமல் இருக்க முடியாது.

இந்த அரிய தத்துவத்தைப் புரிந்து கொண்டதனால்தானோ, என்னவோ ஆளுயர நடராசனின் பஞ்சலோகத் திருமேனியை ஜெனீவாவிலுள்ள தன்னுடைய பிரம்மாண்டமான ஆராய்ச்சிக்கூடத்தின் முகப்பில் நிறுத்தி வைத்திருக்கிறது அணு ஆய்வுக்கான ஐரோப்பிய அமைப்பு.

பி.ஏ.அந்தோனிமார்க்

# தமிழர்களை மறந்த ஐ.நா

உலகத்தில் சமாதானத்துக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் ஐக்கிய நாடுகள் சபை ஆற்றும் அளப்பரிய சேவையை யாராலும் மறக்க முடியாது. 1945 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது. 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் ஜேர்மனிய நாட்டு சர்வாதிகாரி ஹிட்லர் உலக மகா யுத்தத்தை ஆரம்பித்தான். இதனால் 60 இலட்சத்துக்கும் மேற்பட்ட யூத மக்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

அதே போன்று 1941 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஜப்பான் ஆசியாவிலே ஒரு பெரிய போரை ஆரம்பித்தது. இதனால் கோடிக்கணக்கான மக்கள் இறந்தார்கள். இதன் நிமிர்த்தம் பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் இணைந்து ஜப்பானுக்கும் ஜேர்மனிக்கும் எதிராகப் போர் தொடுத்தன. 1945 ஆம் ஆண்டு வரையும் போர் நடைபெற்றது. இறுதியில் மேற்கூறிய ஐந்து நாடுகளும் ஒன்று சேர்ந்து எதிர்காலத்தில் இப்படியான போர் மூலம் அழிவுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஓர் ஸ்தாபனம் வேண்டுமென தீர்மானமெடுத்தன. 1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்த நாடுகளின் தலைவர்கள் ஒன்று கூடினர். இவர்களுடன் தென் அமெரிக்காவும் இணைந்து கொண்டது. இதே ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை உருவாகியது. 1945 ஜூன் 26 ஆம் திகதி ஐ.நா. சாசனம் 50 நாடுகளின் பிரதிநிதிகளால் கைச்சாத்திடப்பட்டது. போலந்து இந்த மாநாட்டில் பங்குபற்றாத போதும் பிறிதொரு தினத்தில் கைச்சாத்திட்டு ஐ.நாவின் 51 ஆரம்பகால அங்கத்துவ நாடுகளுடன் ஒன்றிணைந்தது.

ஐ.நா. ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கை 1955 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஐ.நா.வில் அங்கத்துவம் பெற்றது. நோக்கங்களும் கோட்பாடுகளும் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல். மக்களின் சுயநிர்ணய மற்றும் சம உரிமைக் கோட்பாடுகளுக்கு மதிப்பு கொடுக்கும் அடிப்படையில் நாடுகளுக்கிடையில் நட்புறவை வளர்த்தல்.

சர்வதேச பொருளாதார சமூக, கலாசார, மனிதாபிமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கும் மதிப்பளிக்கப்படுவதை ஊக்குவிக்கப்பதிலும் ஒத்துழைப்பை மேற்கொள்ளல். இப்பொது நோக்கங்களை அடைவதில் நாடுகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் மத்திய நிலையமாக செயல்படுதல்.

### பணிகளும் அதிகாரங்களும்

ஐ.நாவின் நோக்கங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் அமைய சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல், சர்வதேச நெருக்கடிக்கு வழிகோலக்கூடிய ஏதேனும் பிணக்கை அல்லது பிரச்சினையை விசாரித்தல், அத்தகைய பிணக்குகளை தீர்த்து வைக்கும் வழி முறைகளை அல்லது தீர்வுகளை, நிபந்தனைகளை சிபாரிசு செய்தல், ஆயுதங்களை கட்டுப்படுத்துவதற்கான ஓர் அமைப்பு முறையை ஏற்படுத்துவதற்குத் திட்டங்களை வகுத்துக் கொடுத்தல், சமாதானத்துக்கான அச்சுறுத்தல் அல்லது ஆக்கிரமிப்பு செயல் ஏதாவது உள்ளதா என்பதை ஆராய்ந்து தீர்மானித்து அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைச் சிபாரிசு செய்தல், ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுத்தல், போர் பிரதேசங்களில் ஐக்கிய நாடுகளின் நம்பிக்கைப் பொறுப்புக் கடமைகளை நிறைவேற்றுதல், செயலாளர் நாயகத்தை நியமிப்பதற்கு பொதுச் சபைக்கு சிபாரிசு செய்தல், மற்றும் பொதுச் சபையுடன் இணைந்து சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமித்தல்.

Digitized by Noolaham Foundation.

இதன் தலைமைச் செயலகம் நியூயோர்க்கில் உள்ளது. இதன் பணிமனைக் கட்டடம் திரு யோன் டி எரிக்கி பெல்லர் என்பவரின் நன்கொடையினால் கட்டி முடிக்கப்பட்டது.

முதலில் பொதுச் செயலகமும் அதை அடுத்து ஐ.நா செயலாளர் நாயகத்தின் செயலகமும் பின்பு 30 அடுக்கு மாளிகைகளும் கட்டி முடிக்கப்பட்டன. 1961 ஆம், 62 ஆம் ஆண்டுகளில் பொதுச் சபை கூடலுக்காக பெரிய கட்டடம் அமைக்கப்பட்டது.

1956 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பை உருவாக்கின. ஆனாலும் அதன் பின்பு பல நாடுகள் தற்போதும் பிரிந்து சென்று கொண்டிருக்கின்றன. இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்கள் மட்டும் 1948 ஆம் ஆண்டில் இருந்து கடந்த 63 ஆண்டுகளாக தாங்கள் அடிமைகளாக வாழ்வதாக முறையிடுகிறார்கள். பல ஆயிரக் கணக்கான மக்கள் பல நாடுகளில் அநாதைகளாக தஞ்சம் புகுந்துள்ளார்கள். பெரும்பான்மை இனத்தின் ஒற்றை ஆட்சியின் கீழ் இராணுவ அடக்குமுறையின் கீழ் நடுக்கத்துடன் வாழ்வதாக கூறுகிறார்கள். இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கென ஒரு தனி அலகு அல்லது ஒரு தனித்தாயகம் வேண்டுமென தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறார்கள். சகல மக்களையும் சமனாக பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஐ.நா சபைக்குத்தான் உண்டு. ஆனாலும் ஐ.நா சபை கடந்த 63 ஆண்டுகளாக தமிழ் மக்களை மறந்து மாற்றான் தாய் போல் நடந்து கொள்வது சர்வதேச நீதிக்கு புறம்பானதாகும். ஐ.நா தினத்தில் அதன் செயலாளர் நாயகமும் அங்கத்துவ நாட்டினரும் இணைந்து தமிழ் மக்களின் அகதி வாழ்க்கைக்கு ஒரு முடிவு கட்டி தமிழ் மக்களின் அரசியல் உரிமையை பாதுகாத்து நல்லதோர் தீர்வை வழங்க வேண்டுமென தமிழ் மக்கள் வேண்டி நிற்கின்றார்கள்.

# பொறுமையே பெருமை

முக்காலமும் அறிந்த நாரத மகரிஷி ஒரு சமயம் பூலோகம் வந்தார். வந்த வேலைகளை முடித்துக் கொண்டு, மீண்டும் தேவலோகம் செல்லப் புறப்பட்டார். அப்போது வழியில் ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தான். ''ஐயா.. தங்களைப் பார்த்தால் முனிவர் போல் தோன்றுகிறது.. தாங்கள் யார் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா...?'' என்று கேட்டான்.

''என் பெயர் நாரதர். நான் தேவலோகவாசி. பூலோகத்தில் கொஞ்சம் வேலை இருந்தது. அதை முடித்துக் கொண்டு தேவலோகம் செல்லுகின்றேன்...?'' என்று நாரத மகரிஷி அந்த மனிதனுக்கு விளக்கம் கொடுத்தார்.

அப்போது அந்த மனிதன் மேலும் பேசினான். ''ஐயா, நாரதரே உம்மைப் பற்றி நான் நிறையவே கேள்விப் பட்டிருக்கிறேன். தெய்வங்களை நேரடியாகத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றவர் நீர் என்பதையும் நான் அறிவேன். இந்த உலக வாழ்க்கை என்பது மிகவும் துன்பமயமாக இருக்கிறது. எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் பல சிக்கல்கள் நேரிடுகின்றன.

''ஒரு சிக்கலை எடுத்தால் வேறு ஒரு சிக்கல் தானாக வருகிறது. உடல் நலம் என்பதும் இங்கே நிலையானதாகத் தோன்றவில்லை. இன்று இருக்கும் உடல் நலம் நாளைக்கு இப்படியே இருக்கும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. உறவினர்கள் அனைவரும் சுயநலவாதிகளாகவே இருக்கின்றனர்.

''இந்த உலகத்தில் அன்பு என்பது பெயரளவுக்குத் தான் பேசப்படுகின்றது. ஆனால், உள்ளத்தில் அன்பு இல்லாமல் உதட்டில் மட்டும் அன்பினைப் பொழிகிறவர்கள் இந்தப் பூலோகத்தில் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஒருவர் மீது இரக்கம் கொண்டு உதவி செய்தால், எமக்கு நன்மை வராவிட்டாலும் பாதகமில்லை. தீமைதான் அதற்குப் பரிசாகக் கிடைக்கிறது. இந்த வாழ்க்கை எனக்கு சலித்துப் போய்விட்டது. தெய்வ தரிசனத்தைக் காணவே நான் விரும்புகிறேன். எனக்கு எப்போது தெய்வக் காட்சி கிட்டும்.....? முக்காலமும் அறிந்தவர்கள் நீங்கள் என்னுடைய நிலை என்ன என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஆகவே, நான் எப்போது கடவுளைக் காண்பேன் என்பதைச் சொல்ல வேண்டும்.'' என்று அந்த மனிதன் கேட்டான்.

அவனுக்கு நாரதர் பதில் கூறினார்.. ''வாழ்க்கையில் விரக்தியுற்று தெய்வ தரிசனத்திற்காக எவன் ஒருவன் ஏங்குகின்றானோ, அப்போதே அவனுக்கு தெய்வத்தை காண்பதற்குரிய தகுதிகள் ஒவ்வொன்றாக கூடி வருகின்றன. உனக்கு வாழ்க்கையில் இப்போது ஏற்பட்டிருக்கும் விரக்தி என்பது இந்தப் பிறவியின் காரணமாக ஏற்பட்டதல்ல. பல பிறவிகளில் இந்த வாழ்க்கை அனுபவத்தையெல்லாம் நீ பலமுறை அனுபவித்து விட்டாய். ''அதன் காரணமாகத்தான் இந்தப் பக்குவ நிலை உனக்கு ஏற்பட்டுள்ளது. சக்கரத்தின் வட்டம் போல் ஒவ்வொருவரும் வாழ்க்கை என்னும் வட்டத்தினைச் சுற்றி வருகிறார்கள். ஒரு கட்டத்தில் எல்லோரும் இந்த வாழ்க்கையில் விரக்தியுற்று தெய்வ தரிசனத்திற்காக ஏங்குகின்ற காலம் வருகிறது. இப்போது அந்தக் கட்டத்திற்கு நீ வந்திருக்கிறாய்... இருப்பினும் இந்தப் பிறவியில் நீ தெய்வத்தைக் காண்பது என்பது சாத்தியமல்ல. அடுத்த பிறவியில் நீ தெய்வத்தைக் காணக் கூடும்...'' என்ற நாரதர் பதிலளித்தார். அதைக் கேட்ட அந்த மனிதன் கலக்கமடைந்தான். ''இந்தப் பிறவியில் எனக்கு தெய்வ தரிசனம் கிடைக்காதா? அடுத்த பிறவி வரை நான் காத்திருக்க வேண்டுமா?'' என்று அவன் அதே விரக்தியுடன் கேட்டான்.

''இந்த உலகத்தில் கர்ம வினைகளிலிருந்து எவரும் தப்பிப் பிழைத்தல் என்பது முடியாத காரியம். இந்தப் பூமி பாவ புண்ணிய கணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்காக ஏற்பட்ட கர்ம பூமியாகும்.

''அனுபவிக்க வேண்டிய எல்லா விடயங்களையும் அனுபவித்த பிறகே சுதந்திரம் கிடைக்கப் பெறுகிறது. தேவர்கள் தங்கள் வினைப் பயன் முடிவதற்கு முன்பாகவே மன்மதனை அனுப்பி சிவபெருமானின் தவத்தினைக் கலைக்க முயன்றார்கள். அதன் காரணமாக அவன் எரிந்து சாம்பரானான். தேவர்களாக இருந்தாலும், மனிதர்களாக இருந்தாலும், கந்தர்வர்களானாலும் சரி.. தங்கள் வினைப் பயனைத் தீர்த்துக் கொண்ட பின்னரே அதிலிருந்து விடுபட முடியும்.

''ஆகவே நீ கலக்கம் கொள்ளாமல் அடுத்த பிறவி வரை காத்திருக்கத்தான் வேண்டும்'' என்று அவர் கூறினார். நாரத மகரிஷி இவ்வளவு விளகங்களைக் கூறியும் கூட அந்த மனிதன் சமாதானமடையவில்லை.

''துன்பமயமான இந்த உலகில் இன்னும் உழன்று கொண்டே தான் இருக்க வேண்டுமா..? அடுத்த பிறவி எப்போது வரும் என்று தெரியவில்லை. அது வரை நான் காத்திருந்து தான் தீர வேண்டுமா..?'' என்று அவன் புலம்பிய வண்ணமே இருந்தான்.

மகரிஷி எதுவும் பேசாமல் தொடர்ந்து தேவலோகத்தை நோக்கிச் சென்று கொண்டேயிருந்தார். அப்போது வேறு ஒரு மனிதன் வழியில் நின்று கொண்டிருந்தான். நாரத மகரிஷியைக் கண்ட அவன் அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினான்.

''ஐயா.. உங்களைப் பார்த்தால் தெய்வ வடிவம் போலவே தோன்றுகிறது. நான் கடவுளைக் காண வேண்டும் என்று மிகவும் ஆவலுள்ளவனாக இருக்கிறேன். அவரை நான் எப்போது காண்பேன் என்பதை எனக்குச் சொல்ல முடியுமா?'' என்று அவன் மிகப் பணிவுடன் வேண்டினான். அந்த மனிதன் ஒரு புளிய மரத்தின் கீழ் நின்று கொண்டிருந்தான். அதைக் கவனித்த நாரத மகரிஷி, ''பூலோக அனுவபம் என்பது இப்போதுதான் உனக்கு ஆரம்பமாகி உள்ளது. இன்னும் இந்த உலகத்தில் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளமாக உள்ளன. ஆகவே அவை அனைத்தையும் முடித்தால் தான் உனக்கு தெய்வக் காட்சி கிட்டும். நீ நின்றிருக்கும் இந்தப் புளியமரத்தின் இலைகள் எத்தனை உண்டோ அத்தனை பிறவிகள் கழிந்தால் தான் நீ தெய்வத்தைக் காண முடியும்..'' என்று அவர் கூறினார்.

அதைக் கேட்ட அந்த மனிதன் மிகுந்த மகிழ்ச்சியினை அடைந்தான். ''அவ்வளவு விரைவாக எனக்கு தெய்வத்தின் காட்சி கிடைத்து விடுமா..? என்று ஆனந்தக் கூத்தாடினான். அடுத்த கணம் ஸ்ரீமத்நாராயண மூர்த்தி சங்கு சக்கர தாரியாக அங்கே அவனுக்கு காட்சி கொடுத்து விட்டார்.



பரமஹம்ஸ ஸ்ரீபரத்வாஜ் ஸ்வாமிகள்

# சுயமுயற்சித் திட்டங்களில் வீறுநடைபோடும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்

(கடந்த வாரத் தொடர்ச்சி..)

''மரங்களை வளர்ப்போம் வளமாக வாழ்வோம்'' என்ற நோக்கில் இவ்வாண்டு (2009 ஆம் ஆண்டு) மேற்கொண்ட மரநடுகைத் திட்டத்தின் கீழ் பயன்தரு மரங்களான மா, தேசி என்பன அங்கத்துவ கிராமங்கள் ஊடாக அங்கத்துவப் பயனாளிகளுக்கு வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் வழங்கப்பட்டன.



நல்லொழுக்க நிறுவனத்தால் நடத்தப்படும் தையல் பயிற்சி நிலையத்தில் கடமையிலுள்ள பெண்கள்.

இத்திட்டத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அல்வாய் அம்மன் கோயிலடியைச் சேர்ந்த 4 பயனாளிகளுக்கு 10 மாமரக்கன்றுகளும் 32 தேசிக் கன்றுகளும் புலோலி கூழாவடியைச் சேர்ந்த 3 பயனாளிகளுக்கு 6 மாமரக் கன்றுகளும், 24 தேசி மரக்கன்றுகளும், கர வெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் உடுப்பிட்டியைச் சேர்ந்த 2 பயனாளிகளுக்கு 6 மாமரக் கன்றுகளும், 18 தேசிமரக்கன்றுகளும் மண்டானைச் சேர்ந்த 3 பய னாளிகளுக்கு 8 மாமரக்கன்றுகளும் 27 தேசி மரக் கன்றுகளும் வழங்கப்பட்டன.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் 2006 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அந்தியகாலத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு (2009) 68 அங்கத்தவர்கள் புதிதாக இணைந்ததோடு மொத்தமாக 223 அங்கத்தவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இந்தத்திட்டத்தின் மூலம் இதுகாலவரை இரு அங்கத்துவப் பயனாளிகள் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் பெற்றுள்ளனர். இந்தத்திட்டமானது வறிய சாதாரண குடும்பங்களுக்கு ஓர் உறுதுணையான திட்டமாகும். இத்திட்டத்தில் அமைப்புக்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் மாத்திரமே இணைந்து கொள்ளலாம்.

இந்த ஆண்டில் (2009) வன்னியில் நடைபெற்ற போர்ச் சூழ்நிலையில் இடம்பெயர்ந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த மக்களுக்கு கரவெட்டி பிரதேச செயலகம் ஊடாக 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள் கள், சலவைப் பவுடர் என்பன வடமராட்சி நல்லொ ழுக்க நிறுவனத்தினால் வழங்கப் பட்டது. இதே ஆண்டில் வட மராட்சி செவிப்புலனற்றோர் கழகம் தமது கழக வளர்ச்சித் தேவைக்காக உதவு நிதி கோரிய தற்கமைய நிறுவனத்தின் சார்பில் ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்பி, புகைத்தல், போதைப் பொருள் பாவனை அற்ற சமூகம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் செயற்பட்டு வந்த வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி வீதியில் வாடகைக் கட்டடம் ஒன்றில் இயங்கி வந்தது.

நல்லொழுக்க நிறுவனத்துக்கென தனியான அலுவலகக் கட்டடம் ஒன்றை சொந்தக் காணியில் நிறுவ வேண்டும் என நிறுவனத்தின் அடுத்தடுத்து பணியாற்றி வந்த நிர்வாகக் கட்டமைப்பினர் படிப்படியாக நடவடிக்கைகளை நிதானமாக மேற்கொண்டனர். இதன் பலனாக நல்லொழுக்க நிறுவனத்தை வழிநடத்தி வந்த வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனமாக போரூட் நிறுவனம் காணிக் கொள்வனவுக்கென 2007 ஆம் ஆண்டு 5 இலட்சம் ரூபாவை வழங்கியது. மேற்படி நிதியுதவியுடன் நல்லொழுக்க நிறுவனம் தனது வருமான நிதியிலிருந்து 9 இலட்சம் ரூபாவுக்கு மேல் சேர்த்து, அல்வாய் கிழக்கு, மாலி சந்தியில் அலுவலகம் அமைப்பதற்கென சுமார் 3 பரப்புக் காணியைக் கொள்வனவு செய்தது.

தொடர்ந்தும் போரூட் நிறுவனம் கட்டம் கட்டமாக 2008 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டுவரை அதுவலகக் கட்டடம் அமைப்பதற்காக சுமார் 40 இலட்சம் ரூபாவை வழங்கியது. இந்த நிதியிலிருந்து அலுவலகத்துக்கான மாடிக் கட்டடத்தின் தளக் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டு வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்துக்கான சொந்த அலுவலகக் கட்டடம் 2010 ஆம் ஆண்டு அப்போதைய யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரினால் திறந்து வைக்கப்பட்டு, புதிய கட்டடத்தில் அலுவலகம் இயங்கி வருகின்றது.

## கர்ணன்

அலுவலகத்துக்கான தளக் கட்டடம் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் மேல் மாடிக் கட்டடம் இன்னமும் பூர்த்தியாகவில்லை. கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், பயிற்சி வகுப்புக்கள் மற்றும் நிகழ்வுகளை நடத்தக் கூடியதான வசதிகள் கொண்ட மண்டபமாக மேல்மாடியை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நல்லொழுக்க நிறுவனத்தை எதிர்காலத்தில் வழி நடத்த முகாமைக் குழு மேல் மாடிக் கட்டடப் பணிகளைப் பூர்த்தி செய்வார்கள் என நல்லொழுக்க நிறுவனத்தின் பயனாளிகளான கிராமிய அமைப்புக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றன.

போரூட் நிறுவனத்தின் ஆலோசனை, அனுசரணையுடன் 1998 ஆம் ஆண்டு முதல் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்துக்கு வழங்கியதால் 2008 ஆம் ஆண்டு நல்லொழுக்க நிறுவனம் பிரமிக்கத்தக்க துரித வளர்ச்சியைக் கண்டது. இந்த நிலையில் 2009 முதல் போரூட் நிறுவனம் நல்லொழுக்க நிறுவனத்துடனான ஆலோசனை, அனுசரணை, உதவிகளை நிறுத்தியுள்ளதால் நல்லொழுக்க நிறுவனம் தனது சுயமுயற்சிகள் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, தனது பணியில் சிறுநடை போட்டுக் கொண்டிருந்தது. சுயமாக இயங்கத் தொடங்கியுள்ள நல்லொழுக்க நிறுவனத்தின் செயற்பாடுகளும் மற்றும் நிதி கையாளுகைகளும் அந்தந்தப் பிரதேச செயலாளர் கள் அனுமதியுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

> நிறுவனத்தால் 2007 இல் ஆரம்பிக்கப்பட்ட பங்காளர் தையல் சங்கம் சீரான முகாமைத்துவம் இன்மையாலும், நாட்டு நிலைமை சுமுகமாக மாறியதாலும் கொள் வனவு புடைவைகளில் நட்டம் ஏற்பட்டு அதனை ஒழுங்கு படுத்தி (2011) வருட இறுதிப் பகுதியில் இருந்து பங்குதாரர்கள் விலக்கப்பட்டு, நிறுவனத்தால் பொறுப்பேற்று நடத்தப்பட்டு வருகின்றது.

நிறுவனத்தால் 2007 இல் ஆரம்பிக்கப்பட்ட பங்காளர் தையல் சங்கம் சீரான முகாமைத்துவம் இன்மையாலும், நாட்டு நிலைமை சுமுகமாக மாறியதாலும் கொள்வனவு புடைவைகளில் நட்டம் ஏற்பட்டு அதனை ஒழுங்கு படுத்தி (2011) வருட இறுதிப் பகுதியில் இருந்து பங்குதாரர்கள் விலக்கப்பட்டு, நிறுவனத்தால் பொறுப்பேற்று நடத்தப்பட்டு வருகின்றது.

நிறுவனத்தின் நோக்கமான சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்கோடு தொடர் செயற்பாடுகளை நிறுவன நிதிவளத்துக்கேற்ப நிறுவனத் தலைவரான பா.இராகுநாதன் கருத்துத் தெரிவிக்கையில் 2009 முதல் நிறுவனம் சுயமாகச் செயற்பட்டு வருகின்றது. நிர்வாகக்குழு, பணியாளர்களின் ஒத்துழைப்பினாலும் சேவை மனப்பான்மையாலும் இந்த நிறுவனம் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கின்றது.

மேற்படி நிறுவனம் அதிக இலாபம் ஈட்டாவிட்டாலும், நட்டமடையாமல் பாகாப்பது செயற்குழு உறுப் பினர்களின் கடமையாகும். பங்காளராக இயங்கிவந்த தையல் நிலையத்தை நிறுவனம் பொறுப்பேற்றுக் கொண்டதால் அதன்மூலம் ஓரளவு இலாபம் கிடைக்கின்றது. இதன் மூலம் 7 பயனாளிகளுக்கு தொழில் வாய்ப்புக் கிட்டியுள்ளது. தையல் பழக விரும்புவோருக்கும் இடமளித்து வருகின்றோம். ஆண்பிள்ளைகளுக்கென தும்புத்தடி தொழில் பயிற்சி வழங்க உள்ளோம்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவியாக நுண்நிதி செயற்பாடுகளின் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி கடன் உதவிகளை வழங்கி வருகின்றோம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘13’ஐ ஒழித்தால் போராட்டம் வெடிக்கும்

## அடித்துக் கூறுகிறார் கலையரசன்

எருவில்,ஒக்.24

இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க ஒரு முக்கிய வழியாக இருக்கும் 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை இல்லாதொழித்து தமிழ் பேசும் மக்களைப் படுகுழியில் தள்ள அரசு முற்படுகின்றது. ஆனால், அரசு இந்தச் சட்டத்தை இல்லாதொழித்தால் வடக்கு, கிழக்கில் மீண்டும் ஓர் ஆயுத வழியில் உரிமைப் போராட்டம் வெடித்தே தீரும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் ஆங்கில ஊடகமொன்றுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வழங்கிய செவ்வியில், 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் முற்றாக இல்லாதொழிக்கப்படவேண்டும் என்று கூறியிருந்தார். இவரின் இந்தக் கூற்றால் இன்று அரசியல் மட்டத்தில் சர்ச்சை உருவாகியுள்ளது.

பாதுகாப்புச் செயலாளரின் இந்தக் கூற்றை இனவாத அமைச்சர்கள் சிலர் வரவேற்றுள்ளனர்; சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் இதை எதிர்த்துள்ளனர்.

அதேவேளை, இதற்கு எமது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது. ஏனெனில், இலங்கையில் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு ஒரு தீர்வை வழங்க முக்கிய வழியாக இருக்கின்றது 13ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம்.

பாதுகாப்புச் செயலாளரின் கூற்றுக்கிணங்க, அரசு இந்தச் சட்டத்தை இல்லாதொழித்தால் தமிழ் பேசும் மக்களின் நிலை கேள்விக் குறியாகிவிடும்; தமிழ் பேசும் மக்கள் படுகுழியில் தள்ளப் படுவார்கள். எனவே, இதனை நிறைவேற்றவே அரசு முற்படுகின்றது.

அண்மையில் ‘திவிநெகும’ என்ற சட்டவரைவு ஊடாக மாகாணசபைகளின் அதிகாரங்களை மத்திய அரசின் வசம் சுவீகரித்துக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவந்தது.

இதற்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது. இந்தநிலையில், 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க அரசு முயற்சிக்கின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாகக் கூறிக்கொண்டு இந்த அரசு வெறும் கபட நாடகத்தையே நடத்தி வருகின்றது. எனவே, இந்த அரசு 13ஆவது அரசமைப்புத் திருத்த சட்டத்தை இல்லாதொழித்தால் வடக்கு, கிழக்கில் மீண்டும் ஓர் ஆயுத வழி உரிமைப் போராட்டம் வெடித்தே தீரும். இதை உணர்ந்து அரசு செயற்பட வேண்டும்- என்றார்.(ச-31)



## தபாலகம் இல்லை; மக்கள் அசௌகரியம்

**முத்திரை ஒன்றை வாங்கப் பல கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கட்டை பறிச்சான் உபதபாலகம் அல்லது தோப்பூர் தபாலகத்துக்கே செல்ல வேண்டியுள்ளது**

திருகோணமலை, ஒக்.24

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்கு பள்ளிக்குடியிருப்பு பகுதியில் தபாலகம் இல்லாமையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

5 ரூபா பெறுமதியான முத்திரையொன்றை வாங்க பல கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள கட்டைப் பறிச்சான் உபதபாலகம் அல்லது தோப்பூர் தபாலகத்துக்கே செல்ல வேண்டியுள்ளது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த விடயத்தில் அரச உயர் அதிகாரிகள் கவனம் செலுத்தி மூதூர் கிழக்குப் பிரிவில் உள்ள பள்ளிக்குடியிருப்பு பகுதிக்கு உப தபாலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச-40)

## பல நாள் திருடன் வசமாகச் சிக்கினான்

தியத்தலாவ,ஒக்.24

பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டுப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் அரலகங்வில பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரலகங்வில பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப் பட்டுள்ளார். தெஹியத்தகண்டிய,பிபில, தியத்தலாவ மற்றும் ஹிராதுருகோட்டே ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் குறித்த நபருக்குத் தொடர்பு இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரால் திருடப்பட்ட பொருள்கள் சிலவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர். (ச)



*உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று மாநகர சபை ஏற்பாடு செய்த மரநடுகை நிகழ்வு அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.*

## வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை

### நோயாளர்கள் சிரமம்

அம்பாறை,ஒக்.24

துறைநீலாவணை அரசினர் வைத்தியசாலையில் பல்வேறு வகையான பௌதிக மற்றும் ஆளணிப் பற்றாக் குறைகள் நிலவுகின்றமையினால், நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சுமார் 30 வருடங்கள் பழமையான இந்த வைத்தியசாலையில் தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் நிலவுகின்றன என்று மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால், விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதில் கூட அசௌகரியங்களை எதிர்கொள்வதாக அவர்கள் கூறினர்.

இதேவேளை, இந்த வைத்தியசாலைக்குப் பொறுப்பான வைத்தியர், மற்றொரு கிராம வைத்தியசாலையிலும் கடமையாற்றி வருகின்றார். இதனால், துறைநீலாவணை அரசினர் வைத்தியசாலைக்கு வாரத்தில் 3 நாள்கள் மட்டுமே குறித்த வைத்தியர் வருகை தருகின்றார். இதனால் ஏனைய நாள்களில் வரும் நோயாளர்கள் வைத்தியர் இன்மையால் சிகிச்சைகளுக்காக தூர இடங்களுக்குச் செல்ல வேண்டியேற்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் ஆண்,பெண் நோயாளர்கள் ஒரே மண்டபத்தினுள் தங்க வைக்கப்படுகின்றனர் என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி அமைக்கப்பட்டபோதும், அதற்கான முழு வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

எனவே, துறைநீலாவணை வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளைச் சீர்செய்து முறையான சேவைகளை வழங்குமாறு இந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குக

### மாகாண சபை உறுப்பினர் வேண்டுகோள்

திருகோணமலை,ஒக்.24

கடந்த சிறுபோக நெற்செய்கையின்போது வறட்சியால் பாதிக்கப்பட்ட கிண்ணியா பிரதேச விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் மாகாண விவசாய அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சிறு போகத்தின்போது கிண்ணியா பிரதேசத்தில் நடுஊற்று குளம் மற்றும் மணியரசங் குளம் ஆகியன வறட்சியினால் முற்றாக வற்றிப் போயிருந்தன.



இதனால் இந்தக் குளங்களை நம்பிச் செய்கை பண்ணப்பட்ட சுமார் 135 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டன. இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை எந்த வித அரச உதவிகளும் கிடைக்கவில்லை. இதனால் கடன்களைப் பெற்று பெரும்போக நெற்செய்கையினை மீள ஆரம்பித்துள்ளனர்.- என்றார். (ச)

## வீதியில் சிகிச்சை

நுவரெலியா,ஒக்.24

அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் நடு வீதியில் வைத்துக் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சையளித்த சம்பவம் ஹற்றன் பகுதியில் இடம்பெற்றுள் ளது.

சொந்தப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த வேளையில் ஹற்றன் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்தவர்களுக்கே அவர் இவ்வாறு சிகிச்சையளித்துள்ளார். வட்டவளையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை பஸ் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள் ளாகியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவ்வழியே தனிப்பட்ட தேவையின் நிமிர்த்தம் பயணித்த குறித்த வைத்தியர் காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளித்துத் தனது மனிதாபிமானத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஹற்றன் கிளங்கன் வைத்தியசாலையில் [illegible] வைத்தியரே இவ்வாறு மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## கொத்மலை நீர்த்தேக்க வான் கதவுகள் திறப்பு

நுவரெலியா,ஒக்.24

மேல் கொத்மலை நீர்த் தேக்கத்தின் வான் கதவுகள் இரண்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை திறக்கப்பட்டுள்ளன என்று நுவரெலியா மாவட்ட அரச அதிபர் டி.பி.ஜீ குமாரசிறி தெரிவித்தார். மேல் கொத்மலை நீர்த் தேக்கத்தின் நீரேந்தும் பகுதிகளில் தற்போது கடுமையான மழை பெய்து வருவதால், நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. இதனால் இரண்டு வான் கதவுகளை திறக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்துக் கீழ்ப் பகுதியில் குடியிருப்பவர்களும், ஆற்றைப் பயன்படுத்துபவர்களும் அவதானத்துடன் செயற்படுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் செயல்களில் கூடுதல் தகுதி, திறமை பரிமளிக்கும். முக்கிய பணிகளை உத்வேகமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும். நண்பரின் தேவைக்கு பணம் கொடுத்து

**இடபம்:** உங்கள் மனதில் குழப்பமான சிந்தனைகள் ஏற்படும். நிறைவேற்ற வேண்டிய முக்கிய செயல் தாமதமாகும். தொழில், வியாபாரத்தில் சில நடைமுறை மாற்றம் செய்வது அவசியமாகும். மிதமான அளவில் பணவரவு இருக்கும்.

**மிதுனம்:** உங்களின் நல்ல செயலை சிலர் தேவையின்றி காத்துக் கொள்ளவும். தேவையற்ற பிரச்சினையைத் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு சராசரி நிலையை உருவாக்கும். போக்குவரத்தில் கவனம் தேவை.

**கடகம்:** உங்கள் செயல்களில் பொது நல் ஆர்வம் நிறைந்திருக்கும். உங்களின் உதவி சிலரது சிரமத்தைக் குறைப்பதாக இருக்கும். தொழில், வியாபாரம் சிறந்து தாராள பணவரவு பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்.

**சிங்கம்:** நீங்கள் ஒவ்வொரு செயலையும் இரசனை, நேர்த்தியுடன் செய்வீர்கள். பேச்சில் மங்கலத்தன்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணியாளர்கள், கூடுதல் வேலை வாய்ப்பு எதிர்பார்த்த சலுகைப்பயன் பெறுவர்.

**கன்னி:** உங்களின் செயல்திறன் கண்டு சிலர் பொறாமைப்படுவர். எதிர் பாராத வகையில் அவசரப்பணி உருவாகி அல்லல் தரலாம். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத் தன்மையைப் பாதுகாப்பது நல்லது. பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**நாளை**

ஐப்பசி-09 வியாழக்கிழமை 25.10.2012
திதி: ஏகாதசி மு.இ.10.37 வரை
நட்சத்திரம்: சதயம், மு.இ 09.59 வரை
சுபநேரம்: 07.33-09.03 வரை
ராகுகாலம்: 01.33-03.03 வரை

**துலாம்:** உங்களின் எதார்த்த பேச்சை உள் அர்த்தம் கொண்டதாக மாறுபட்டு சிலர் சிந்திப்பர். சொந்தப் பணிகளில் மட்டும் கவனம் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் சந்தைப் போட்டி அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவை விட, குறைந்த அளவில் பணம் கிடைக்கும். வேண்டாம்.

**விருச்சிகம்:** நண்பர், உறவினர்களிடம் கூடுதல் அன்பு பாராட்டிப் பேசுவீர்கள். இயன்றளவில் சமூகப்பணியில் ஈடுபாடு வளரும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். ஆதாய பணவரவு கிடைக்கும். நீண்டநாள் தேடிய பொருள் கைவந்து சேரும்.

**தனுசு:** உங்கள் நண்பரின் செயலில் உள்ள குறையைப் பெரிதுபடுத்திப் பேச வேண்டாம். இதனால், மன வருத்தம் ஏற்படலாம். கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிபுரிவதால் உற்பத்தி, விற்பனை சீராகும். சராசரி பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** உங்கள் பேச்சில் இனிமை, வசீகரம் நிறைந்திருக்கும். உங்களின் தனித்திறமை நண்பர், உறவினர் பராட்டுவர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை எளிதாக நிறைவேற்றுவீர்கள். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**கும்பம்:** உங்களுக்கு மறைமுகமாக இடையூறு செய்பவரை அடையாளம் காண்பீர்கள். மனதில் தன்னம்பிக்கையும், செயலில் உத்வேகமும் கொள்வது அவசியம். தொழில் வளர புதியயுக்தியைப் பயன்படுத்துவீர்கள். பணவரவு உழைப்பிற்கேற்ற வகையில் கிடைக்கும்.

**மீனம்:** உங்கள் செயலில் நீதி, நேர்மைக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். சமூகத்தில் கூடுதல் வரவேற்பு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும். பணப்பரிவர்த்தனைசிறப்பாகஅமையும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | | 3 | | 1 | 8 | | 9 |
| 8 | 6 | | 5 | | | | | |
| 4 | | | | | | | | 3 |
| | 2 | | 8 | 1 | | 3 | 5 | |
| | 7 | | | 6 | | | 8 | |
| | 8 | 1 | | 7 | 5 | | 4 | |
| 1 | | | | | | | | 8 |
| | | | | | 2 | | 1 | 4 |
| 2 | | 8 | 1 | | 6 | | 9 | 5 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 4 | 6 | 9 | 7 | 3 | 5 | 8 |
| 6 | 3 | 5 | 1 | 8 | 2 | 4 | 7 | 9 |
| 9 | 8 | 7 | 4 | 5 | 3 | 6 | 2 | 1 |
| 1 | 7 | 9 | 5 | 3 | 6 | 2 | 8 | 4 |
| 4 | 6 | 8 | 7 | 2 | 1 | 5 | 9 | 3 |
| 3 | 5 | 2 | 9 | 4 | 8 | 1 | 6 | 7 |
| 8 | 2 | 1 | 3 | 7 | 5 | 9 | 4 | 6 |
| 5 | 4 | 6 | 8 | 1 | 9 | 7 | 3 | 2 |
| 7 | 9 | 3 | 2 | 6 | 4 | 8 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## திருமதி பாலசுந்தரம் மனோன்மணி



சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுந்தரம் மனோன்மணி கடந்த 22.10.2012 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், பாலசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், பவானி, சாமுண்டீஸ்வரி, கணேசலிங்கம், வசந்தி, ஜெயந்தி, தர்மசீலன் ஆகியோரின் பாசமிகு தாயும், பஞ்சலிங்கம், ரவிச்சந்திரன், தவராணி, கந்தசாமி, இந்திரன், உத்தமரோகினி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான நடராஜா, திருநாவுக்கரசு, துரைஐயா, சறோஜினிதேவி மற்றும் கமலாதேவி, வாலாம்பிகை, நாகேஸ்வரி, சகுந்தலாதேவி, மகேஸ்வரி, பூமணி, நவசோதி, றஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தவமணி மற்றும் கதிரவேலு, நவமணி, லட்சுமி ஆகியோரின் மைத்துனியும், கிரிதரன், நித்தியமலர், ரகுதரன், கரிதரன், தேவி, சந்திரகாந், சிந்துஜா, மிதுலா, பிருந்தா, கார்த்திகன், ராகவி, வேணுதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2012) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க. இ. பாலசுந்தரம்**
(கணவர் - மனோன்மணி ஸ்ரோர்ஸ், நவாலி)

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

(24680) (45.7.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் வாணி விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் உட்பட அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### சட்ட விரோத ஆள்கடத்தல்:

## படகு உரிமையாளர்கள் மீன்பிடிப்பதில் தயக்கம்

கொழும்பு,ஒக்.24

சட்டவிரோதமான முறையில் ஆள்கடத்தல் சம்பவங்கள் இடம் பெறுவதனால் உரிமையாளர்கள், தமது படகுகளை மீன்பிடியில் ஈடுபடுத்தத் தயக்கம் காட்டி வருகின்ற னர்.

மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தி ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்துக் கோரும் நடவடிக்கைகள் உயர்வடைந்துள்ளதால் பட்கு உரிமையாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

சில மீனவர்கள் உரிமையாளர்களுக்குத் தெரிவிக்காத படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முயற்சி செய்துள்ளனர்.

இதன் காரணமாகப் படகு உரிமையாளர்கள் படகுகளை மீன்பிடியில் ஈடுபடுத்த விரும்புவதில்லை என்று கூறப்படுகின்றது.

சட்டவிரோத ஆள் கடத்தல் நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் படகுகள் உரிமையாளர்களுக்கு மீளக் கிடைப்பதில்லை.

இதனால் பல கோடி ரூபா நஷ்டம் ஏற்படுவதாக உரிமை யாளர்கள் விசனம் தெரிவிக் கின்றனர். (ச)

## பல்கலை வெட்டுப்புள்ளி வெளியிடுவதில் தாமதம்

கொழும்பு,ஒக்.24

28 பட்டப்படிப்புகளுக்கான உளச்சார்புப் பரீட்சைகள் முடியும் வரை பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படமாட்டாது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

விரிவுரையாளர்களினதும் கல்விசாரா உத்தியோகத்தர்களினதும் வேலை நிறுத்தம் காரணமாக கல்வி சார்ந்த மற்றும் நிர்வாகப் பணிகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளதால் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்க முடியாதுள்ளது என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமர நாயக்க தெரிவித்தார். (ச)

## ரயில்—மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் சாவு

கொழும்பு,ஒக்.24

மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில்-மோட்டார் சைக்கிள் மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஹபராது பொலிஸ் பிரிவின் பசளை களஞ்சியத்துக்கு அருகிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7.15மணிக்கு இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் சம்பத் குமார (வயது-22), நிஷாந்த (வயது-20) ஆகிய இரு இளைஞர்களுமே உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் கராபிட்டி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இந்தச் சம்பவம் குறித்து ஹபராதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## வெள்ளத்தில் மூழ்கியது நீதிமன்றம்; ஆவணங்களும் பெரும் சேதம்

கொழும்பு,ஒக்.24

கடும் மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாணந்துறை மேல் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்ற வளாகங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம், நீதிமன்ற வளாகத்தில் உள்ள வழக்கு சாட்சிப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தியுள்ள களஞ்சியசாலை மற்றும் ஆவணக் காப்பகத்தினுள்ளும் புகுந்துள்ளது.

இதனால் அங்குள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சிப் பொருள்களில் சில வெள்ள நீரினால் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

> ஆவணங்கள் மற்றும் சாட்சிப் பொருள்களில் சில வெள்ள நீரில் சேதமடைந் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## உயர்கல்வி அமைச்சுடன் பேச்சு நடத்தத் தீர்மானம்

கொழும்பு,ஒக்.24

அரசுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை செயற்படுத்துவது குறித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழில்சங்க சம்மேளனம் உயர் கல்வி அமைச்சுடன் பேச்சு நடத்தவுள்ளது என்று சம்மேளனத் தின் செயலாளர் கலாநிதி டெரன்ஸ் மதுஜித் தெரிவித் தார்.

இணக்கப்பாடுகளை செயற்படுத்துவது குறித்து அரசுடன் பேச்சு நடத்த முற்பட்ட போதும் இதுவரை அது சாத்தியமளிக்கவில்லை என்று அவர் கூறினார். (ச)

### டெங்கை கட்டுப்படுத்த சுகாதாரக் குழுக்கள்:

# அரசின் ஆலோசனையை அதிகாரிகள் ஏற்பதில்லை

**சுகாதார அமைச்சர் கூறுகிறார்**

கொழும்பு,ஒக்.24

டெங்கு நோய் பரவுவதை தடுப்பதற்காக அனைத்து அரச நிறுவனங்களிலும் சுகாதாரக் குழுக்கள் அமைக்குமாறு அரசு ஆலோசனை வழங்கியுள்ளது. எனினும் 50 வீதத்துக்குக் குறைவான அரச நிறுவனங்களிலே சுகாதாரக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

உடனடியாகச் சுகாதாரக் குழுக்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ள அவர், இந்தத் தேசிய மட்ட நடவடிக்கைக்குப் பங்களிக்காதவர்கள் தமது உயிர் மீது ஆசையில்லாதவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

அரச நிறுவனங்களில் டெங்கு நோய் தடுப்புக் குறித்து நியமிக்கப்பட்டுள்ள சுகாதாரக் குழுக்களை அறிவூட்டும் செயலமர்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

டெங்கு நோயை ஒழிப்பதற்காக ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்பட்டு அதனூடாக சகல அமைச்சுக்களையும் இணைத்து தேசிய டெங்கு ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

கடந்த ஆறு வருடங்களாக டெங்கு நோய் பரவுவது அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு வருட காலத்தில் டெங்கினால் இறப்போர் தொகை குறைந்துள்ளது. இதற்கு மருத்துவர்களின் அர்ப்பணிப்பே காரணம். ஆனால் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தொகை உயர்வாகவே உள்ளது. இதனையும் குறைக்க அரச நிறுவனங்களின் ஒத்துழைப்புத் தேவை.

அரச நிறுவனங்களில் சுகாதாரக் குழுக்கள் அமைத்து டெங்கு நோயைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 63 அமைச்சுக்களில் 45 அமைச்சுக்களிலே சுகாதார குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

90 திணைக்களங்களில் 35 இலும், 33 அதிகார சபைகளில் 19 இலும், 30 சபைகளில் 13 இலும், 21 ஆணைக் குழுக்களில் 9 இலும், 142 அரச நிறுவனங்களில் 49 இலுமே சுகாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து திருப்தி அடைய முடியாது. 50 வீதத்துக்கும் குறைவான நிறுவனங்களிலே குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரச நிறுவன ஊழியர்களின் மட்டுமன்றி அங்கு சேவை பெற வரும் மக்களினதும் நலனுக்காக சுகாதாரக் குழுக்கள் அமைக்கத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.



டெங்கு ஒழிப்புத் தொடர்பான தேசிய திட்டம் வெற்றியளிக்கச் சகல அரச நிறுவனங்களும் பங்களிக்க வேண்டும். சுகாதார அமைச்சினால் மாத்திரம் இதனைச் செய்ய முடியாது.

டெங்கு நோயினால் ஏற்படும் மரண வீதத்தை 0.45 வீதமாக குறைக்க முடிந்துள்ளது. இதனை 0.1 வீதமாக குறைப்பதே எமது இலக்காகும்.- என்றார். (ச)

## பொன்சேகா மீது தற்கொலை தாக்குதல்; நடத்த உதவியவருக்கு 35 வருடச் சிறை

கொழும்பு,ஒக்.24

முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகா மீது தற்கொலைக் குண்டு தாக்குதல் நடத்துவதற்கு உதவியதாகக் கூறப்படும் வழக்கின் பிரதான சந்தேக நபரை குற்றவாளியாக இனங்கண்ட கேகாலை மேல் நீதிமன்றம் அவருக்கு 35 வருடகால சிறைத்தண்டனை விதித்து நேற்று செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

கொழும்பு இராணுவ தலைமையகத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தி, முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன் சேகாவைக் கொலை செய்வதற்காக உதவி செய்ததாகக் கூறப்படும் வழக்கின் தீர்ப்பை நேற்று வழங்குவதற்கு கேகாலை மேல் நீதிமன்றம் கடந்த 17 ஆம் திகதி தீர்மானித்திருந்தது.

சண்முகலிங்கம் சூரிய குமாருக்கு எதிரான இந்த வழக்கில் சாட்சி குறுக்கு விசாரணை நிறைவடைந்ததை அடுத்தே கேகாலை மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேசுந்தர, வழக்கின் தீர்ப்பை நேற்று வழங்க தீர்மானித்தார்.

மஞ்சுளா என்ற தற்கொலைக் குண்டுதாரியை வவுனியாவிலிருந்து அழைத்து வந்து தங்குமிட வசதியளித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சூரிய குமாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தன் மீது சுமத்தப்பட்டுள்ள அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலும் தான் நிரபராதி என்று தனது சாட்சியின் போது தெரிவித்துள்ள சூரிய குமார், தன்னையும் தனது மனைவியையும் அச்சுறுத்தி பல்வேறு ஆவணங்களில் கைச்சாத்து பெறப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இந்த வழக்கின் பிரதான சந்தேக நபரைக் குற்றவாளியாக இனங்கண்ட நீதிபதி அவருக்கு 35 வருடகாலச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (ச)

## மண்மேடு விழுந்து குழந்தை சாவு


கொழும்பு,ஒக்.24

அத்தனகல, அலவல பகுதியில் மண்மேடு இடிந்து வீழ்ந்ததில் இரண்டரை வயது பெண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக நேற்று முன்தினம் மாலை மண் மேடு இடிந்து வீழ்ந்த வேளையே குழந்தை மண்ணுக்குள் புதைந்ததுடன் பெண்ணொருவரும் காயமடைந்துள்ளார்.

மண்ணுக்குள் புதைந்த குழந்தை நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை 5 மணிக்கே மீட்கப்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாவகச்சேரி நகர் - புராதன தான்தோன்றீஸ்வரர்
# அருள்மிகு அமிர்தபாஷினி அம்பாள் உடனுறை வாரிவனநாத சுவாமி வாரிவனம் தேவஸ்தானம்

## வரலாற்றுப் புகழ் மருவும் - வாரியப்பர் திருக்கோயில்
## அருள்பொலியும் அமிர்தபாஷினி அம்பாள்
## மஹோற்சவ பெருவிழாவும் கேதார கௌரி விரதமும் - 24.10.2012



## மெய்யடியார்களே!

ஈழ மணித்திருநாட்டில் கலை கலாசார பூமியாகவும் கந்தபுராண கலாசாரம் மேலோங்கி சைவம், தமிழ் மணங் கமழ்ந்து தனித்துவமாக மிளிரும் சைவ ஸ்ரீ சாக்த தத்துவங் கள் வளர்ச்சிபெற்ற யாழ்ப்பாணத்தின் கிழக்கே தென்மராட் சிப் பகுதியின் தலைநகராம் சோழ மன்னர் காலத்துக் கோயிலாகவும் குளக்கோட்டு மன்னரால் புனருத்தாரணம் பெற்றதும் சாவர் மன்னரால் பராமரிக்கப்பட்டு தலைநகராக விளங்கிய சாவகச்சேரி நகரில் கோயில் கொண்டு ஊரெல் லாம் பெரும் தேரோடும் வீதியில் பவனி வந்த பெருமான் வாரியப்பர், சாவகச்சேரி நகரில் தொன்று தொட்டு அருள்பாலித்து வரும் வாரிவனநாத சுவாமியின் ஆலய வரலாற்றுப் புகழ்மருவும் ஒரு மகத்தான பேராலயமாகும். வாரியப்பர் என்னும் வண்ணப் பெயர் கொண்டு விளங்கும் இறைவன் சிவநாயகன் - அமிர்தபாஷினி என்னும் அழகுப் பெயரோடு விளங்கும் அமிர்தமொழி அரசி - உமையோடு ஆனந்தமாய் வீற்றிருக்கிறார்வாரிவனத்து ஈசன், வாரியப்பர் என்னும் நாமம், தலவிருட்சம் இத்தி, தீர்த்தம் பதும தீர்த்தம் என்பவற்றால் பெருமையுற, கூடவே அருள் பொலியும் கேதாரகௌரி நாயகி இறைவி அமிர்தபாஷினி அம்மை, பக்தர் களுக்கு அளவில்லா அருள் இன்பத்தை வழங்கி வருகிறாள்.

பெருமைமிகு தாயாருக்கு மஹோற்சவ விழா கேதார கௌரிவிரத புண்ணிய நன்னாளின் முதல் நாள் (24.10.2012) புதன்கிழமை நந்தன வருஷ ஐப்பசி மாதம் 8 ஆம் நாள் முற் பகல் 10.30 மணிக்குக் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி கொடியேற்ற பூஜை வழிபாட்டுடன் கேதார கௌரி பூஜையும் சிறப்புற நடைபெற திருவருள் பாலித்துள்ளது. இந்த விழாக் காலங்களில் நாம் எல்லாம் தேடிவந்து, நாடிவந்து, கூடி வந்து நாள்தோறும் துதிசெய்து அருள்பெறுவோமாக!.

(13073)

**கொடியேற்றம்:-**
**இன்று (24.10.2012) புதன்கிழமை (ஐப்பசி 8 ஆம் நாள்) முற்பகல் 10.30 மணி**
**தேர்த்திருவிழா:-**
**01.11.2012 வியாழக்கிழமை (ஐப்பசி 16 ஆம் நாள்) பிற்பகல் 3.30 மணி**
**தீர்த்தத் திருவிழா:-**
**02.11.2012 வெள்ளிக்கிழமை (ஐப்பசி 17 ஆம் நாள்) முற்பகல் 10 மணி**

## ஆலய வரலாறு

இந்த சிவ ஆலயம் ஐந்து ஈஸ்வரங்களுள் ஒன்றாகும். கிட்டத்தட்ட 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம். இந்த ஆலயம் போர்த்துக்கீசர் காலத்தில் அழிக்கப்பட்டது. பின்பு இந்த ஆலயம் எமது மூதாதையரின் முயற்சியால் ஒரு சிறிய ஆலயம் அமைக்கப்பட்டு பூசைகள் நடை பெற்று வந்தன. இந்த ஆலயத்தின் திருமஞ்சன கிணறு சாவகச்சேரி பஸ்நிலையத் தில் உள்ளது. இந்த ஆலயத்தின் தல விருட்சம் இத்திமரம், பழைய காலங்களில் சாவகச்சேரி ஊடாக பால் கொண்டு பூநகரி செல்லும் போது தினமும் கால் இத்திமர வேரில் தடக்குப் பட்டு பால் நிலத்தில் ஊற்றிக்கொண்டு விடும். இதனை ஒரு பால் வியாபாரி கோடரி கொண்டு வந்து அந்த வேரை வெட்டினான். அந்த வேளை வேரில் இருந்து இரத்தம் கசி ந்தது. இதனை மக்கள் அறிந்து அதனை பார்த்த போது சிவலிங்கம் தோன்றியது. அதனைத் தொடர்ந்து அம்மன், சூரியன், நந்தி போன்ற விக்கிரகங்கள் எடுக்கப்பட்டன. இக் காரணத்தால் புராதன தான் தோன்றிஸ்வரர் எனப் பெயர் வந்தது. இவை எனது முதாதையர் கார்த்திகேசு அருளம்பலம் இந்த விக்கிரகங்களை ஒரு சிறிய ஆலயம் அமைத்து பூசை செய்து ஓலை குட்டானால் மூடி விடுவார்கள். தினமும் இவ்வாறே பூசை நடைபெறும். காலப் போக்கில் சிவலிங்கமும் அம்மனும் தானாகவே வளர்ந்து வருவதை அவதானித்துள்ளார்கள். காலப் போக்கில் மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் என அமைக்கப்பட்டு முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. இரண்டாவது கும்பாபிஷேகம் 27.05.1993 ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்த ஆலயம் 1987 ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்ட போது, அம்மனை இடம்விட்டு அசைத்த பின்புதான் சிவலிங்கம் அசைந்து கொடுத்தார். 1993 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தம் காரணமாக இவ் ஆலயம் முற்று முழுதான அழிக்கப்பட்டது. பின்பு ஒரு அளவு புனருத் தாரணம் செய்யப்பட்டு பூசைகள் 2003 ஆம் ஆண்டு ஆரம்ப மாகியது. 10.04.2010 ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டு, தென்மராட்சி மக்கள், வெளிநாட்டு மக்கள் உதவியு டன் ஒரு சிறந்த ஆலயமாக அமைக்கப்பட்டு 05.02.2012 ஆம் ஆண்டு மஹாகும்பாபி ஷேகம் நடைபெற்றது. இவ் ஆலயத்தின் வரலாற்று முக்கியத்துவம் அம்மனின் கொடி யேற்றம் 24.10.2012 இடம்பெறும். சிவன் விக்கிரகம் 7 ½ உயரம் என் கோண பட்டம் கொண்டது. அம்மன் விக்கிரகம் 5 ½ உயரம் கொண்டது. - ஆலய தர்மகர்த்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய வானிலை

29° C

| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
| --- | --- | --- | --- | --- |
| யாழ் | | 29°c | 25°c | |
| மன் | | 30°c | 25°c | |
| வவு | | 31°c | 23°c | |
| முல் | | 30°c | 26°c | |
| கிளி | | 30°c | 26°c | |

பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# இலங்கை அகதியை ஏமாற்றிய திரைப்பட தயாரிப்பாளர் கைது

தமிழ்நாட்டின் இராமநாதபுரத்திலுள்ள இலங்கை அகதி ஒருவரை வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றிய தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவரை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் வேலை செய்வதற்கு விசா பெற்றுத் தருவதாகக் கூறி, ஏமாற்றியதாக இராமநாதபுரத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த வசந்தகுமார் என்பவர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே திரைப்படத் தயாரிப்பாளர் சூடாமணியை சென்னை விருகம்பாக்கத்தில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

இந்தியக் குற்றவியல் சட்டத்தின் கீழ் இவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கீயூ பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட திரைப்பட தயாரிப்பாளர் சூடாமணியிடமிருந்து எட்டு போலி கடவுச்சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படத் தயாரிப்பிற்காக தான் பட்ட கடன் சுமை தாங்க முடியாமலேயே இப்படியான வேலையில் ஈடுபட்டதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இவர் அகோரம் எனும் திரைப்படத்தைத் தயாரித்துள்ளார். இவரது தம்பியும் இவ்வாறு ஆள்களை ஏமாற்றும் வேலையில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (3)



யாழ்.கோப்பாய் மகாவித்தியாலயத்தில் அறிவுச் சுடர் கையெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சஞ்சிகையை பாடசாலை மாணவி வெளியிட்டு வைக்க கோப்பாய் மகாவித்தியாலய அதிபர் க.வீரசிங்கம் பெற்றுக்கொள்கிறார். விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி வி.பாலசுப்பிரமணியம், சின்மையா மிஷன் சுவாமியும் கலந்து கொண்டனர். (எ-5)

## லயன்ஸ் கழகத்தின் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், ஒக்.24

யாழ்.லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ முகாம் அண்மையில் நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தில் நடை பெற்றது.

பொது வைத்தியம், இரத்த அழுத்தம், நீரிழிவு பரிசோதனை போன்றன இடம்பெற்றன. இதில் விசேடமாகக் கண்பரிசோதனை இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## வாணி விழா

துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் அறநெறிப்பாடசாலை, அல்லைம்யபதி முன்பள்ளி ஆகியன இணைந்து நடத்தும் விஜயதசமி பூசையும் கூட்டுப் பிரார்த்தனையும் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வடிவேலர் மணி மண்டபத்தில் நடைபெறும். (3-8)

* * *

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வாணி விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்ற அலுவலக மண்டபத்தில் நடைபெறுமெனதலைவர் வ. ஸ்ரீ பிரகாஸ் அறிவித்துள்ளார். (3-9)

* * *

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியக் கல்லூரியில் வாணிவிழா இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலை ஆசிரியர் நா.சசிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (3)

## ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

மன்னார், ஒக்.24

அண்மையில் வெளியான ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சைப்பெறுபேறுகள் வருமாறு:-

**மன்னார் புனித சவேரியர் பெண்கள் தேசிய பாடசாலை**

சுவேதா ரவீந்திரகுமார்(168), சொமினா சுரோமினி றொபேட் ராஜன்(164), ஐதுர்சிகா தருமநாயகம் அருமை ரூபன்(163), மேரி துஷிக்கா டயஸ் திலகராஜன்(161), லாவண்யா மனோபாரதி(160), இம்மானுவல் அமலராஜா(156), ஜெனுஷா ஜெனிங்ஸ்(154), சஞ்சனா ரமணகுமார்(153), ஜயனிஷா தினகரன்(152), மிதுர்னா அன்புராஜ்(152), சுபிக்சா புஸ்பராசா(150), விதுர்ஷனா மல்காந்தி சிவராசா(150), பவித்திரா சந்திரகாந்தன்(150), திவ்வியா மேரிநாதன்(149), செனிக்கா சனோலின் யஸ்ரின்(149), அபிஷா யோசேப்(147), கிஷாந்தனா லவக்குமார்(146), மெற்றில் பியூலா பற்றிக் ஆனந்தகுமார்(146) (3-12)

## பரிசில் தினமும் நிறுவுநர் தினமும்

தென்மராட்சி, ஒக்.24

மட்டுவில் கமலாசனி வித்தியாலயப் பரிசில் தினமும் நிறுவுநர் தினமும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய தம்பையா அரங்கில் இடம்பெறும். வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக வித்தியாலய பழைய மாணவியும் சட்டத்தரணியுமாகிய திருமதி நளினி கணேசயோகனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கமும் கௌரவ விருந்தினராக வித்தியாலய முன்னாள் உப அதிபர் திருமதி ந.அம்பிகைப்பிள்ளையும் கலந்து கொள்வர்.

நினைவுப் பேருரையினை யாழ். பல்கலைக்கழன முகாமைத்துவ பீட சந்தைப்படுத்தல்துறை தலைவர் இ.ரட்ணம் நிகழ்த்துவார். ஆசியுரையை தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்விஉதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா நிகழ்த்துவார். (3-9)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

உளம் மகிழ பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி விஜயபாரதி வெங்கடேஸ்வரன்
(ஆசிரியை, யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)
09.10.2012 அன்று மீபே கல்வி அபிவிருத்தி நிலையத்தில்
அதிமேதகு ஜனாதிபதியிடம் 'பிரதீபா பிரபா'
விருதினைப் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல விருதுகள்
பெற்று வாழ்வில் மேன்மையுற வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
திருமதி கமலராணி ஜெயபாலசிங்கம்
(உதவிக் கல்விப் பணிப்பாளர் - அழகியல்).
திருமதி சாந்தகுமாரி விஜயகுமார்
(ஆசிரிய ஆலோசகர், யாழ். கல்வி வலயம்).
திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்
(ஆசிரியை, யா/ கனகரட்ணம் ம.ம. வித்தியாலயம்)
திருமதி கலையரசி சிவகுமார்
(ஆசிரியை, யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்).
திருமதி ஞானாம்பிகை ஜெகதீஸ்வரன்
(ஆசிரியை, யா/ புனித ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை)
Best Wishes
(சி/3242)(6.7.8)

கடை வாடகைக்கு
கோண்டாவில் கிழக்கு சந்தியில், இருபாலை றோட்டில் புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட 2 கடைகள் வாடகைக்கு உள்ளன.
தொடர்பு : 021 4907069, 001 5628603828
Email - rudirudra@yahoo.com
(24537)(6.7.8)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் 2012 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைத் தேர்வில் 181 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் முதன்மை மாணவனாகச் சித்தியடைந்த
செல்வன்
கலைச்செழியன் சுடர்ச்செழியன்
அவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பெற்பதி வீதி, கொக்குவில். வனஜா 077 4110 072
(சி/4287)(45.6.7)

யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் 2012
காலம்
11.11.2012 ஞாயிற்றுக் கிழமை
இடம்
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
தலைமை
க. இலங்கநாதன் அவர்கள்
(சங்கத் தலைவர்)
மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 11.11.2012 அன்று நடத்த தீர்மானித்திருப்பதனால் அங்கத்தவர்கள் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை 30.10.2012 செவ்வாய்க்கிழமைக்கு முன் கிடைக்கக் கூடியதாக சங்கக் காரியாலய முகவரிக்கு செயலாளர் என குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.
அங்கத்தவர்களுக்கு அவர்களால் தரப்பட்ட முகவரிக்கு கூட்ட நிகழ்ச்சி நிரல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
செயலாளர் சு. நாகேந்திரன்
(சி/4284)(45-6-7)

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (வ-து)
கொடிகாமம்
எரிபொருள் நிரப்பு நிலைய கட்டடம் முன்பதான மேற்கூரை (CANOPY) அமைத்தற்கான கூறுவிலை கோரல்
★ கேள்விப்பத்திரம் வழங்கப்படும்
திகதி: 24.10.2012- 06.11.2012
★ கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 06.11.2012 நண்பகல் 12 மணிவரை
★ கேள்விப்பத்திரம் திறக்கப்படும்
திகதி: 06.11.2012 பிற்பகல் ஒரு மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
★ மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக 1000.00 ரூபாவும் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக 5000.00 ரூபாவும் செலுத்துதல் வேண்டும்.
★ சரியாக பூர்த்தி செய்யப்படாத தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் உண்டு.
★ கேள்வி விண்ணப்பப் படிவத்தினையும், கூரை வரைபடத்தினையும் நிபந்தனைகளையும் தலைமைப்பணிமனையில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
பொது முகாமையாளர்.
(சி/4288)(45-6-7)

Jaffna College Institute of Technology
BIT
Bachelor's of Information Technology
(External Degree School of Computing, University of Colombo)
கொழும்பு பல்கலைக் கழக வெளிவாரி பட்டப்படிப்பினால் நடத்தப்படும்
Bachelor's of Information Technology (BIT)
கற்கை நெறிக்கு 31.10.2012 ற்கு முன் பதிவு செய்து கற்கை நெறியை தொடங்கவும்.
குறைந்த கட்டணத்தில் கற்கை நெறியை தொடருங்கள்



Facilities
Easy Installment ,More Practical hours,
Modern Lab, Auditorium
Hostel, library & Sports, etc.
More Information
Director,
Jaffna College Institute of Technology,Vaddukoddai.
T.P No.021 321 3139 / 021 222 8275
E-Mail jcit@sltnet.lk www.jcit.lk
(சி/4275)(45-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணையத்தில் சுயமாக வேலை செய்வதற்கு**

Part Time | Full Time

மாதம் ஒரு லட்சம் (RS 100, 000/=) வரை

**Data Entry, Web Designing, Face Book, Copy Typing, Photoshop, C++, Java, Accounting......**

உட்பட 300 க்கும் மேற்பட்ட வேலைகள்

ON LINE JOBS — International Master Card வேலை விலக்கம்

ACS

Tel : 077 3967334/077 0071835

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சந்தியில் இருந்து 100m தொலைவில்



## வீடு விற்பனைக்கு

குமரக்கோட்டம், கோண்டாவில் முனியப்பர் கோயிலடி அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 4985637

(சி/2080)(6.7.8)




## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### சின்னக்குட்டி சண்முகராசா

(காங்கேசன்துறை கூட்டுத்தாபன ஊழியர்)

தாயின் மடியில் 01.12.1936 — மண்ணின் மடியில் 14.11.2002

திதி: தசமி (24.10.2012)

எமையெல்லாம் ஏங்க வைத்து எமனோடு போனதேனோ?
எம் அப்பாவின் நினைவுகளோ பத்து ஆண்டுகள் சென்றாலும்
நாம் மறவோம் அப்பாவே!

உங்கள் பிரிவால் வாடும் ச. சிவபாலகிருஸ்ணன்
(மகன் - ராஜன்- அளவெட்டி)

இளவாலை வடக்கு, இளவாலை.

(24682)(45-6-7)




வாழும் கலை குடும்பம் வழங்கும்

வாழும் கலை பாகம் I பயின்றவருக்கான

## திவ்ய சமாஜ் கா நிர்மான்

உங்களின் அதி உன்னத நிலையை

**DSN இல் அடைந்திடுவீர்**

இடம் : யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
காலம் : 26.10.2012 - 29.10.2012 ( அரசாங்க விடுமுறை)
பதிவு நேரம் : 26.10.2012 3.00 - 4.00

★ DSN உங்களை வலிமை மிக்கவராகவும், அசைக்க முடியாதவராகவும் உருவாக்குகின்றது.
★ DSN பய உணர்வைப் போக்கி புத்துணர்வு அளிக்கிறது.
★ DSN தேவையில்லாத பழக்கவழக்கங்களில் இருந்து உங்களை விடுவிக்கிறது.
★ DSN உங்களுக்குள் உள்ள தனித்தன்மையை அதிகமாக பிரகாசிக்கச் செய்கிறது.
★ DSN உங்களுக்குள் உள்ள நல்ல குணங்களை மெருகூட்டி நிலைபெறச் செய்கிறது.

நமது குருஜியின் வார்த்தைகளில் ( மான்ட்ரியல் ஆசிரமம் - கனடா)

நீங்கள் ஒரு கூட்டினுள் சிக்கிக்கொண்டு புழுங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அதனுள் இருந்து கொண்டே எல்லாவற்றையும் எடை போடுகிறீர்கள். DSN பயிற்சி உங்களைச் சுற்றியுள்ள தடைகளை அகற்றி வேலிகளை உடைத்தெறியும். நீங்கள் சிக்கியுள்ள கூட்டிலிருந்து விடுதலையடைந்து சிறகடித்துப் பறக்க ஆரம்பித்து விடுவீர்கள். உங்களுக்குள் இருக்கும் அன்பும் மலரும், தன்னம்பிக்கை வளரும் மொத்தத்தில் உங்களுடைய ஆளுமை பிரகாசிக்கும். ஆகவே DSN செய்ய வாய்ப்புக் கிடைத்தால் Don't Say No !

தொடர்புகளுக்கு : 011 2367067, 077 4277375, 077 2247635, 077 3233187,

(சி/4296)(6.7.8)





卐

'சுவஸ்திக்நாட்டியபள்ளி'

விஜயதசமி 24.10.2012 அன்று பிரபல்யமான ஆசிரியர்களால் கவின் கலை வகுப்புக்கள்
ஆரம்பம் நேரம் - பிற்பகல் 3.00 மணி

பரத நாட்டியம் (கீதாஞ்சலி சுதர்ஷன் சென்னை கலாஷேத்திரா பட்டதாரி)
மிருதங்கம்
வயலின்
வீணை
வாய்ப்பாட்டு
புல்லாங்குழல்

வித்யாரம்பம்

இடம் - 8A சிறாம்பியடி வீதி
ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்
தொடர்பு - 0777301975


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் தலைமை அலுவலக கூட்டுறவுப் பரிசோதகர்களாக கடமையாற்றி வருகின்ற



Best Wishes



**இ. விஜயமோகனராசா**
சமாதான நீதிவான் -
யாழ். மாவட்டம் அவர்களும்

**தி. வித்தகக்கலாநிதி**
அவர்களும்

உள்ளூராட்சி நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு, கூட்டுறவு கிராம அபிவிருத்தி கைத்தொழில் சமூக சேவைகள், நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு (சேவைகள்) அமைச்சினால் வடக்குமாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றிருக்கும் இவர்களை மனதாரப் பாராட்டி மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வாறே இவர்கள் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**பணிப்பாளர்களும், பணியாளர்களும்.**

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்.
பருத்தித்துறை வீதி, அச்சுவேலி.

(சி/4285)(6.7.8)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் தலைமை அலுவலக கூட்டுறவுப் பரிசோதகர்களாக கடமையாற்றி வருகின்ற





Best Wishes





**இ. விஜயமோகனராசா**
சமாதான நீதிவான் -
யாழ். மாவட்டம் அவர்களும்

**தி. வித்தகக்கலாநிதி**
அவர்களும்

உள்ளூராட்சி நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு, கூட்டுறவு கிராம அபிவிருத்தி கைத்தொழில் சமூக சேவைகள், நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு (சேவைகள்) அமைச்சினால் வடக்குமாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றிருக்கும் இவர்களை மனதாரப் பாராட்டி மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வாறே இவர்கள் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**பணிப்பாளர்களும், பணியாளர்களும்.**


பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்.
கிராமக்கோட்டி, புலோலி, பருத்தித்துறை. 021 2260032

(சி/4285)(6.7.8)


## வாகன உரிமையாளர்களுக்கு ஒரு நற்செய்தி





## சபீஷன்

### சேர்விஸ் ஸ்டேசன் திறப்புவிழா

அனைத்து விதமான வாகனங்களும் சேர்விஸ் செய்து கொடுக்கக்கூடிய எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
சபீஷன் சேர்விஸ் ஸ்டேசன் இன்று 24.10.2012 முற்பகல் 10.00 மணிக்கு



**HNB சாவகச்சேரி கிளை முகாமையாளர்**

**N.N. கருணைராஜ்**

அவர்களால் A9 வீதி, இராமாவில், கொடிகாமம் எனும் முகவரியில் திறந்து வைக்கப்படும் என்பதை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்

A9 வீதி, இராமாவில், கொடிகாமம்.

(24684)(6.7.8)

உரிமையாளர்: S. குசந்தன் [077 9943979]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையோரம் பேணல் திணைக்களத்தின் அனுமதியின்றி வடக்கில் 23 கட்டடங்கள்

## திட்டப் பணிப்பாளர் ஹேவே தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.24

வடமாகாணத்தில் பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் கரையோரம் பேணல் மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதியின்றி 23 கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான கட்டடங்கள் அனுமதியற்ற கட்டடங்களாகவே கொள்ளப்படும்.

இவ்வாறு கரையோரங்கள் பேணல் மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எச்.ஜி.ஹேவே தெரிவித்துள்ளார்.

வாடிவீடுகள், சந்தைகள், பாடசாலைகள், முன்பள்ளிகள், ஹோட்டல்கள் என்பன இவ்வாறு கட்டப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைகளின் அனுமதியைப் பெற்று கடற்கரையோரங்களில் கட்டடங்கள் அமைக்கப்படும் போது கடற்கரையில் இருந்து எவ்வளவு தூரத்தில் உட்கட்டுமானம் அமைய வேண்டும் என்பதற்கான அனுமதியை கரையோரம் பேணல் மற்றும் மூலவள முகாமைத்துவ திணைக்களம் வழங்க வேண்டியது அவசியம். எனவே, கடற்கரையோரங்களில் கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் போது மாவட்ட செயலகங்களில் இதற்கான பிரத்தியேக பணிமனை உருவாக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட செயலகங்களில் இதற்கான படிவங்களைப் பெற்று பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ்வரும் கரையோரம் பேணல் மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதியை 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ம-50)

# இந்தியா செல்லும் இலங்கை பக்தர்களுக்குப் பாதுகாப்பு

## இந்தியப் பொலிஸார் உறுதி

இந்தியாவுக்கு யாத்திரை செல்லும் இலங்கை பக்தர்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று இந்திய பொலிஸார் உறுதி வழங்கியுள்ளதாக இலங்கை மகா போதி சங்கம் தெரிவித்துள்ளது.

தமிழகப் பொலிஸார், சென்னையில் உள்ள மகா போதி விகாரைக்கு பாதுகாப்பு வழங்கியுள்ளதாகவும் சென்னைக்குச் செல்லும் இலங்கை பக்தர்கள் சென்னையில் தங்கியிருக்க அச்சம் கொள்ள தேவை யில்லை என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

சென்னை மகாபோதி சங்கத்துக்குச் செல்லும் இலங்கைப் பக்தர்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளமை குறித்து மகாபோதி சங்கம் அனைத்துத் தரப்பினருக்கும் தனது நன்றிகளை தெரிவித்து கொள்வதாகவும் மேலும் தெரிவித்தது.(வ)

# வேலணை கூ. சங்கத்துக்கு கிளைக் குழுத் தேர்தல்

யாழ்ப்பாணம், ஒக்.24

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குத் தேர்தல் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே அருந்தவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் 16 கிளைகளுக்குத் தெரிவு செய்வதற்காக ஞாயிற்றுக்கிழமை இந்தத் தேர்தல் இடம்பெறுகின்றது.

இந்தத் தேர்தலில் சகல உறுப்பினர்களும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி சங்கத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். கிளைக் குழுத் தேர்தல் முடிவடைந்ததும் பொதுச் சபை விரைவில் கூடி புதிய இயக்குநர் சபை ஒன்று தெரிவு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (8-17)

# வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் நாடெங்கும் மரக்கறி வழங்கல்

வலி. வடக்கு, ஒக்.24

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் மக்களுக்கு மரக்கறி விதைகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நாளை வியாழக்கிழமை நாடு முழுவதும் இடம்பெறவுள்ளது.

கடந்த மூன்று நாள்களாக இலங்கை முழுவதும் சுமார் 50 இலட்சம் குடும்பங்களுக்கு விதை தானியங்கள் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சம்பிரதாயபூர்வமான ஆரம்ப நிகழ்வு நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாகவும் குறித்த நேரத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சும் பொருளாதார அமைச்சும் இணைந்து வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில்இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-86)

# ஈழத் தமிழருக்கு நீதி கிடைக்க பொது வாக்கெடுப்பு அவசியம்

## தமிழகத்தில் மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் கருத்து

ஈழத் தமிழர்களுக்கு நீதிகிடைக்க பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தமிழகத்தின் மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர் வாழ்விடங்களில் என்றுமில்லாதவாறு சிங்களவர்களின் குடி யேற்றம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. தமிழர்களின் மணலாறு பகுதி வெலிஓயா என்று பெயர் மாற்றப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் உள்ள இந்தபகுதியில் 11 ஆயிரம் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அத்துடன் தமிழர்களின் இந்த பிரச்சினைக்கு உலகத்தில் ஏனைய நாடுகளில் நடந்த மாதிரி அங்கும் ஒரு வாக்கெடுப்பு நடத்தவேண்டும். இது ஐ.நாவினுடைய விதி. இது கடைப்பிடிக்கப்பட வேண்டும் பாதிக்கப்பட்ட சமூகத்துக்குக் கிடைக்க வேண்டியது நீதி குற்றவாளிகள் மீது ஒரு பன்னாட்டளவிலான விசாரணை நடத்தப்படவேண்டும். (வ)

செல்வ நாயகம் ரவிசாந்
குப்பிளான்

# விஜயதசமி நன்னாள் விருத்தி தரும் பொன்னாள்

**நவராத்திரி பூசைக்கு உகந்த காலம் இரவுப் பொழுதாகும். இவ்வாறு பூசையை நிகழ்த்தும் போது அருகில் இரண்டு முதல் பத்து வயது வரையுள்ள குழந்தைகளை அமர வைப்பதோடு அவர்களை ஆராதிப்பது நல்லது.**



நவம் என்றால் ஒன்பது, நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள். எல்லாம் வல்ல ஆதி பராசக்திகளான துர்க்கை, லக்குமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களைக் குறித்து இமயம் முதல் குமரி வரை ஒரே காலத்தில் அனுட்டிக்கப்படுவது இந்த விரதத்துக்கேயுரிய தனிச் சிறப்பாகும்.

மனித வாழ்க்கையை வளம்படுத்த கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றும் மிகமிக முக்கியமானவை. காற்றின்றி எம்மால் வாழ முடியாது. அதே போல மேற்கூறப்பட்ட மூவகைச் செல்வங்களுமில்லாத மனித வாழ்க்கை அர்த்தமற்றது.

அந்த வகையில் நவராத்திரி காலங்களில் வீரத்தின் அதிபதியான துர்க்காதேவியையும், செல்வத்தின் நாயகி இலக்குமி தேவியையும், கல்விகு அரசியான சரஸ்வதி தேவியையும் வழிபாடு செய்கின்றோம்.

### ஆயுத பூஜை

நவராத்திரியின் ஒன்பதாம் நாளான சரஸ்வதி பூசை (மகா நவமி) என்ற பெயரில் கொண்டாடப்படுகின்றது. இதனை (ஆயுத பூசை) என்றும் அழைப்பர். செய்யும் தொழிலே தெய்வம், என்பது போல் அவரவர் தமது தொழிலுக்கு பயன்படுத்தும் ஆயுதங்களை வைத்து பூசை செய்வர்.

### விஜயதசமி

ஒன்பது நாள்களும் வீடுகள், ஆலயங்கள், பொது ஸ்தாபனங்கள் தோறும் நிறை குடம் வைத்து விரதம் அனுட்டிக்கும் இந்து மக்கள் பத்தாம் நாளான விஜய தசமி அன்று பெருவிழா எடுத்துக் கும்பத்தைக் கொண்டு சென்று கிணற்றிலோ , ஆற்றிலோ, கடலிலோ சரிப்பர். பத்தாவது தினமாகிய விஜயதசமி வெற்றிக்குரிய விஷேட தினம் எனவும், 'தசரா' எனவும் அழைக்கப்படும். இப்புண்ணிய நாளில் ஆரம்பிக்கப்படும் எச் செயலும் இனிதே விருத்தியடையும். அதன் காரணமாக இந்த நாளில் குழந்தைகளுக்கு ஏடு தொடக்குதல் (வித்தியாரம்பம்) மேற்கொள்ளப்படுகின்றது. விஜயதசமியன்று ஆரம்பிக்கப்படும் ஏடு தொடக்குதல், காது குத்துதல், புதுமனை புகுதல், புதிதாக கலைகள் பயிலுதல் போன்றன வாழ்க்கையின் நல்லதொரு ஆரம்பமாக அமைகின்றது. இந்த நாளில் அம்பிகை ஆலயங்களில் மகிஷாசுரனை வென்ற மகிஷாசுரவர்த்தினிக்குச் சிறப்பாக விழா எடுப்பார்கள். கொலுவிருந்த விக்கிரகத்தைக் குதிரை வாகனத்திலேற்றி திருவீதி உலா வரச் செய்வர். பின்னர் வாழை வெட்டு இடம்பெறும். இதனை 'மானம் பூ' என்றும் அழைப்பர். மகிஷாசுரன் என்ற அசுரனைத் தேவி சங்கரித்த தன் பாவனையாகவே இந்த நிகழ்வு இன்றுவரை ஆலயங்களில் இடம்பெற்று வருகிறது.

### நவராத்திரி கதை

'மானம்பூ விழா' உருவாகக் காரணமான புராணக் கதையை இவ்விடத்தில் நினைவூட்டுவது பொருத்தமானது.அசுரத் தலைவன் மகிடா சூரன் கொடுமையால் தேவர்கள் வீரம், செல்வம், கல்வி அற்றவர்களானார்கள். வீரர்களான தேவர்களைக் கோழையாக்கி அடி பணிய வைத்தான். இதன் காரணமாகத் தேவர்களைக் காக்கத் திருவுளம் கொண்ட அம்பாள் மகிஷா சுரனை போருக் [illegible] இறுதியில் வெற்றியும் பெற்றாள்.

தேவியின் போர்க்கோலத்தைக் கண்டு அஞ்சி நடுங்கிய மகிஷாசுரன் வன்னிமரமாக உருமாறி மாயை செய்தான் என்பதும், தேவி மகிஷாசுர வர்த்தனியாக ஆவேசங்கொண்டு அவனை வதம் செய்தாள் என்பதும் புராணக் கதை உணர்த்தும் சுருக்கம்.

சிவபக்தியிலே சிறந்த இராவணனை வெல்வது கடினம் என்று எண்ணிய இராமன் அகத்தியரிடம் சென்று ஸ்ரீவித்தியா மகா மந்திரத்தை உபதேசம் பெற்றார். இம்மந்திரத்தை ஒன்பது நாளும் உச்சாடனம் செய்து துர்க்காம்பிகையின் அருள்பெற்று விஜய தசமியன்று இராமன் வெறி பெற்றதாக அறிய முடிகிறது.

அது மட்டுமன்றி பாண்டவர்கள் அஞ்ஞான வாசம் முடித்துத் தாங்கள் வன்னி மரத்தில் ஒழித்து வைத்துவிட்டுப் போன ஆயுதங்களை இந்த விஜயதசமியில் மீண்டும் எடுத்தார்களாம். பாண்டவர்கள் விராட நகரத்தில் அஞ்ஞான வாசத்திலிருந்த போது கௌரவ படை அவர்களை அழிக்க முயன்றார்களாம் அப்போது கௌரவ படையை பாண்டவர்கள் வெற்றி கொள்வதற்காகத் துர்க்கையை வழிபட்டதாகவும் அதன் மூலம் போரில் வெற்றி வாகை சூடியதாகவும் வரலாறு கூறுகின்றது.

### நவராத்திரியும் வழிபடும் முறையும்

நவராத்திரியின் முதல் மூன்று நாள்களிலும் சிவப்பு மற்றும் மஞ்சள் மலர்களால் மலை மகளையும், நடு மூன்று நாள்களிலும் செந்தாமரை , மகளையும் பூக்களால் அலைமகளையும், இறுதி மூன்ற நாள்களிலும் மல்லிகை, முல்லை, நந்தியாவட்டை முதலிய மலர்களால் கலைமகளையும் வழிபடுதல் மேன்மை தரும்.

நவராத்திரி பூசைக்கு உகந்த காலம் இரவுப் பொழுதாகும். இவ்வாறு பூசையை நிகழ்த்தும் போது அருகில் இரண்டு முதல் பத்து வயது வரையுள்ள குழந்தைகளை அமர வைப்பதோடு அவர்களை ஆராதிப்பது நல்லது. நவராத்திரி விரத காலத்திற்குரிய சிறப்பு நிவேதனப் பொருள்கள் வடை, தேன்குழல், எள்ளுருண்டை முதலியனவாம் அவல், கடலை, பொங்கலும் வைக்கலாம்.

நவராத்திரியின் ஒன்பது நாள்களிலும் தேவிக்கு உகந்த லலிதா சகஸ்ர நாமம், சகலகலாவல்லி மாலை, அபிராமி அந்தாதி, மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் , சௌந்தர்ய லஹரி, துர்க்காஷ்டகம் போன்ற திருப்பாடல்கள் ஓதத்தக்கன. புனிதமும் மகிமையும் மிக்க நலந்தரும் நவராத்திரி விரதத்தை முறைப்படி அனுட்டித்து கல்வி, செல்வம்,வீரம் ஆகிய முப்பெரும் செல்வங்களையும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களை தெரிவு செய்வதற்கான போட்டிகளை நடத்தி வருகின்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவு வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாமிடத்தை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக தெரிவு அணி பெற்றுக்கொண்டது. (ங-23)

# யாழ்.கோட்ட மட்ட உதைபந்தாட்டம் அரையிறுதி மத்திய கல்லூரியில் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.24

யாழ்.கல்விக் கோட்டமட்ட பாடசலைகளுக்கு இடையிலான 14,16,18 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டங்கள் இன்று புதன்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெ றவுள்ளன.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஒஸ்மானியாக் கல்லூரி அணி மோதவுள்ளது. இதேவேளை சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், சென்.சாள்ஸ் மகாவித் தியாலய அணிக்கும் இடையில் இடம்பெறும் காலிறுதி ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி, மற்றைய அரையிறுதிப் போட்டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை அணியுடன் மோதவுள்ளது.

16 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை மோதவுள்ளது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி களமிறங்கவுள்ளது.

இன்னொரு அரையிறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

யாழ்.கல்வி கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான குழுநிலைப் போட்டிகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றிருந்தன .

மேற்படி குழுநிலைப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு;

16 வயது பிரிவு அணிகளுக்கிடையேயான போட்டிகளில் முதலாவது ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து குருநகர் சென்.ஜேம்ஸ் பாடசாலை அணி மோதிக்கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாத தினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணியை வெற்றி கொண்டது.

16 வயது பிரிவு அணிகளுக்கிடையேயான இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணியை எதிர்த்து கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணி மோதிக்கொண்டது.

இதில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணியை வீழ்த்தியது.

16 வயது பிரிவு அணிகளுக்கிடையே மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.சாள்ஸ் மகாவித்தியாலய அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

அதன் பின்னர் 18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையேயான போட்டிகள் நடைபெற்றன. இதில் முதலாவது ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி மோதிக்கொண்டது.

இதில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கணக்கில் சென். ஜோன்ஸை வீழ்த்தியது. (ங-23)

## நவஜீவன், சென்.லூட்ஸ் வென்றன



யாழ்ப்பாணம்,ஒக்.24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இடம்பெற்ற ஆட்டத்தில் நவஜீவன் விளையாட்டுக் கழக அணி,சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி ஆகியன வெற்றியீட்டியுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நவஜீவன் அணியும் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியும் மோதிக்கொண்டன.

இதில் நவஜீவன் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றியீட்டியது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.

ஆட்டநேர முடிவில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களை பெற்ற தினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநி லை தவிர்ப்பு உதை கள் வழங்கப்பட்டன. இதில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட் டியது. (ங-23)



புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை செட்டிக்குளம் மருதமடு புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்றது. இதில் பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் பங்கு பற்றிய போட்டியாளர்களை காணலாம். (ங-23)

## ஹென்றிஸ்–சென்.ஜோன்ஸ் சிநேகபூர்வ உதைபந்து முடிவு

யாழ்ப்பாணம், ஒக்.24

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரி க்கும் இடையிலான 14 வயது, 16 வயது, 18 வயது, 19 வயது பிரிவு அணி களுக்கு இடையிலான சிநேக பூர்வ உதை பந்தாட்டப் போட்டிகள் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத் தில் நேற்று செவ்வாய் கிழமை இடம் பெற்றன. இதில் 14 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை வெற்றி கொண்டது.

16 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

18 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை வெற்றி கொண்டது.

21 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 3:2என்ற கோல்கணக்கில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை தோற்கடித்தது. (ங-23)

## வடமாகாண உதைபந்துப் போட்டி

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத் துறை அமைச்சும் இணைந்து தேசிய அணிக்கு உதைபந்தாட்ட வீரர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிகளை நடத்திவருகின்றன.

இந்த செயற்திட்டத்தின் படி, வடமாகாண மட்டத்திலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 31ஆம் மற்றும் முதலாம் திகதிகளில் வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு , வவுனியா, மன்னார் மாவட்டங்களின் தெரிவு அணிகள் பங்குபற்றவுள்ளன.(ங-23)

# பொலிஸ் நிலைய பூப்பந்துகிளிநொச்சி சம்பியனானது

கிளிநொச்சி,ஒக்24

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தினால் இலங்கையில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்க ளுக்கிடையே நடத்தப்பட்ட பூப்பந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையம் சம்பியனானது.

வருடாவருடம்இலங்கைப் பொலிஸ் நிலையங்களுக்கு இடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தவகை யில் 2012 ஆம் ஆண்டுக்கான இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தினால் கொழும்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் பூப்பந்தாட்டத்தில் கிளிநொச்சி [illegible] எதிர் கொண்ட அணிகளை இலகுவாக வீழ்த்தி சம்பியனானது. பூப்பந்தாட்டப் போட்டி யில் வெற்றிபெற்றுக் கொடுத்த வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட் கிழமை முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் நடை பெற்றது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணப் பொலிஸ் பொறுப் பதிகாரி, கிளிநொச்சி முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி என்.டி.நீல் தளுவத்த மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட னர்.(ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிங்கவை மறந்து விட்டனர்

லசித் மலிங்க இலங்கைக்காக வெளிப்படுத்திய சிறந்த பெறுபேறுகளை அனைவரும் மறந்து விட்டதாகவும், அதன் காரணமாகவே அவர் மீதான விமர்சனங்கள் எழுப்பப்பட்டு வருவதாக இலங்கை அணியின் முன்னாள் வீரரும், நேர்முக வர்ணனையாளருமான ரசல் ஆர்னல்ட் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான உலக 'ரி-20' தொடரின் இறுதி ஆட்டத்தில் லசித் மலிங்க எதிர்பார்த்தளவு பந்துவீசியிருக்காததன் காரணமாக அவர் மீதான விமர்சனங்கள் அதிகரித்துள்ளன. அவர் இலங்கை சார்பாக விளையாடும்போது போதியளவு ஈடுபாட்டுடன் போட்டியில் பங்குபற்றுவதில்லை என்று இலங்கை ரசிகர்களால் குற்றஞ்சாட்டப்படுகிறார்.

அது குறித்துக் கேட்கப்பட்ட போது கருத்துத் தெரிவித்த ரசல் ஆர்னல்ட், அவ்வாறான விமர்சனங்களைக் கேட்பதைத் தான் தவிர்த்துக் கொண்டதாகவும், ஏதாவது தவறாக நடக்கும் போது ஏனையோரின் விமர்சனங்களைச் செவிமடுப்பதைத் தான் தவிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

லசித் மலிங்க மீதான குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை எனத் தெரிவித்த ரசல் ஆர்னல்ட், இறுதி ஆட்டத்தில் லசித் மலிங்கவின் பந்துவீச்சை மார்லன் சாமுவேல்ஸ் அடித்தாடியதாகவும், ஆனால் மக்கள் அவரின் மிகச்சிறந்த பெறுபேறுகள் பலவற்றை மறந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

விளையாட்டு வீரர்களுக்கு மோசமான நாள்கள் என்பன ஏற்படக்கூடியன எனத் தெரிவித்த ரசல் ஆர்னல்ட், துரதிர்ஷ்டவசமாக லசித் மலிங்கவுக்கு அது இறுதி ஆட்டத்தில் ஏற்பட்டுவிட்டதாகத் தெரிவித்தார்.

(5)



# மும்பை அணி அம்போ

# ஆறுதல் வெற்றியும் இல்லை

CHAMPIONS LEAGUE TWENTY 20

சம்பியன்ஸ் லீக் தொடரில் நடப்புச் சம்பியன் மும்பை அணி, சிட்னி சிக்ஸர்ஸ் அணியிடம் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இதன் மூலம் நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்கிய மும்பை அணி ஒரு வெற்றி கூட பெறாமல் வெறுங்கையுடன் நாடு திரும்புகிறது.

தென்னாபிரிக்காவில் சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர் நடக்கின்றது. நேற்றுமுன்தினம் டர்பனில் நடந்த 'பி' பிரிவு லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ், ஆஸ்திரேலியாவின் சிட்னி சிக்ஸர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற சிட்னி அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

ஏற்கனவே அரையிறுதிக்கு முன்னேறிய சிட்னி சிக்ஸர்ஸ் அணிக்கு வொட்சன் இல்லாததால் வலுவான தொடக்கம் கிடைக்கவில்லை. மலிங்க பந்தில் லம்ப்(28) வெளியேறினார். ஆட்டத்தின் 6 ஆவது பந்துப் பரிமாற்றத்தை அபாரமாக வீசிய முனாப் பட்டேல், இரட்டை அடி கொடுத்தார். நெவில் (5), பிராட் ஹடினை (0) ஆட்டமிழக்கச் செய்தார். ஓஜா பந்துப் பரிமாற்றத்தில் ஒரு சிக்ஸர், பவுண்டரி அடித்த மடின்சன் (27) 'ரன் அவுட்டானார்'. ஹர்பஜன் சுழலில் ஹென்ரிக்ஸ்(0) சிக்கினார். கீபி(6) தாக்குப்பிடிக்கவில்லை. ஒருபக்கம் இலக்குகள் சரிந்தாலும் மறுபக்கம் போராடிய ஸ்டீவன் ஸ்மித்(41), மலிங்க வேகத்தில் 'போல்டாக', ஓட்ட எண்ணிக்கை உயர வாய்ப்பு இல்லாமல் போனது. சிட்னி சிக்ஸர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளுக்கு 136 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. நதன் மெக்கலம் (20), கும்மின்ஸ்(5) ஆட்டமிழக்காமல் இருந்தனர். மும்பை சார்பில் முனாப் பட்டேல், மலிங்க தலா 2 இலக்குகள் வீழ்த்தினர்.

ஏற்கனவே அரையிறுதி வாய்ப்பை இழந்த மும்பை அணிக்கு சச்சின், டுவைன் ஸ்மித் சேர்ந்து மந்தமான தொடக்கம் கொடுத்தனர். பின்னர் அதிரடிக்கு மாறிய இவர்கள், மிக விரைவாக ஓட்டங்கள் சேர்த்தனர். முதல் இலக்குக்கு 52 ஓட்டங்கள் சேர்த்த போது, ஹென்ரிக்ஸ் திருப்புமுனை ஏற்படுத்தினார். ஆட்டத்தின் 9 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய இவர், இரண்டாவது பந்தில் ஸ்மித்தை (26) வெளியேற்றினார். 5 ஆவது பந்தில் சச்சினை (22) 'போல்டாக்கினார்'.இதற்கு பின்னர் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்களான ரோகித் சர்மா (16), பொலார்ட்(4), தினேஷ் கார்த்திக்(18), பெரேரா (2), ராயுடு (6) சொதப்பினர். ஸ்டார்க் வீசிய கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் ஹர்பஜன் ஒரு சிக்ஸர், 3 பவுண்டரிகள் விளாசிய போதும், அது எவ்வித பயனும் அளிக்கவில்லை. மும்பை அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளுக்கு 124 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது. ஹர்பஜன்(22) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஆட்ட நாயகன் விருதை ஸ்டீவன் ஸ்மித் வென்றார்.

### கார்த்திக் 'காமெடி'

மும்பை வீரர் தினேஷ் கார்த்திக்குக்கு எதுவுமே சரியாக அமையவில்லை. முதலில் ரோகித் சர்மா 'ரன் அவுட்டாக' காரணமானார். பின் ஹென்ரிக்ஸ் பந்தை சிக்ஸருக்கு அடிக்க முயன்றார். ஆனால், பந்து மைதானத்தின் மேலே படம் பிடித்துக் கொண்டிருந்த நவீன 'ஸ்பைடர் கமராவில்' பட 'டெட் போலாக' அறிவிக்கப்பட்டது. அடுத்து ஓட்டம் எடுக்க ஓடும் போது நடுவர் ரவி மீது மோதி கீழே விழுந்தார். மீண்டும் இவர் ஓட்டம் எடுக்க ஓடும் போது, இடையில் ஹென்ரிக்ஸ் எதிர்பாராத விதமாக நிற்க, பரிதாபமாக 'ரன் அவுட்டானார்'.

(5)



நதன் மெக்கலம்

# சென்னை வெற்றி



### டோனி கொண்டாட்டம்

இந்த ஆட்டத்தின் வெற்றி எவ்விதத்திலும் பயன் இல்லை என்பதால், சென்னை அணியின் தலைமைப் பொறுப்பை ரெய்னாவிடம் கொடுத்தார் டோனி. இலக்குக் காப்பாளர் பணியை சகாவிடம் கொடுத்து விட்டு, களத்தடுப்பில் துடிப்பாக செயற்பட்டார். அடுத்து பந்து வீச்சும் செய்த டோனி, 2 பந்துப் பரிமாற்றங்களில் வீசி 25 ஓட்டங்களை வாரி வழங்கினார்

சம்பியன்ஸ் லீக் ஆட்டத்தில் ரெய்னா தலைமையில் களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. யார்க்ஷயர் அணி மீண்டும் ஏமாற்றியது.

தென்னாபிரிக்காவில் சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர் நடக்கின்றது. நேற்று முன்தினம் தங்களது கடைசி லீக் ஆட்டத்தில் ஏற்கனவே அரையிறுதி வாய்ப்பை இழந்த சென்னை சுப்பர் கிங்ஸ், யார்க்ஷயர் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணித் தலைவர் ரெய்னா, களத்தடுப்பை தேர்வுசெய்தார்.

யார்க்ஷயர் அணிக்கு லித், காலே இணைந்து சுமாரான தொடக்கம் கொடுத்தனர். முதல் இரண்டு பந்துப் பரிமாற்றங்களில் 2 ஓட்டங்கள் மட்டும் எடுத்த இந்த ஜோடி அடுத்து அதிரடிக்கு மாறியது. அஷ்வின் பந்துப் பரிமாற்றத்தில் இருவரும் மூன்று பவுண்டரிகள் அடித்தனர். பொலஞ்சர், ஹில்பெனாஸ் பந்துகளை சிக்ஸருக்கு அனுப்பினார் காலே. இவர், 23 ஓட்டங்களுடன் திரும்பினார். அதேவேகத்தில் லித்தும் 11 ஓட்டங்களுக்கு நடையை கட்டினார். சிறிது நேரத்தில் ஜோ ரூட்டும் (6) ஆட்டமிழக்க, யார்க்ஷயர் அணி 9.4 ஆவது பந்துப் பரிமாற்றத்தில்தான் 50 ஓட்டங்களை எட்டியது. இதையடுத்து ஓட்ட வேகத்தை அதிகரிக்கும் முயற்சியில் இறங்கிய பேலன்ஸ், ரெய்னா பந்துப் பரிமாற்றத்தில் 2 பவுண்டரிகள் விளாசினார். அடுத்து ரவிந்திர ஜடேஜா பந்துப் பரிமாற்றத்தில் மில்லர், பேலன்ஸ் இருவரும் தலா ஒரு சிக்ஸர் அடித்து அசத்தினார்.

இலக்குக் காப்புப் பணியை ரிதிமன் சகாவிடம் ஒப்படைத்த டோனி பந்து வீசினார். அவர் வீசிய முதல் பந்துப் பரிமாற்றத்தில் பேலன்ஸ் அடுத்தடுத்து சிக்ஸர் அடித்து மிரட்டினார். பொலஞ்சர் வேகத்தில் மில்லர் 28 ஓட்டங்களில் ஆட்டமிழந்த போதும், பேலன்ஸ் அதிரடியை நிறுத்தவில்லை. ஹில்பெனாஸ் பந்துப் பரிமாற்றத்திலும் 2 சிக்ஸர்கள் அடித்த இவர், அரைச்சதம் (58) கடந்து ஆட்டமிழந்தார். ஹாட்சன் (1) ஏமாற்ற, யார்க்ஷயர் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளுக்கு 140 ஓட்டங்கள் எடுத்தது. சென்னை அணி சார்பில் மோர்கல், பொலஞ்சர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

எளிய இலக்கைத் துரத்திய சென்னை சுப்பர் கிங்சிற்கு தொடக்கமே அதிர்ச்சி காத்திருந்தது. டுபிளசி ஒரு ஓட்டம் மட்டும் எடுத்தார். பின், முரளிவிஜய், ரெய்னா ஜோடி நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தது. ஷார்டுலா பந்தில் இரண்டு பவுண்டரிகள் அடித்த முரளிவிஜய் (13) நிலைக்கவில்லை.

அணித் தலைமைப் பொறுப்புடன் விளையாடிய ரெய்னா, பேட்டர்சன் பந்தை சிக்சருக்கு அனுப்பினார். பின் மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர், 31 ஓட்டங்கள் (30 பந்துகள்) எடுத்தார். வேகமாக ஓட்டங்கள் எடுத்த பத்ரிநாத், டால்பி பந்துப் பரிமாற்றத்தில் அடுத்தடுத்து இரு பவுண்டரிகள் அடித்தார். மறுமுனையில் டோனி, ரஷித் மற்றும் ரபிக் பந்துகளை சிக்ஸருக்கு அனுப்பினார். 38 பந்துகளில் 47 ஓட்டங்கள் விளாசிய பத்ரிநாத் 'போல்டானார்'. ஜடேஜா (5) நிலைக்கவில்லை. கடைசி நேரத்தில் அசத்திய டோனி (31) வெற்றியை உறுதி செய்தார். சென்னை அணி 19 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளுக்கு 141 ஓட்டங்கள் எடுத்து சுலப வெற்றி பெற்றது. மோர்கல் (4), சகா (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை பத்ரிநாத் வென்றார். (5)

### அஜந்த மெண்டிஸ் ஆடுவாரா?

இலங்கை அணியின் சுழற் பந்து வீச்சாளர் அஜந்த மென்டிஸின் உடற்தகுதி தொடர்பான சந்தேகம் இன்னமும் நிலவி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

நியூசிலாந்துக்கெதிரான 'ரி-20', ஒரு நாள் சர்வதேசப் போட்டி, டெஸ்ட் போட்டி கொண்ட தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையிலேயே இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை சார்பாக உலக 'ரி-20' தொடரில் பங்குபற்றிய அஜந்த மென்டிஸ், முதலாவது ஆட்டத்திலேயே உலக சாதனை படைத்து 6 இலக்குகளைக் கைப்பற்றிய போதிலும், அந்த ஆட்டத்தில் காயமடைந்திருந்தார். இரண்டாவது ஆட்டத்தில் பங்குபற்றியிருக்காத அவர், அதன் பின்னர் அனைத்து ஆட்டங்களிலும் பங்குபற்றியிருந்தார்.

இந்த நிலையில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க, உலக 'ரி-20' தொடரில் ஏற்பட்ட உபாதையிலிருந்து அஜந்த மென்டிஸ் இன்னமும் குணமடைந்து வருவதாகத் தெரிவித்தார்.

நியூசிலாந்துத் தொடரைப் பொறுத்தவரை அஜந்த மென்டிஸின் உடற்தகுதி மாத்திரமே தற்போதைய நிலையில் சந்தேகமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்னா சம்பியன்



டென்மார்க் பகிரங்க பட்மின்ரன் தொடரில் இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் சம்பியன் பட்டம் வென்றார். டென்மார்க்கில் உள்ள ஓடென்ஸ் நகரில் டென்மார்க் பகிரங்க சூப்பர் தொடர் பிரிமியர் பட்மின்ரன் தொடர் நடந்தது. நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் இந்தியாவின் சாய்னா, ஜேர்மனியின் ஜூலியானா செங்கை எதிர் கொண்டார். முதல் செற்றில் அசத்திய சாய்னா 21-17 என்று கைப்பற்றினார். பின்னர் இரண்டாவது செற்றிலும் அபாரமாக ஆடிய சாய்னா 21-8 என்று வென்றார். இறுதியில், சாய்னா 21-17, 21-8 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, இந்தத் தொடரில் முதன் முறையாக சம்பியன் பட்டம் வென்றார். சமீபத்தில் முடிந்த லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற இவர், நீண்ட ஓய்வுக்கு பின் பங்கேற்ற முதல் தொடரில் பட்டம் வென்று அசத்தினார்.

இது, சாய்னாவின் 11 ஆவது சம்பியன் பட்டம். தவிர இவர், இந்த ஆண்டு வென்ற 4 ஆவது பட்டம்.

இது குறித்து சாய்னா கூறியதாவது: டென்மார்க் பகிரங்க தொடரில் முதன் முறையாக பட்டம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்காக டென்மார்க் மற்றும் இந்திய ரசிகர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற பின், என் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. நீண்ட ஓய்வுக்குப் பின் விளையாடியதால், புத்துணர்ச்சிடன் களமிறங்கினேன். எனது வலது முழங்காலில் லேசான பாதிப்பு இருந்த போதிலும், முழுத்திறமையை வெளிப்படுத்தி சாதிக்க முடிந்தது. இதற்காக கடவுளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார். (5)

# பாகிஸ்தானிடம் பணிந்த சர்வதேச அணி

பாகிஸ்தானில் இடம்பெற்றுவந்த சர்வதேச உலகப் பதினொருவர் அணிக்கும், பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணிக்குமிடையிலான இரண்டாவதும் இறுதியுமான ஆட்டத்திலும் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி வெற்றிபெற்றுள்ளது. இரண்டாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி 6 இலக்குகளால் வெற்றிபெற்றது.

கராச்சி தேசிய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சர்வதேச உலகப் பதினொருவர் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. தொடக்கம்முதலே இலக்குகளை இழந்த அந்த அணியால் எந்தவொரு கட்டத்திலும் ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கவில்லை. ஒரு கட்டத்தில் 15.4 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றிருந்த அந்த அணி இறுதி வீரர் நன்ரி ஹேய்வேர்ட்டின் அதிரடியால் 142 ஓட்டங்களைப் பெற்றது.

143 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி 16.4 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி சார்பாக இம்ரான் நஷீர் 33 பந்துகளில் 53 ஓட்டங்களையும், ஷாஷெய்ப் ஹசன் 19 பந்துகளில் 39 ஓட்டங்களையும், அசத் சபீக் 25 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சர்வதேச உலகப் பதினொருவர் அணி சார்பாக ஸ்டீவன் ரெய்லர் 22 ஓட்டங்களுக்கு 3 இலக்கை கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணியின் இம்ரான் நஷீர் தெரிவானார். (5)


## பதவி வெற்றிடம்

★ கணினியில் தமிழ், ஆங்கிலம் தட்டச்சுத் தெரிந்த, மின்னஞ்சலில் (E.mail) சரளமான அறிவுள்ள பெண் எழுதுவினைஞர் அமைய அடிப்படையில் (Clerk) தேவை.

★ A/L சித்தியுடன் ஓரளவு ஆங்கில அறிவும் முக்கியம்.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர். புதன் கிழமை விடுமுறை வழங்கப்படும். சனி, ஞாயிறு வேலைநாள்களாகும். நியாயமான சம்பளம் வழங்கப்படும். பட்டதாரிகள், உள்ளகப் பட்டதாரி மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார். தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வேண்டாம்.

**நேர்முகத் தேர்வு 25.10.2012 பி.ப 4.30 மணிக்கு பின்வரும் முகவரியில் இடம் பெறும்.**

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016 (26655)(3.6)

## மணல் விற்பனைக்குண்டு

கட்டட வேலைகளுக்கும், பூச்சுவேலைகளுக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

**4 டிரக்டர் - 21,000/=**

தொடர்புகளுக்கு:- ரமேஸ்
072 26 94462
(24199)(2.6)

## சிவப்பு மண் விற்பனைக்கு

அத்திபார உட்புறம் நிரப்புவதற்கு, தாழ்ந்த நிலங்கள் சீர் செய்வதற்கு உகந்த சிவப்பு நிற மண் (ஊத்தை மண்) விற்பனைக்கு உண்டு.

**விற்பனை விலை**

யாழ்.மாவட்டம் எங்கும் (தீவகம் தவிர்ந்த) கியூப்- 3000/= இற்கு உரிய இடத்தில் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
S.N.S.MATERIAL SUPPLIER
SANKATHTHANAI,
CHAVAKACHCHERI.
0776491027, 0779400963
(21573)(15-6)

மாணவர்கள் அனைவரினதும் எதிர்கால கல்வி இலக்கை நோக்கி
விஜயதசமியை முன்னிட்டு விசேட கட்டணச்சலுகைகளுடன் புதிய வகுப்புகள் ஆரம்பமாகவிருக்கின்றன.

## DIP IN ENGLISH

ஆங்கிலத்தில் புலமை எய்துவதற்கான ஆங்கிலத்தின் நான்கு பிரிவுகளும் Reading, Writing, Speaking & Listening திறம்பட கற்பிக்கப்படும்.

Commencement: Oct. 24th
Classes :Weekday/Weekend
Duration : 3 months
Time : Mon, Wed, Fri : 9.00 Am - 11.00 Am
Mon, Wed, Fri : 3.00 Pm - 5.00 Pm
Sat, Sun : 3.00 Pm -5.00 Pm

May apply for a uk city and guild B1 ESOL Dual certification.

## DIP IN BANKING ENGLISH

நீங்கள் வங்கியில் வேலை தேடுபவராயின் அல்லது வேலை செய்பவராயின் உங்களுக்கான ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சி திறம்பட வழங்கப்படும்.

Duration: 4 months

Commencement: **October 24th.**
Classes : Weekday/Weekend
TIME :
Mon, Wed, Fri : 11.00 Am - 1.00 Pm
Tue, Thr : 11.00 Pm - 1.00 Pm
Sat, Sun : 2.00 Pm -5.00 Pm

May apply for a uk city and guild B2 ESOL Dual certification.

## DIP IN SPOKEN ENGLISH

ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் வழங்கப்படும். சகல மட்டத்தவருக்கும் ஏற்றவாறு வகுப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

Duration : 3months

Commencement: **October 24th.**
Classes : Weekday/Weekend
TIME :
Tue,Thr : 9.00 Am - 11.00 Am
Tue,Thr : 3.00 Pm - 5.00 Pm
Sat,Sun: 12.00 Pm -2.00 Pm

May apply for a uk city and guild B1 SESOL Dual certification.

- Modern A/C lecture rooms.
- Audio Visual Equipment.
- Quality Tutorial books.
- Course fee -payable in installment.
- Qualified lecture panel.

Hot line : 0774765990.

## IELTS

Duration : 3months

Strategies and technique are taught to gain a higher score.
British council approved IELTS register center.
British council trained lecture panel.
Commencement: October 10th.
Classes : Weekday/Weekend

Time : Mon,Tue,Wed : 3.00 Pm - 5.00 Pm Sat,Sun: 11.00 Pm -2.00 Pm

LONDON METROPOLITAN COLLEGE
No:197, Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230, 021 753 8395
(அ/4298)

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் கிளைகளைக் கொண்டியங்கும் பிரபல நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உண்டு.

தகுதியானவர்கள் நேரில் சமுகமளிக்கவும்

01. விரிவுரையாளர்கள்
Lecturers (male/female) - English medium
02. அலுவலக சுத்திகரிப்பாளர்/ உதவியாளர்

தொடர்புகளுக்கு:
British College of Higher Studies

No. 15, Sirampiyady Lane,
Off Stanley Road
Jaffna.
021 222 4550,
077 773 0074

No.3,6th Lane,
Vairavar Kovil Veethy,
Vairavapuliyamkulam,
Vavuniya.
024 324 5287,
077 7585 913
(சி/1288)

A/L
G.A.Q } தமிழ்

- முதுகலைமாணி ஆசிரியரால் வலிகாமம் பகுதியில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
- குழுக்களாகவும் தனியாகவும் கற்கலாம்.
- துரித வினாவிடை, மீட்டற் கையேடுகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0774535288
(24866) (15-6)

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஸ்ரீ சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?

எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691

## புலமைக் கல்வி நிறுவனம்

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

காலம்:- இன்று (24.10.2012) புதன்கிழமை

**ஆசிரியர் க.கலாமோகன்**
(B.A., Dip.in Teach)

தரம் 4 (தற்போது தரம்3) பி.ப 4.00 மணி
தரம் 5 (தற்போது தரம் 4) பிரிவு III பி.ப 5.00 மணி

இணுவில் வீதி,
மானிப்பாய்.
(24635) (15-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தமது
உயர்வை
அறியாதவரே
சான்றோர்.
-கார்னலல்-

# புதன் பொய்கை A

உதயன் 24 ஒக்ரோபர் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

■ மணி

# தன்னையே கொல்லும் சினம்



(கடந்தவாரத் தொடர்ச்சி...)

அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச்சொல் எல்லாவற்றையும் உருவாக்குகிற வெளிப்படுத்துகிற சக்திதான் மனித மனத்தின் பலம், ஆணவம், அகங்காரம், மமகாரம், தலைக்கனம், திமிர், செருக்கு, தருக்கு, இறுமாப்பு, கொழுப்பு என்று சொல்லப்படுகிற குணம்.

**ஆணவம் அவதரிக்கிற இடத்தில் அழிவு தொடங்கி விடுகிறது .**

சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையையே மனித மனத்தில் குடிகொண்டிருக்கிற மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை இவற்றைக் களைவதேயாகும்.


இதனைத்தான் சைவசமயத்தில் சிவபெருமானின் திருவிளையாட்டாக சிவன் பிச்சை எடுக்கும் பிச்சாண்டியாக வந்ததாக உருவகித்து உருவாக்கப்பட்டது. மனிதர்கள் தேவையற்றதையும், உபயோகமற்றதையும் பிச்சையிடுவதைப் போல இந்த வேண்டாத குணங்களையும் தூக்கி எறிந்து விட வேண்டும். இதை விட்டுப் பிரிந்து விட வேண்டும்.

வள்ளுவரின் ''வெகுளாமை'' என்ற அதிகாரத்தில் சினத்தின் தன்மைகளைப் பட்டியலிடுகிற பொழுது: எங்கே சினம், செல்லுபடியாகாத இடத்திலே சினத்தைக் காட்டினால் நமக்கு தீமைகள் தான் உருவாகும். செல்லுபடியாகிற இடத்திலும் இதைவிட தீமையானது வேறெதுவும் இல்லை.

எவரிடத்திலும் நாம் சினத்தைக் காட்டக் கூடாது. நம்முடைய நகைச்சுவை உணர் வையும் சந்தோசத்தையும் சினம் கொன்றுவிடும். இதை விட வேறு பகைவர்கள் நமக்குத் தேவையா?

நம்மை நாம் காத்துக் கொள்வதாக இருந்தால் சினத்தை கட்டுப்படுத்திக்கொள்ளத் தெரிய வேண்டும். இல்லையென்றால் சினம் நம்மையே கொன்றுவிடும்.

சினம் நம்மை மட்டுமல்ல நம்மோடு கூட இருப்பவர்களையும் கொல்லும் தன்மை வாய்ந்தது. நாம் இந்த இனத்தை இந்தக் குழுவைச் சார்ந்தவன் என்ற பெருமித உணர்வைக் கூட அழித்துவிடும். இனத்தை விட்டு, குழுவை விட்டு விலக நேரிடும்.



சினத்தைக் கொண்டு இந்த உலகத்தில் எதையும் சாதிக்கமுடியும் என்று அதைக் கருவியாக கொள்ளுதல் என்பது நிலத்தின் மீது கோபம் கொண்டு அதை அறைந்தால் எப்படி அறைந்தவனுக்குத்தான் துன்பம் உண்டாகுமோ அது போல வெகுளி துன்பத்தைத் தரும்.

நெருப்பு எப்படித் தொட்டவுடன் தீக்காயத்தை உண்டாக்குகிறதோ அதுபோல நமக்கு மற்றவர்கள் துன்பத்தைத் தந்தாலும் கூட வெகுளி கொள்ளாமல் இருப்பது நல்லது.

உள்ளத்திலே வெகுளி என்கிற கோபமில்லாமல் இருந்தால் நினைத்த காரியங்கள், நன்மைகள் எல்லாம் உடனே கிடைக்கும்.

சினத்தை அளவுக்கு மீறி கைக்கொண்டால் அவன் இறந்தவனைப் போன்றவன். சினத்தைக் கைக்கொள்ளாது விட்டுவிட்டாலோ அவன் துறவியைப் போன்றவன். சினம் என்பது உள்ளத்தின் உள் புகைவது. அது புடமிடுவதைப் போல வேக்காட்டில் வெந்தழிவது. வெகுளி என்பதோ உணர்வுகளை வெளிக்காட்டி தீச்சொற்களை உக்கிரமாக உண்டாக்குவது .

கோபத்தோடு எழுந்திருப்பவன் நட்டத்தோடு உட்காருவான் என்று ஒரு கருத்து வழக்கத்திலிருப்பதை மறக்காமல் நினைவில் வைத்து வாழ வேண்டும். உள்ளத்தில் உள்ள எதிர்மறை எண்ணங்களே எண்ணிலடங்கா நோய்களுக்கு அடிப்படை.

***தன்னைத்தான் காக்கின் சினம் காக்க;***
***காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்.***

*(குறள்-305)*

இதற்கு முன்னர் எத்தனையோ முறை நான் சினமுற்றிருக்கிறேன். இறந்தா போய்விட்டேன்? இந்தத் திருக்குறள் நம்மைப் பயமுறுத்துவதற்காகவோ உயர்வு நவிர்ச்சியாகவோ உருவாக்கப்பட்டதல்ல.

சினம் என்பது எப்போது தோன்றினாலும், நம் உடலில் ஒருவகையான தூண்டுதல் உண்டாகி, நாளமில்லாச் சுரப்பிகளில் தாக்கமேற்பட்டு, சில இரசாயனங்கள் உருவாகி இரத்தத்தில் கலந்து சில் எதிர்மறை விளைவுகளையும் உருவாக்குகின்றன.

சினம், வெகுளி, கோபம் உருவாகிற பொழுது அட்ரினல் சுரப்பிகள் அட்ரினலின் என்கிற ஹார்மோனைச் சுரக்கிறது. அது இரத்தத்தில் கலந்தவுடன் இரத்த நாளங்களின் விட்டத்தைக் குறைத்து சுருங்குவதால் இரத்த அழுத்தம் அதிகரிக்கிறது.

இந்தக் குழாய்கள் சுருங்குவதால் மூளைக்கும் ஏனைய உறுப்புகளுக்கும் இரத்தம் குறைவாக பாய்கிறது. குளுக்கோஸ் என்கிற சர்க்கரைச் சத்தும் ஒட்சிசன் என்கிற பிராணவாயும் குறைவாக செல்களுக்கு, திசுக்களுக்கு கிடைப்பதால் இதயம் வேகமாகத் துடிக்க வேண்டும், செயல்பட வேண்டுமென்ற கட்டளைகளை மூளை பிறப்பிக்கின்றது.

ஒரு நிமிடத்துக்கு 72 முறை துடிக்கிற இதயம் இப்பொழுது 80,90,100,120 என்று அதிகமாகத் துடிக்கத் தொடங்குகிறது. இது இதயப்படபடப்பு நாடித்துடிப்பையும் அதிகரிக்கிறது.

இதயம் ஒரு நிமிடத்தில் 120, 140 முறை துடித்து அதிக இரத்தத்தை, சுருங்கியிருக்கிற இரத்த நாளங்களில் செலுத்துவதால் இரத்த அழுத்தம் அதிகமாகி, இரத்தக் குழாய்கள் வெடித்துவிடுகிற நிலை உருவாகிறது.

இதயமும் இதயத்தசைகளான ஓர் உறுப்பு, சில நிமிடங்களில் கோபம்கொண்ட அந்தக் காலங்களில் களைப்புற்று அயர்ச்சி ஆகி வேலையை நிறுத்தத் தொடங்கிற போதுதான் மாரடைப்பு உண்டாகிறது. மரணமும் ஏற்படுகிறது.

ஒரு வேளை இதயத் தசைகள் வலிமையாயிருந்து. இதயம் பாதிக்கப்படாமல் மாரடைப்பு உண்டாக்கவில்லையென்றாலும் இரத்த அழுத்தம் அதிகரிப்பதால் இரத்தக் குழாய்களின் முனையிலுள்ள தந்துகள் உடைந்து இரத்தக் கசிவு ஏற்படலாம். இந்த இரத்தக் குழாய் உடைப்புகள் பெரும்பாலும் மூளையினுள் நிகழ்கிறது.

இரத்தக் குழாய்கள் வெடிக்கிற பொழுது குறிப்பாக மூளையினுள் CEREBRLE HEAMARAGE என்கிற INTRACRANEAL BLEEDING என்ற இரத்தக் கசிவு ஏற்பட்டு பக்கவாதம் உண்டாகிறது.

மூளையின் இடவலப்பக்கத்தில் இரத்தக் கசிவும் அதனால் ஏற்படுகிற இரத்த உறைவையும் பொறுத்து, உடலின் வலப்பக்கமோ அல்லது இடப்பக்கமோ பக்கவாதம் நிகழ்கிறது. பலகாலம் படுக்கையில் நோயுற்று அவர் மட்டுமல்ல மற்றவர்களுக்கும் துன்பத்தைத் தந்து மரித்துப் போகிற அவலம் சினத்தாலும் மன இறுக்கத்தாலும் உண்டாகிறது.

''தன்னையே கொல்லும் சினம்'' இப்போது புரிகிறதா?

***''சினமென்னும் பாம்பிறந்தால் தாண்டவக் கோனே-யாவும்***
***சித்தியென்றே நினையேடா தாண்டவக் கோனே''***

***''சினமிறக்க கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்***
***மனமிறக்க கல்லார்க்கு வாயேன் பராபரமே''***

ஆம்! சினம் அழித்தால் சித்தி பெறலாம். சித்தி என்பது நினைத்ததை அடையும் வல்லமை

நினைத்ததை அடையும் வல்லமை பெற ''அன்பு'' ஒன்றே அகத்தில் இருக்க வேண்டும். அனைவரையும் நேசிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக உயர்ந்த ரென்னிஸ் மைதானம்






உலகிலேயே பெரிய 7 நட்சத்திர ஹோட்டல்களில் ஒன்றான 4 ஆவது பெரிய ஹோட்டல் டுபாயில் அமைந்துள்ளது.
இந்த நட்சத்திர ஹோட்டலில் 1000 அடி உயரம், 415 சதுர மீற்றர் கொண்ட ரென்னிஸ் மைதானம் காணப் படுகிறது. இந்த மைதானமே உலகின் மிக உயரமான ரென்னிஸ் மைதானமாகும்.

# புதிய சக்கர நாற்காலி

படிக்கட்டுகளில் ஏறக்கூடிய ரோபோ சக்கர நாற்காலியை ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். ஜப்பானின் சிபா தொழில்நுட்ப மைய பொறியியலாளர்கள் மாற்றுத்திறனாளிகள்,முதியவர்கள், நோயாளிகள் ஆகியோர் பயன்படுத்தும் விதத்தில் ரோபோ சக்கர நாற்காலியை வடிவமைத்துள்ளனர்.
இந்த சக்கர நாற்காலி சாதாரண சக்கர நாற்காலியைப் போன்று நான்கு சக்கரங்களைக் கொண்டதுதான் என்றாலும், வழியில் படியோ அல்லது பள்ளமோ காணப்பட்டால் இந்த நாற்காலியின் சக்கரங்கள் கால்கள் போல் வடிவம் மாறி படி ஏறி விடும், வழியில் உள்ள தடைகளையும் தாண்டி விடும்.




இந்த சக்கர நாற்காலியைப் பயன்படுத்துபவர்கள் 'ஜோய் ஸ்ரிக்' மூலம் இதை இயக்கலாம்.
சக்கர நாற்காலியின் பாதம் வைக்கும் பகுதியில் இருக்கும் 'சென்சர்' கருவி அருகில் தடை ஏதும் இருந்தால் அதை உணர்ந்து அதற்கேற்றாற்போல் நாற்காலியை நகர்த்தும். சென்சர் கருவி தடையை உணராமல் சக்கரங்கள் எதன் மீதாவது இடித்துவிட்டால், நாற்காலியில் இணைக்கப்பட்டுள்ள சங்கிலி இழுக்கப்பட்டுத் தானாக நின்றுவிடும்.
இதன் சக்கரங்கள் பக்கவாட்டிலும் சுழலும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதால் மேடு, பள்ளமான பகுதிகளிலும் இந்த நாற்காலியில் சுலபமாகச் செல்லலாம். இதனால் பக்கவாட்டிலும் இந்த நாற்காலியை நகர்த்தலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதல் மனிதன் அணில்;
## சொல்கிறது புதிய ஆய்வு



நமது மூதாதையர்கள் அதாவது முதல் மனிதன் குரங்கு போல இல்லாமல், அணில் போன்று இருந்ததாக புதிய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.
புதிதாகக் கண்டுபிடிக் கப்பட்டுள்ள புர்கடோரி யஸ் என்ற பாசில் மூலம் இது தெரியவந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித் துள்ளனர். இந்த பாசிலில் உள்ள உருவம் தான் உலகின் மிகப் பழமை யான, மிகவும் ஆரம்ப கால மனித உயிரின் முதல் படி என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.
இந்த உருவம் அணிலைப் போல இருப்பதாகவும், இதுதான் மனிதனின் ஆரம்ப கால உருவமாக இருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.
இந்த ஆரம்ப கால மனித உருவமானது பெரும்பாலும் மரங்களிலேயே வசித்து வந்துள்ளது. பழங்களைச் சாப்பிட்டு உயிர் வாழ்ந்துள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்கு முன்பு புர்கடோரியஸின் பல் மட்டுமே சிக்கியிருந்தது. தற்போதுதான் அதன் எலும்பு சிக்கியுள்ளது. இந்த அணில் வகை உயிரினமானது தனது கால்களை எல்லாப் பக்கமும் திருப்பும் வகையில் இருந்துள்ளது. அதன் கால் எலும்பு மூட்டுகளும் மனிதர்களுக்கு இருப்பதை போலவே இருந்துள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர். இந்த அணில் போன்ற உயிரினம் தான் பின்னர் மனித உருவமாக மாறியிருக்கலாம் என்று இந்த ஆய்வு குறிப்பிட்டுள்ளது.

# ஆடம்பரமான விமானம்



புரூணை நாட்டு மன்னருக்குச் சொந்தமான விமானமான போயிங் ரக விமானம் உலகின் அதிநவீன சொகுசு விமானமாகும். நூறு மில்லியன் டொலர் செலவில் வாங்கப்பட்ட இந்த விமானத்தில் மலசலகூடம் முதல்கொண்டு அனைத்தும் தங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடுகல்

வெட்சி கரந்தைப் போர்களில் ஈடுபட்ட வீரர்கள் வெற்றியோடு மீண்டு வந்தால் ஊரவர் கொண்டாடிப் போற்றினர். மாண்டால் நடுகல் நட்டு வணங்கி வழிபட்டனர். சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள நடுகல் பற்றிய செய்திகள் அனைத்தும் வெட்சி கரந்தைப் போர்களில் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவைப் போற்றி வணங்குவதற்காக நடப்பட்ட கற்களைப் பற்றிய தாகவே உள்ளன.

பெண்களுக்கு நடுகல் நடப்பட்ட செய்தி சங்க இலக்கியங்களில் காணப்படாமை நோக்கத்தக்கது. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு நடுகல் நட்டுக்கோயில் அமைத்து வழிபாடு நிகழ்த்த ஏற்பாடு செய்ததனைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. கண்ணகி தவிர்ந்த பிற பெண்களுக்கு நடுகல் நடப்பட்டதா என்பது தெரியவில்லை.

வெட்சிகரந்தைப் போர்களில் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக நடப்பட்ட நடு கற்களைத் தெய்வமாகக் கருதி வணங்கி வழிபட்ட நிலை தமிழகத்தில் ஏற்பட்டது. நடுகல் தெய்வமாக வணங்கப்பட்டதற்குப் புலவர் மாங்குடி கிழார் சான்றளிக்கிறார். "கல்லே பரவினல்லது நெல்லுகுத்தப் பரவும் கடவுளும் இலவே" என்பது அவரது கூற்று. நடுகற்களுக்கு நாள் தோறும் தீபதூபம் காட்டிப் பூசை செய்யும் வழக்கமும் ஏற்பட்டது.

***"இல்லடுகள்ளின் சில்குடிச் சீறூர்ப்***
***புடைநடு கல்லின் நாட்பலியூட்டி***
***நன்னீராட்டி நெய்நறை கொளீஇய***
***மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்"***

சிற்றூரின் பக்கத்தே நடப்பட்ட நடுகல்லுக்கு விடியற்காலையில் நன்னீராட்டி நெய்விளக் கேற்றிப் படையலைப் படைத்தனர். நெய் விளக்கு ஏற்றியதால் உண்டாணபுகை மேகம் போல் எழுந்து தெருவில் மணக்கும் என்று, நடுகல் வணங்கப் பட்ட செய்தியைப் புறநானூறு (306) கூறுகிறது.

"நடுகல்லுக்குப் பீலி சூட்டி வணங்கும் போது கள்ளும் படைத்து வணங்கினர் என்று புறநானூறு கூறுகிறது." நடுகற் பீலி சூட்டி நாரரி சிறுகலத்து குப்பவும் என்று அதியமான் நெடுமானஞ்சியின் நடுகல்லுக்குக் கள்ளும் படைக்கப்பட்டது குறித்து ஔவையார் கூறுகிறார். ஆநிரைகளடியுடைய கோவலர் உயர்ந்த வேங்கை மரத்தின் நல்ல பூங்கொத்துக்களைப் பனையோலையில் தொடுத்து அலங்கரித்து இலைமாலை சூட்டி நடுகல்லை வணங்கினர் என்று புறநானூறு கூறுகிறது.

***"ஊர் நனியிகந்த பார் முதிர் பிறந்தலை.***
***ஓங்குநிலை வேங்கை யொள்ளிணர் நறுவீப்***
***போங்தையந் தோட்டிற் புனைந்தனர் தொடுத்துப்***
***பல்லான் கோவலர் படலை சூட்டக்***
***கல்லாயினை."***

என்பது அது குறித்த பாடற் பகுதியாகும்.

வெட்சியார் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்பதற்காக நடைபெற்ற கரந்தைப் போரில் உயிர்நீத்த வீரனுக்கு ஊரவர் கல்நட்டனர். மரல் நாரில் தொடுக்கப்பட்ட சிவந்த பூவையுடைய கண்ணியையும் அழகிய மயிலினது பீலியையும் சூட்டிப் பெயரும் பீடும் எழுதிப் பெருமை செய்து வழிபட்டனர் என்று புற நானூறு ( 264 ) கூறுகிறது.

***"பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி***
***மரல் வகுந்து தொடுத்த செம் பூங் கண்ணியொடு***
***அணி மயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்து***
***இனி நட்டனரே கல்லும்"*** என்பது அப்பாடல் பகுதி.

நடுகல்களுக்கு நாள்தோறும் தீபதூபம் காட்டிப் பூசை செய்து வழிபடும் காரியங்களைப் பெண்கள் செய்தனர் என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. கண்ணகிக்கு செங்குட்டுவன் அமைத்த நடுகல்லுக்குப் பூசை செய்யும் கைங்கரியத்துக்கு அவள் தோழியான தேவந்தியென்பாளை அம் மன்னன் நியமித்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

***"ஒலிமென் கூந்தலொண்ணு தலரிவை***
***நடுகல் கைதொழுது பரவு மொடியாது***
***விருந்தெதிர் பெறுகதில்யானே***
***யென்னையும்***
***..........................................***
***வேந்தனொடும்***
***நாடுதருவிழுப்கை எய்துக எனவே"*** -

புறநானூறு : 306


(தழைத்த மெல்லிய கூந்தலையும் ஒள்ளிய நெற்றியையும் உடைய அரிவையானவள் யான் விருந்தினர் எதிர் வரப் பெறுவேனாக என்றும் கணவனும் வேந்தனும் மண்ணாசையால் நாடுகளைக் கைப்பற்றும் போரில் வெற்றி பெறுக என்றும் நாளும் தவிராமல் நடுகல்லைக் கைகூப்பித் தொழுதாள். பெண்கள் ஆடவருக்கு நடப்பட்ட கல்லை வணங்கினர் என்னும் இந்தச்செய்தியானது, பெண் சமூகத்தின் தலைமையிடத்தில் இருந்து தூக்கியெறியப்பட்டு அடிமைப்படு குழியில் ஆழ்த்தப்பட்டதையும் ஆணாதிக்கம் மேலோங்கிவிட்ட நிலையையும் தெளிவாக உணர்த்துகிறது.

# எம்.பியின் கைவரிசை

அரச தரப்பு எம்.பிகள், அமைச்சர்களது அடாவடித்தனங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. பட்டதாரிகள் நியமனத்தில் அரசியல் தலையீடுகள் காரணமாக, படித்துப் பட்டம் பெற்றவர்கள் வெளியில் நிற்க அமைச்சர்களினதும், எம்.பிகளினதும் அடிவருடிகள் நியமனம் பெற்றுச் செல்கின்றனர்.

அண்மையில் கலைப் பட்டதாரிகளுக்கு, "இனிவருங் காலங்களில் ஆசிரிய நியமனங்கள் கிடைக்காது என்று" திருவாய் மலர்ந்தருளிய அரச தரப்பு எம்.பி தற்போது கிளிநொச்சியில் தனது காட்டாட்சியை நடத்தி வருகின்றார். இங்குள்ள அரச அலுவலகங்களில் அவரின் அனுமதியின்றி அணுவும் அசையாதாம்.

தற்போது நாடளாவிய ரீதியில் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் நியமனங்களின் போது கிளிநொச்சி மாவட்டங்களிலும் நியமனம் வழங்கப்பட்டது. இருந்தும் 2010, 2011 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு காலதாமதமாகவே நியமனம் வழங்கப்பட்டது.




இந்த நியமனங்களின் போது மேற்குறித்த எம்.பி தனது கைவரிசையைக் காட்டியுள்ளார். அவரது செல்வாக்குடன், சிபார்சுடன் வருபவர்களுக்கு மாத்திரமே நியமனம் வழங்க வேண்டும் என்று மாவட்ட செயலகத்துக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

2011 ஆம் ஆண்டு பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மாணவர்கள் சிலர், மாவட்டச் செயலகத்துக்கு நேரடியாகச் சென்று தமது நியமனம் தொடர்பில் கேட்ட போது ஸ்தாபனக் கிளையில் பொறுப்பாகவிருந்த அம்மணி! அவர்களுக்கு அருமையான அறிவுரையைக் கூறியிருக்கிறார்.

" உங்களுக்கு எம்.பி ரெக்கமன் பண்ணினாதான் நியமனம் கிடைக்கும். நீங்கள் அவரோட ஒருக்கா போய் கதையுங்கோ " என்று சொல்லியனுப்பியுள்ளார்.

தியேட்டரில இருக்கிற எல்லோருமே ஒரே மாதிரித்தான் [illegible] இந்த எம்.பியின்ர ரெக்கமன் கேட்பதிலிருந்தே தெரியுது.

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக செய்திகளையும், கட்டுரைகளையும் உதயன் வெளியிட வேண்டும். டெங்கு நோய் தொடர்பான முழுஷமயான விளக்கம் மக்களுக்கு இன்றும் தெரியாமல் இருப்பது வேதனை தரும் விடயமாகும். இதனால் தான் யாழ்ப்பாணத்தில் தற்சமயம் டெங்கு நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக சுகாதாரப் பிரிவினர் பல முயற்சிகளை எடுத்து வருகின்ற போதும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனை முழுமையாக கட்டுப்படுத்த முடியாவிட்டாலும் பெரிய அளவில் பரவ விடாமல் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு அனைவரிடமும் உண்டு.

எனவே டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வை உதயன் ஊடாக மேற்கொள்ள வேண்டும். மழை காலம் ஆகையால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படும். இதனால் டெங்கு நோய் இலகுவாகப் பரவுகிறது.

உதயன் ஊடாக டெங்கு நோயைத் தடுப்பதற்கான அறிவுரைகளை மக்களுக்கு வழங்க வேண்டும். அப்பொழுது தான் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியும். இதனை உதயன் செய்வான் என்று நம்புகிறேன்.

கதிரவேலு ,கரவெட்டி

★ ★ ★

போக்குவரத்து விழிப்புணர்வு தொடர்பாக "இன்று ஒரு தகவல்" அல்லது "வாரம் ஒரு தகவல்" என்ற தலைப்பில் தகவலை வழங்கி வாசகர்களிடம் தாங்கள் சந்தித்த விபத்துக்கள் தொடர்பான செய்தி களை உதயன் வெளியிட வேண்டும்.

உதயனில் ஒரு இடத்தினை ஒதுக்கி பொருத்தமான தலைப்பை கொடுத்து நாட்டின் பல பாகங்களிலுமுள்ள விபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வு நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இதன் மூலம் (வீதி அபிவிருத்தி வேலைகள் நிறைவு பெறாத நிலையில், உரிய எச்சரிக்கை பலகைகள் நடப்படாமல் இருப்பதுடன், பருவ மழையும் ஆரம்பித்திருப்பதனால்) விபத்துக்களையும் இழப்புக்களையும் குறைத்துக் கொள்ள முடியும் என நம்புகிறேன்.


வீதி விபத்துக்கள் தொடர்பாக முன்னரே அறிந்து கொள்ளக் கூடியதான ஒரு வாய்ப்பினை இது ஏற்படுத்தி விடும். எனவே விபத்துக்களை எதிர்கொண்டவர்களின் அனுபவங்களை இதன் ஊடாக வெளிப்படுத்தும் போது ஒரு விழிப்புணர்வை மக்கள் எதிர்கொள்வர்.

எனது ஆசை உதயன் மூலம் நிறைவேறுமா?

க.பிரவின்ராஜ்,
நீர்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனது வைத்தால் மலையை நகர்த்தலாம்



முத்தையா

கடைகளிலோ வீடுகளிலோ இருக்கும் கண்ணாடியில் தன் விம்பம் கண்டால், அலகு கொண்டு குத்துகிறது அழகுக் குருவி. கண்ணாடியை பிளப்பது அதனால் முடியாத காரியம் என்று அதற்கு எவரும் சொல்லாததால் உற்சாகமாய் முயல்கிறது. நாம் பார்த்தது கண்ணாடி கொத்துவதை மட்டும்தான். ஆனால், அலகைத் திறந்தபடி அது ஆகாயம் கொத்தியதே என்கிறார் கவிப்பேரரசு வைரமுத்து.

காரியம் நடத்த வீரியம் போதும். தகுதி, பலம், வல்லமை எல்லாம் தாமாகத் தேடிவரும். ஒன்றைச் செய்யத் தொடங்கும் முன்னால் தங்கள் பல வீனங்களையே பட்டியல் போடு வார்கள். ரயிலில் மேல் அடுக்கு படுக்கை கிடைத்தால், பயணச்சீட்டு எடுத்த நாளிலிருந்து, தங்களால் என்னென்ன காரணங்களால் மேலே ஏறமுடியாது என்ற பட்டியலைத்தான் வரிசைக் கிரமமாகத் தயார் செய்வார்கள்.

பல சாதனையாளர்கள், பிறந்து வளர்ந்த சூழல் - செல்வம் - கல்வி - உறவினர் உதவி போன்றஎந்தப் பின்புலங்களுமே இல்லாமல் சாதித்தார்கள். எப்படித் தெரியுமா? இந்தப் பின்புலங்கள் இல்லாமல் சாதிக்கமுடியாது என்பதே அவர்களுக்குத் தெரியாது. அதனால் சாதித்தார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக, ஜப்பானைச் சேர்ந்த ஜெஃப் வாக்ரஸோ என்பவர், குடும்பத்துடன் விடுமுறைக்காக கொரியாவுக்கு சென்றிருந்தார். தங்கியிருந்த ஹோட்டலில், அவருடைய ஒன்றரை வயது மகன் கைப், தொலைக் காட்சிக்கான ரிமோட்டை அழுத்தி விளையாடிக் கொண்டிருந்தான். தொலைக்காட்சியில் ஒவ்வொரு சனலையும் மாற்றிக் கொண்டிருந்தான்.

குறிப்பிட்ட சனலில் கோல்ஃப் விளையாடிக் கொண்டிருந்தார்கள். உடனே கைப் ஆர்வமாகப் பார்க்கத் தொடங்கினான். தன் கையிலிருந்த ரிமோட்டையே கோல்ஃப் ஸ்ரிக்காகப் பாவித்து, திரையில் தோன்றிய வீரர்களைப் போல் விளையாட முயற்சி செய்து கொண்டிருந்தான்.

ஜப்பான் திரும்பிய பிறகும், வீட்டிலிருந்த ரிமோட் கைலுக்கு கோல்ஃப் ஸ்ரிக்காகவே பயன்பட்டது. பெற்றோர்கள் பிளாஸ்டிக்கில் கோல்ஃப் ஸ்ரிக் ஒன்றைவாங்கிப் பரிசளித்தார்கள்.

ஜெஃப் வாக்ரஸோவுக்கு கோல்ஃப் விளையாடத் தெரியாது. ஆனால் அவருடைய நண்பருக்குத் தெரியும். பிளாஸ்ரிக் ஸ்ரிக் வைத்துக் கொண்டு கைல் கோல்ஃப் விளையாடுவதைப் பார்த்து அவருக்கு வியப்பு ஏற்பட்டது. தேர்ந்த விளையாட்டு நிபுணரைப் போல கைல் ஸ்ரிக்கை இயக்குவதாகப் பாராட்டினார். இரண்டு வயது கூட ஆகாத குழந்தை டி.வி பார்த்து என்னவெல்லாம் பழகுகிறது என்று பேசி விட்டு பெற்றவர்களும் மற்றவர்களும் அதை மறந்துவிட்டார்கள்.

சில நாள்களிலேயே கைலின் அன்னை ரெஜினா, கைல் கண்களில் வெண்ணிறப்புள்ளி இருப்பதைக் கண்டு பிடித்தார். மருத்துவரிடம் காட்டிய போது கண்ணில் கட்ராக்ட் இருப்பதாகச் சொன்னவர் எதற்கும் ஒரு நிபுணரிடம் காட்டுங்கள் என்றார்.

நிபுணர் தந்த தகவல் அதிர்ச்சியானது. ரெஜினா! இது வெறும் கட்ராக்ட் இல்லை. கண்களில் வரக்கூடிய புற்று நோய் இது. கீமோதெரபி மூலம் வலது கண்ணைக் காப்பாற்றிவிடலாம். ஆனால் இடது கண்ணை உடனே எடுத்துவிட வேண்டும்!

என்ன நடக்கிறதென்று தெரியும் முன்னரே இடது கண் அகற்றப்பட்டது. வலது கண்ணுக்கு கீமோதெரபி சிகிச்சை செய்யப்பட்டது. செயற்கைக்கண் இடது பக்கம் பொருத்தப்பட்டது. மெல்ல மெல்ல நிதானத்துக்கு வரும்போது ஒரு நாள் கைல் மூச்சுக்கு அலை பாய்ந்தான். மருத்துவமனைக்கு கொண்டு போனால், அறுவை சிகிச்சையின் போது இரத்தத்தில் ஏற்பட்ட கிருமித்தொற்று கண்டறியப்பட்டது. மீண்டும் நடந்த உயிர்ப் போராட்டத்திலிருந்து மீண்டான் கைல்.

எது கிடைத்தாலும் கோல்ஃப் விளையாடுவது போல் சுழற்றிய கைல், உள்ளபடியே கோல்ஃப் பயில வேண்டும் என்று ஜெஃப் விரும்பினார். கோல்ஃப் நிபுணர்கள் பலரையும் தொடர்புகொண்டு கேட்டார். மூன்று வயதுக்கு உட்பட்ட சிறுவனுக்கு எப்படி கோல்ஃப் சொல்லித் தருவது? பலரும் யோசித்துவிட்டு மறுப்புக் கூறினர்.

ஒரே ஒருவர், புகழ்பெற்ற கோல்ஃப் விளையாட்டு வீரர் டைகர் வுட்டின் விளையாட்டுப்பாணி கைல் நிகழ்த்தும் அசைவுகளில் இருப்பதை உணர்ந்தார். அவர் கைலுக்கு பயிற்சி கொடுக்கத் தொடங்கினார். அபாரமான திறமை அந்த சிறுவனிடம் இருப்பதை கோல்ஃப் உலகம் கண்டுணரத் தொடங்கியது.

(தொடரும்)

# இருட்டில் பார்க்கும் அதிசய கண்கள்

இணையவன்

எந்தவொரு செயலையும் ஆச்சரியத்தோடும் அதிசயத்தோடும் பார்ப்பதோடு மட்டும் நிறுத்திவிட்டால் அறிவு வளர்ச்சி என்பது முழுமை பெறாது. நிறைவும் அடையாது. எதைக் கண்டாலும் அதிசயிப்பவன் அந்த அதிசயத்தைப் பற்றி நாள் முழுக்க பேசிக் கொண்டிருப்பானே ஒழிய அது ஏன் நிகழ்ந்தது? எப்படி நிகழ்ந்தது? எதற்காக நிகழ்ந்தது? என ஆராய முற்படமாட்டான்,

பைபிளில் பிரசங்கி என்ற அதிகாரத்தில் ஒரு வசனம் வரும். சூரியனுக்கு கீழும், பூமிக்கு மேலேயும் நடப்பதில் எதுவும் விந்தையில்லை என்று அப்போஸ்தலர் ஒருவர் கூறுகிறார், அதாவது பூமியில் நிகழ்வது எல்லாமே இறைவனால் நிர்மாணிக்கப்பட்ட விஷயங்களே, நிகழ்வுகளின் உட்பொருளை பார்க்க வேண்டுமே தவிர நமது பார்வையை நிகழ்வோடு நிறுத்திக் கொள்ளக் கூடாது,

எமது ஊரில் இருந்த பெரியவர் ஒருவர் வைக்கோல்போரில் வெற்றிலையைத் துப்பியவுடன் வைக்கோல் திகுதிகு என பற்றி எரிந்தது, அந்தக் காட்சி அந்த வயதில் எனக்கு ஆச்சரியத்தையும். அதிசயத்தையும் தந்தது. என்றாலும் பின் நாள்களில் அது எப்படி சாத்தியமாயிற்று என ஆராயத் தூண்டியது.

அந்த ஆராய்ச்சிக்காக கண்கட்டு வித்தை, குறளி வித்தை, இந்திர ஜாலம் போன்றவற்றில் பல நூல்களையும் பல பெரியவர்களையும் அணுகி பல விஷயங்களை அறிந்து கொள்ளவும் அனுபவப்படுத்திக் கொள்ளவும் ஏதுவாக இருந்தது.

இயற்கையின் துணை கொண்டு இயற்கையின் செயலையே சற்று மாறுபடுத்திக் காட்டலாம் என்ற உண்மை புரிய ஆரம்பித்தது. உதாரணமாக வெள்ளை வெளெரென்று இருக்கும்

சில கண்கட்டு வித்தைக்காரர்கள் மூன்றேமுக்கால் நாழிகையில் மாஞ்செடி முளைத்து கனி கொடுக்கும் செயலைச் செய்தார்கள். இதை பலர் பார்த்திருக்கலாம். அது மெஸ்மரிசத்தினால் நமக்கு அப்படி தெரிகிறது என்று கருதுவோரும் உண்டு. ஆனால். இது மெஸ்மரிசம் அல்ல.

ஏரழிஞ்சல் என்கிற மரம் மற்ற மரங்களைப் போல் இல்லாமல் சில விசித்திரத் தன்மை கொண்டது. இந்த மரத்தில் காய்க்கும் கனிகள் கனிந்து பூமியில் உதிர்ந்தவுடன் மீண்டும் மரத்திலேயே ஒட்டிக்கொள்ளும்.

இத்தகைய அந்த மரத்தின் விதைகளை எடுத்து வந்து அதை பூந்தைலமாக்கி சிறிது மாம்பழச் சாறும், பல மாந்திரிக வேலைகளுக்கு பயன்படும் ஜங்கோலத் தைலத்தையும் மேற்கண்ட பூந்தைலத்துடன் கலக்கி கலவையில் சில நாள்கள் ஊறவைத்து பின்னர் அந்த மாங்கொட்டையை மண்ணில் புதைத்து தண்ணீர் தெளித்து அந்த இடத்தைக் கூடையால் மூடிவிட வேண்டும்.

20 நிமிட இடைவெளிவிட்டு மீண்டும் தண்ணீர் தெளித்து மூடிவிட வேண்டும். இப்படி நான்குமுறை கூடையை மூடி திறக்கும்போது மாஞ்செடி முளைத்து பழம் பழுத்து நிற்கும்.

இதைப்போன்று ஒன்றரை மணி நேரத்தில் கம்பஞ்செடியும். கதிரும் வரவைக்கலாம். கோழி முட்டையில் இருக்கும் வெண்கரு என்ற அம்புலியை வெளியே எடுத்து விட்டு அதனுள் கம்பில் புல் கொஞ்சம் போட்டு மெழுகால் மூடிவிட வேண்டும், பின்னர் நான்கு முறை கோழியிடம் அடைகாக்க வைத்துவிட வேண்டும். இப்படி செய்து இந்தக் கம்பம் விதைகளை எடுத்து மண்ணில் விதைத்தால் ஒன்றரை மணி நேரத்திலேயே செடி வளர்ந்து கதிர் தள்ளி விடும்,

இப்படி எத்தனையோ விஷ



அழகிய மல்லிகை பூக்களை, பொன்னிறத்தில் ஜொலிக்க வைக்க வேண்டுமென்றால், குங்குமப் பூவை தண்ணீர் விட்டு அரைத்து மல்லிகைப் பூவில் தெளித்து விட்டால் பூக்கள் தங்க நிறத்தில் ஜொலிக்கும் என்ற உண்மைகள் தெரிய ஆரம்பித்தன,

நீர் மேல் நெருப்பு என்று அழைக்கப்படும் ஆகாயத் தாமரையை பறித்து நிழலில் உலர்த்தி பொடி செய்து, வாயில்மென்று காற்றுவாக்கில் வைக்கோல் போரில் துப்பினால், அது தானாக பற்றி எரியும். இதைத்தான் அந்தப் பெரியவர் அன்று செய்தார்.

யங்கள் சிறிதும் பெரிதுமாக மறைந்து கிடக்கிறது. இவைகளைக் கண்டறிந்து தவறான வழியில் பயன்படுத்துவோர் பலர் இருக்கிறார்கள். ஆனால், இதை ஒரு அரிதான கலை என்கிற நோக்கோடு அணுகுவோரும் சிறிது காலத்திலேயே சுயநலத்தோடு பயன்படுத்த ஆரம்பித்து விடுகிறார்கள். எனவே இத்தகைய கண்கட்டு வித்தையில் தீமைக்கு பயன்படக் கூடிய பலவற்றைத் தவிர்த்து, நன்மை தரும் பல விஷயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயாளிகள் கடைபிடிக்க வேண்டியவைகள்

★ மூச்சு இரைக்க நடக்கக்கூடாது.

★ காலை, மாலை நடந்தால் மிகவும் நல்லது.

★ நடக்கும்போது நடையில் மட்டும்தான் கவனம் இருக்க வேண்டும். மனம் அமைதியோடு இருக்க வேண்டும்.

★ நடக்கும் பொழுது பாதம் முழுக்க ஒரே சீராக அழுத்தம் கொடுத்து நடக்க வேண்டும். நிதானமாக நடக்க வேண்டும்.

★ தினசரி நடப்பது அவசியம்.

★ நடக்கும்போது நடையைத் தடுக்காதவாறு தொளதொளப்பான ஆடைகளை அணிய வேண்டும்.

★ கால்களில் மென்மையான அதிக இறுக்கம் இல்லாத காலணியை அணிய வேண்டும்.

உடற்பயிற்சி : நடைப்பயிற்சி செய்ய இயலாதவர்கள் அதாவது உடல் பருமன், மூட்டுகளில் வலி உள்ளவர்கள் உடற்பயிற்சி செய்து நீரிழிவு நோயின் கடும் தாக்குதலில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உடற்பயிற்சி மேற்கொள்வதற்கு முன்பு மருத்துவரை கலந்து ஆலோசித்து என்ன மாதிரியான உடற்பயிற்சி எவ்வளவு நேரம் செய்யலாம் என்பதை தீர்மானிக்க வேண்டும்.

உடற்பயிற்சி, நடைப்பயிற்சி மற்றும் உணவுக் கட்டுப்பாடு போன்ற எல்லாவற்றையும் நீரிழிவு நோய் உள்ளவர்கள் கடைப் பிடித்து இரத்தத்தில் சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைக்க முயற்சிக்க வேண்டும். இந்த கட்டுப்பாடுகளுடன் இருந்தால் நீரிழிவு நோய் இருந்தாலும் வெகு நாள்கள் எந்த பாதிப்பும் இல்லாமல் சுகமாக வாழலாம். நிதானமான நடை உடல் நலத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும்.

நீரிழிவு நோய் என்பது முன்னர் வயோதிபர்களுக்கான சல வருத்தம் என்று வரையறை செய்யப்பட்டிருந்தது. இப்போது டென்மார்க்கில் வயது குறைந்த இளையோருக்கும் நீரிழிவு நோய் வருவதாக புதிய மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு பத்தாண்டு காலத்திலும் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வானது ஆச்சரியப் படத்தக்க வகையில் உயர்வு கண்டிருப்பதாகவும் அந்தப்புள்ளி விவரம் தெரிவிக்கின்றது. பத்தாண்டுகளுக்கு முன்னையோர் 40 வயதுடையோரில் வருடாந்தம் 1713 பேர் சலரோகத்தால் பாதிக்கப்பட்டனர். இன்றோ இந்தத்தொகை 2945 ஆக உயர்வு கண்டிருக்கிறது.

இதன் காரணமாக மாரடைப்பு, உடலின் பல பாகங்களில் உண்டாகும் இரத்தத் தடை, பார்வைக்குறைவு, சிறுநீரகப் பாதிப்பு போன்ற பல்வேறு உயிராபத்து விளைவிக்கும் வியாதிகளை இளம் வயதிலேயே மக்கள் எதிர்கொள்ள நேரிடுவதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது. இதற்கு உணவுப் பழக்கம், பரம்பரை போன்ற காரணங்கள் பின்னணி வகிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது டென்மார்க்கில் 2.20.000 பேர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

டென்மார்க்கில் தற்போதய புள்ளி விவரங்களின்படி நீரிழிவு நோயின் தாக்கமுடையவர்கள் வயது 50 - 59 இடையில். 58 வீதம், 60 - 69 இடையில். 98 வீதம், 70 - 79 இடையில். 38 வீதம், 80 வயதுக்கு மேல், 42 வீதம். பீ.எம்.ஐ என்னும் அளவு முறையில் 30 மேற்படாமல் பார்ப்பது அவசியம் என்றும் அறிவுறுத்தியுள்ளது இந்த ஆய்வு.




உங்களுக்கெனவே காத்திருக்கும்
ஓர் உலகம்
Hutch 3G

தடையற்ற அதிவேக இன்டர்நெட் அனுபவத்தின் மூலம் புதிய உலகத்தைக் கண்டு கொள்ள இன்றே Hutch 3G யிற்கு மாறிவிடுங்கள்
நாடு முழுவதும் 21 Mbps வரை வேகம் கொண்ட ஒரே வலையமைப்பு

அழையுங்கள் 1788
www.hutch.lk
HUTCh



Haier
சிறந்த சலுகைகளை
குடும்பத்தோடு கொண்டாடுங்கள்

சிறந்த தொழில்நுட்பங்களைக் கொண்ட ஹையர் தொலைக்காட்சி வகைகளை
இதோ தள்ளுபடி விலைகளில் அபான்ஸ் வழங்குகின்றது.
பண்டிகைக்காலத்தை குடும்பத்தோடு கொண்டாடிமகிழுங்கள்



19C430
- HD
- USB
- PC Input
- HDMI x 2
- 3W + 3W ஸ்பீக்கர்

ரு.19,990



24T1000
- முழு HD
- USB
- PC Input
- HDMI x 2
- 5W + 5W ஸ்பீக்கர்

ரு.32,990



22C430
- HD
- USB
- PC Input
- 3W + 3W ஸ்பீக்கர்

ரு.25,990



32T1000
- முழு HD
- USB
- PC Input
- HDMI x 3

ரு.59,990

அழையுங்கள் 4520989
நாடெங்கிலுமுள்ள Abans / Abans Elite / JVC / Haier / A-Z Electronics (Pvt) Ltd. காட்சியறைகளில் கிடைக்கும்
Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவைக்காயின் மருத்துவக் குணங்கள்

காடுகளிலும், புதர்களிலும் வீணாகக் கிடக்கும் இடங்களிலும் தானாக வளருவது தான் கோவைச் செடி. கோவைக்காய் கொடி வகையை சேர்ந்தது. கோவைச் செடி முழுவதும் மருத்துவகுணம் கொண்டது. காய், கனிகள், இலைகள், தண்டு, வேர் போன்றவை மருத்துவ பயன் உடையவை. இது வெள்ளரிக்காய் குடும்பத்தை சேர்ந்தது. எளிமையான கோவைக்காய் இந்தியாவில் எங்கும் கிடைக்கும்.

கோவைக்காயின் கனிகள் செந்நிற முடையவை. இவற்றை மென்றால்






நாக்கில் உள்ள புண்கள் ஆறும். இலைகள், தண்டு, வேர் ஆகிய பாகங்களில் இருந்து பிழிந்து எடுக்கப்பட்ட சாறு நீரிழிவு நோய், வீங்கிய சுரப்பிகள், தோல்நோய்கள் ஆகியவற்றை குணப்படுத்த உதவும்.

### நீரிழிவை கட்டுப்படுத்தும்

கோவைக்காய் பழங்காலத்திலிருந்தே நீரிழிவு நோய் மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் காய்கறிகளில் ஒன்று. தீவிரமில்லாத நீரிழிவு வியாதிக்கு கோவைக்காய் நல்ல பலனை அளிக்கும். கோவைக்காய் சாறு எடுத்துக் கொள்வதால் பக்க விளைவுகளும் அதிகம் ஏற்படுவதில்லை.

பல வருடங்களுக்கு முன்பே, அமெரிக்க ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவர் நடத்திய ஆய்வில் கோவைக்காய் நீரிழிவு வியாதியை குறைக்கும் குணமுடையது என்பது கண்டறியப்பட்டது. நீரிழிவு நோயாளிகளின் இரத்தத்தில் சேரும் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும் என்று பெங்களூரில் நடத்திய ஆராய்ச்சியிலும் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. பரம்பரை காரணமாக நீரிழிவு நோய் இருப்பவர்கள் கோவைக்காயை 35 வயது முதலே உணவில் சேர்த்துக் கொண்டால் நல்லது. நீரிழிவு நோய் வராமல் தடுக்கலாம்.

### வாய்ப்புண் குணமாகும்

கோவைக்காய் பச்சடி சிறந்த மருத்துவ குணமுள்ள உணவு. சிறு சிறு துண்டுகளாக நறுக்கிய கோவைக்காயுடன் மோர், மிளகுப்பொடி, சீரகப் பொடி, இஞ்சி சிறிது சேர்த்து தேவையான அளவு உப்பு கலந்து விட்டால் அவ்வளவுதான் கோவைக்காய் பச்சடி தயார். இதனை வாரம் இரண்டு நாள் பகல் உணவில் சேர்த்தால் வாய்ப்புண் குணமாகும். பச்சையாகவே கோவைக்காயை மென்று துப்பி விட்டாலே வாய்ப்புண் ஆறிடும். வயிற்றுப்புண் இருப்பவர்கள் வாரம் இரண்டு நாள் கோவைக்காயை சேர்த்துக் கொள்ளலாம். ஒரே ஒரு கோவைக்காயை எடுத்து மோருடன் அரைத்து குடித்தாலும் மேற்சொன்ன பலன்களை பெறலாம்.

### தோல் நோய்களை குணமாக்கும்

இலை மற்றும் தண்டு கபத்தை வெளியேற்றும், வலி குறைக்கும். இலை, தண்டு, கஷாயம் மார்புச்சளி, சுவாசக் குழாய் அடைப்பு இவற்றுக்கு நல்ல மருந்தாகும். இலைகளை வெண்ணெய்யுடன் கலந்து உண்டால் புண்கள், பிற தோல் நோய்களை குணப்படுத்த உதவும்.

கோவைப்பழம் கபத்தை உண்டாக்கும். சீக்கிரத்தில் ஜீரணமாகாது. ஆனால் மூச்சு இரைத்தல், வாந்தி, வாய்வு ரத்த சோகை, பித்தம், காமாலை முதலான பிரச்சினைகளை குணப்படுத்தும். கடிகளால் ஏற்பட்ட காயங்களின் மீது கோவை இலையை அரைத்து வைத்துக் கட்டினால் புண் விரைவில் ஆறும்.

### வயிற்றுப் பூச்சிகளை கட்டுப்படுத்தும்

கோவைக்காய் பித்தம், ரத்தப் பெருக்கு, வாய்வு, வயிற்றில் உள்ள பூச்சி ஆகியவற்றுக்கெல்லாம் முடிவு கட்டும் நல்ல மருந்தாகும். கோவை இலைச் சாறு, பித்தம், ஷயம், மூல நோய் ஆகியவற்றுக்கு மருந்தாகப் பயன்படும். கரம் மசாலா அல்லது உஷ்ணத்தைத் தரும் மருந்துகள் கோவைக்காயால் ஏற்படும் தீமைகளுக்கு நல்ல மாற்றாகும்.

மலிவான விலைக்கு கிடைக்கும் கோவைக்காயை வாங்கி சமைத்து உண்டால் அனைத்து நோய்களையும் குணப்படுத்தி விடலாம்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org